கலைமன்றம்
7-AUG 1956
4
S.

தேங்கி வழியும் வெள்ளம்—பொங்கி மகிழும் உள்ளம்

பிரசுரம்

ஆர். எஸ். சுப்பையா



கலைமன்றம்

மலர் 2 — மே 28 '55 — இதழ் 22

பொருளடக்கம்

ஐரோப்பாவிலே இருபிரிவுகள்	2
உலகின் கண்ணீர் (தலையங்கம்)	3
கண்ணோட்டம்	5
பாரதிதாசன் கவிதை அரங்கம்	8
காதலும், கண்ணீரும்	10
பொய்யே வாழ்க!	17
போர் மறவன்	20
கடுங்காவல்	25
நகைச் சுவை	35
பனித்துளி	40
ஏன்......?	43
வெட்டும் ஒட்டும்	45
பசி	47
பு கப் படக் கலைப்பகுதி	52
விவாத மேடை	53
குருவிக் கூடு	58
காதல் உள்ளம்	63
எரிமலை	70
மலர்க்காடு	72
திரை உலகம்	74
நமது செய்திகள்	77
கேளுங்கள், கொடுக்கப்படும்	79

இதில் வரும் கதை, கவிதை, நாடகம்
யாவும் கற்பனையே.

ஐரோப்பாவிலே இருபிரிவுகள்

கம்யூனிஸ்ட் நாடுகள். அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள்.

நேசநாடுகளுடன் சேர்ந்துள்ள நாடுகள்.

⊕ முக்கிய கம்யூனிஸ்ட் தளங்கள் ✪ முக்கிய மேற்கத்திய தளங்கள்

விருப்புடன் வருக என வாழ்த்துபவர் வாழ்த்தட்டும்.
வெறுப்புடன் வேண்டாமென்போர் விருந்துண்டு வாழட்டும்.

கலைமன்றம்

சென்னை | 28—5—55 | சனி

உலகின் கண்ணீர்

‘அகிலமெல்லாம் கட்டியாளினும் ஆசைக்கோர் அளவில்லை’ என்னும் பழமை மொழி யாரோ வொரு வேதாந்தியின் வாய்மொழியாக இருப்பினும் அதனுட் பொதிந்துள்ள உண்மையை நாம் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. ஒருவனின் ஆசை சுயநலமே பெரிதென மித மிஞ்சி வளரும் போது, மாற்றானின் ஆசை—அன்றாட வாழ்வு—அனைத்தும் பாதிக்கப் படுவதால் தான் பேராசை கூடாதெனும் பொன் மொழியும் பிறந்திருக்க வேண்டும். ஆசையும் பாசமும் இன்றி எவரும் உலகில் வாழவும் இயலாது என்பதும் உண்மைதான். ஆனால் சுய நல ஆசையின் வளர்ச்சி, பிறர் நலத்தின் தளர்ச்சிக்கும் வரட்சிக்கும் வழிகோலுதல் கூடாது என்பதுதான் உலகநீதி எனும் அழியா நூல் போதிக்கும் ஆதிப் பாடம்.

இவ் உயரிய எண்ணம் சாதாரண மனிதனுக்கு இல்லாது போவதுகூட ஆச்சரியமல்ல. உலகப் பெரும் ‘தலைகளு’க்கும் இல்லையே என்பதுதான். இப்பெரு ‘மண்டையின’ருக்குப் பிடித்துள்ள பேராசைப் பெருவியாதி மிக மிகக் கொடியதாகும். இவ் வியாதியினால் விளையும் பலாபலன்களை, அப்பெரும் தலைகள்—அவர்களைச் சார்ந்தோர்—அணுகி வாழ்வோர்—மட்டும் அனுபவிப்பதில்லை.

இவர்களின் விபரீத ஆசைகள் விளையாட ஆரம்பித்தால், உலகிலுள்ள உயரினங்கள் அத்தனையுமே வீழ்ந்து மடிகின்றன— வேதனைப் படுகின்றனர். வீடிழந்தோர், நாடிழந்தோர், பெண்டு பிள்ளைகளைப் பறிகொடுத்தோர், ஊனம் அடைந்தோர், உடைமைகள் யாவும் பறி கொடுத்துப் பராரி யானோர்—என்று எழுதுவதானால் அப் பரிதாபப் பட்டியலைப் பார்க்க—படிக்க மனிதப் பண்பு இடந்தரா, மாறாக இகழும். ஒரு சிலரின் சுயநல ஆசையின் சுழல் தான்—சூதாட்டம்தான் கடந்த இரு பெரும் போர்கள், உலகிலே.

இரண்டாம் உலகப் போர் முடிவுற்று சில ஆண்டுகள் ஆவதற்கு முன்பே மீண்டும் சீற்றம்—சிறுநரி வேலை—ஆரம்பமாகி விட்டன.

ஏகாதிபத்திய வெறி கொண்டு இவ் அகிலமெல்லாம் கட்டியாள ஆசை கொள்வோர் மிகச் சிலர்—ஆனால் இவர்களின் ஆசை வெற்றி பெறுவதற்காக வேதனைக்கு இலக்காவோர் மிக மிகப் பலர். இதனை உலக மக்கள் யாவரும் நன் குணர்தல் வேண்டும். மற்றொரு மாபெரும் போருக்காக உலகம் இரு பெரும் முனைகளாகப் பிரிக்கப்பட்டு 'மூஸ்தீபு'க்ள் மும்முரமாக நடை பெறுவதை நாம் காணலாம்.

மேற்கு ஜெர்மனியை உள்ளடக்கி வட அட்லாண்டிக் ஒப்பந்தமொன்றை அமெரிக்கச் சார்புடைய் நாடுகள் உருவாக்கிக் கொண்டதற்கு எதிர் அணியாக சோவியத் சார்புடைய நாடுகள் ஏழும் வார்ஸாவில் ஒன்றுகக் கூடி இராணுவக் கூட்டு ஒப்பந்த மொன்றைத் தீட்டியிருக்கின்றனர். இவ் ஒப்பந்தம் உருவான மாநாட்டிற்கு ரஷ்ய முதல்வர் புல்கானினே தலைமை ஏற்றூர். இது வட அட்லாண்டிக் ஒப்பந்தத்திற்கு விடும் சவால் என்றே அமெரிக்கா கருதுகிறது.

இவ்வாறு உலகை இரண்டாக்கி உயிர்ப்பலி வேண்டும் ஆணவக்காரர்கள் எவராக இருப்பினும் அவர்கள் வருங்காலத்தில் வாழ்ந்துவிடப் போவதில்லை. ஆணவக்காரர்கள் எப்போதுமே வாழ்ந்ததாக வரலாற்றிலேயுமில்லை. அவ்வப்போது வையகம் தந்த வரலாற்று நிதியை மறந்து மீண்டுமொரு உலகப் போரைத் தூண்டுவது—துவக்கி வைப்பது—தொல்லைகள் தருவது, அநீதி—அக்கிரமம்—அடாதது என்று ஏகாதிபத்தியவாதிகட்கு எச்சரிக்கிறோம். சமாதானம் நாடுவோரின் சிந்தனை—சக்தி—செயல் அத்தனையும் ஒன்று திரண்டு, உலகின் கண்ணீரைத் துடைக்க முன் வருமாறு வேண்டுகிறோம்.

'ஆயுதங்கள் பரிகரிப்பார், அமைதி காப்பார்,

அவரவர் தம் வீடு நகர் நாடு காக்க' விரைந்து வாரீர்.

'அன்பால் அவனி யெல்லாம் ஆளலாம்' என்றார்—'ஒரு கன்னத்தில் அடித்தால், மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு' என்று போதனை புரிந்தார்—ஏசு. அப்படிப்பட்ட புனிதமான மனிதரைத் தேவகுமாரனாக ஏற்றுள்ள ஞான மேய்ப்பர்கள் தொகை ஏராளம். அவர்களின் அடிவருடிகளோ இன்னு மதிகம் உலகிலே. அத்தகையோரின் திருவிளையாடல்களைப்பற்றி மேல்நாட்டு சரித்திரங்களிலே படித்திருக்கிறேன். இத் திருவிளையாடல் எனும் தொத்து நோய் இந்து பக்தகோடிகளுக்கும் பரமனுக்கும் மாத்திரமே 'சோல் ரைட்ஸ்' என்று யாராவது நினைத்திருந்தால் அது சுத்தத்தவறு. நமது கிறிஸ்துவ போதகர்களும் திடீர்த்திருவிளையாடல் பேர்வழிகள்தான். இல்லையேல் மார்ட்டின் லூதர் தோன்றியிருக்க முடியுமா? அல்லது தென் கோடியிலிருந்து கடந்த வாரம் **'வேகுதே வைந்த நீ'** என்ற தீனக்குரல்தான் கிளம்பியிருக்குமா? 'தென் கோடியில் தீயா?' என்று அவசரக் கேள்வி எழுப்பாதீர்கள். சற்றுப் பொறுங்கள். அந்தம் முதல் சொல்லிவிடுகிறேன்.

பொதுவாகக் கத்தோலிக்க மதம் நகரங்களைப் பார்க்கிலும், கிராமப் பகுதிகளில்தான் அதிகமாகப் பரவியுள்ளது, அதுவும் நெல்லை மாவட்டத்தில் மிகவும் அதிகம். "கல்வி வாசனை வீசாத பாமரமக்கள் பெருவாரியாக வாழ்கிற இடங்களாகப் பார்த்து, நமது மதக் கடையை வைத்து வியாபாரம் செய்தால்தான் இலாபம் நிறையக் கிட்டும்" என்று **வத்திக்கான்** வட்டாரம் ஆர்டர் போட்டாலும் போட்டிருக்கலாம். அதைப் பற்றி நமக்கேன் வம்பு!

பாமரர்கள் பெருகிக்கிடந்த பட்டிக் காடுகளில் இப் **'புண்யவாளர்கள்'** புகுந்து, பலகாலமாக மேய்ந்து வருகிறார்கள் என்பதை விரிவாக எழுதி ஆயிரக்கணக்கான 'ரஸ்புடீன்'களை உங்கட்கு அறிமுகப்படுத்தி, என் பேனாவை அசுத்தப் படுத்திக் கொள்ள எனது பரிசுத்தம் இடந் தரவில்லை.

இவ்வாறு கத்தோலிக்க மதக் கடை நிறுவிய முக்கிய இடங்களுள் **வடக்கன்குளம்** என்ற ஊரும் ஒன்று. தூத்துக்குடி மேற்றிராசனத்திற்கே அதிமுக்கிய இடமாகிய இந்த 'அப்பாவி' ஊர் நெல்லை மாவட்டத்தி லுள்ளது. மதவாதிகளின் வேட்டைக்காடாகவும், ஒண்ட வந்தவர்களின் சொர்க்கமாகவும்' நாடோடிகளின் விளை நிலமாகவும் பயன்படுத்தப்பட்ட வடக்கன் குளத்தை 'அப்பாவி ஊர்' என்று எழுதுவது தவறல்ல. ஒருவேளை

'நீ எழுதியது தவறு' என்று யாராவது ஒரு நக்கீரர் என்மீது குற்றப் பத்திரிகை வாசிப்பாரானால், அதற்காக நடுங்கி, பாவசங்கீர்த்தனத் தொட்டியிலே முட்டி தேய முழங்கால் நின்று ஜெபிக்க நான் தயாராக இல்லை. என்பக்கம் கனல்கக்கும் பார்வையைச் செலுத்துவதற்கு முன்பு, வடக்கன்குளம் வரலாற்றிலே ரத்தக்கறை படிந்திருப்பதை உற்றுப் பாருங்கள்.

மாதா கோவிலில் சாதிப்பேய் சதிராடிக் கொக்கரிக்க—உரிமைக் குரலை மதிக்காமல் ஞானத் தந்தையர் எக்களிக்க—வாழாமல் வாழ்ந்தார்கள் வடக்கன்குளம் ஞான மக்கள். மனித உரிமையைப் பெறப் போராடினார்கள்—கிடைத்ததோ **கண்ணீர்ப் புகைக்குண்டு.** தாய்மார்கள் சிந்தியது **கண்ணீர்த் துளிகள்**—மதத்தின் மமதையை எதிர்த்துச சாத்வீகப்போர் நடத்திய தொண்டர்கள் கொட்டிய **ரத்தத்துளிகள்**—பாதிரிகளின் மனதை இரங்க வைக்கவில்லை—கருணை கிடைக்கவில்லை. மதபிரஷ்டம் செய்தார்கள். பொய் கேஸ்கள் ஜோடித்து அலைத்தனர். முடிவாக **'கல்விக் கூடமே எங்கள் மதம்'** என்று கூறி நேரு பள்ளியைப் பண்படுத்திக் கொண்டார்கள் அந்த நொந்த மனத்தினர். பள்ளியைப் பேணிப் போற்றி வளர்ப்பதே இனி எங்கள் பணி—தனிக்கலை—வாழ்வு—எல்லாம் என்று ஒதுங்கி வாழ்ந்தனர். அப்போதும் **'மதம்'** கொண்டோர் விடவில்லை, ஒதுங்க, ஒதுங்க விரட்டியடித்தனர்; மனம் நோக நோகத் துன்புறுத்தினர்.

கண்ணைப் பறிக்கும் மின்னல்—கொட்டும் மழை—கடும் புயல்—இவற்றினூடே கால் கடுக்க நெடுந்தூரம் நடந்துவந்தவன், (அதுவும் மடியில் பெரும் பொருளோடு) ஒரு மடத்தினுள் அண்டி நிற்பதுபோல மனம் வெதும்பியோர் தங்கள் மகத்தான பொருளான பள்ளியையும்---மானாபிமானத்தையும் பாதுகாத்துக்கொள்ள இனி ஒரே வழி உண்டென்றால் அது இந்து மத நுழைவுதான் என்று தீர்மானித்தார்களாம். இத் தீர்மானத்தின் தராதரத்தைப்பற்றி விமர்சனம்செய்ய நான் தயாராக இல்லை. எனக்குத்தான் மதம் கிடையாதே. ஆகவே நான் கேட்பது இதுதான்; **கத்தோலிக்க மதம் பிடிக்காமல் 'பாடசாலையே எங்கள் மதம்' என்ற பண்புள்ள மனதுடன் இருந்தவர்களை, மேலும் மேலும் புண்படுத்தி அறிவாலயத்தைக் காப்பாற்ற இன்னொரு மதத்தின் துணை கண்டிப்பாகத் தேவை** என்று கருதச்செய்து, ஏறக்குறைய நானூறுபேர்களை இந்துக்களாக்கியது யாருடைய குற்றம் என்று சற்று யோசியுங்கள். இவர்கள் இந்துக்களாகவில்லை, ஆக்கப்பட்டார்கள் என்பதுதான் உண்மை. இப்படிப் **'பயங்கர மாற்றத்தைச்'** சிருஷ்டித்தது மட்டுமல்லாமல் மனம்வாடிக்கிடந்தவர்களின் அண்டப்போன இடத்திலேயும் தீ வைத்துவிட்டார்களாம், **ஏசுராஜா வருவார்—இறுதி விசாரணை செய்வார்**—என்று ஞானோபதேசம் செய்கிற பரம பிதாவின் புண்ணிய புத்திரர்கள்.

திருக்குடும்ப தேவாலயத்தின் பரமண்டல மந்திர இரைச்சலைக் கேட்டுக் கேட்டுச் சலித்துப் போனவர்கள் நல்ல தமிழிசையைக் கேட்கலாம் என்று கருதியோ அல்லது பக்திப் பரவசம் பெருகியோ

வைக்காததற்கு மன்னிக்கவும்" என்றாள் ரமணி.

"அதனாலென்ன பரவா யில்லை!" என்றார் அவர்.

ரமணி சொன்னதைப் போல் வடிவேலு கம்பீரமாகத்தான் இருந்தார்.

ரமணி அவர் பக்கத்தில் நின்ற போது, இருவரும் சரியான ஜோடிதான் (கல்யாணம் நடந்தால்...!) என்று நினைத்துக் கொண்டேன்.

சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு விடிவேலு எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு போனார். அதற்குப் பிறகு அவர் எங்கள் வீட்டிற்கு வரத் தொடங்கினார்.

ரமணியும் ஓரிரண்டு தடவை அவர் வீட்டுக்கும் போய் வந்தாள்.

பழக்கம் நெருங்கியது.

ஒருநாள் நாங்கள் வழக்கம் போல் இரவு ஏழு மணிக்குப் படிக்க உட்கார்ந்தோம்.

"சாந்தா 'காதல்' எல்லோருடைய வாழ்க்கையிலும் திருப்தியை உண்டாககுகிறதா?" என்றாள் ரமணி திடீரென்று!

"காதல் என்பதைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாதே அக்கா...நீ என்னிடம் இதைக் கேட்கிறாயே! என்ன விஷயம்?" என்றேன்.

"வடிவேலு என்னைக் காதலிக்கிறாராம்!" என்றாள்.

"இதை அவராக உன்னிடம் சொன்னாரா?" என்றேன்.

"ஆம்! சீக்கிரம் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்வதாகவும் சொன்னார்!" என்றாள்.

"அவரே எல்லா ஏற்பாட்டையும் ஏற்று நடத்தும்போது நீ பேசாமல் இரேன்!" என்றேன்.

அவள் பேசாமல்தான் இருந்தாள் என்பது எனக்குத் தெரியாதா என்ன?

"எனக்கு ஒரு சந்தேகம்!" என்றேன்.

"என்ன?" என்றாள்.

"நீயும் அவரைக் காதலிக்கிறாயோ?" என்று கேட்டேன்.

"அப்படித்தான் தோன்றுகிறது—உள்ளத்தில் அன்பு உதயமாவதைத்தான் காதல் என்கிறார்கள்" என்றாள்.

* * *

"என்னதான் படித்தாலும், பெண்கள் இப்படி வயதுப் பையனுடன் சுற்றக் கூடாதப்பா!"

"அடக்கம் வேண்டாமா?"

"பிறகு ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசமே யிருக்காதே!"

இப்படி அக்கம் பக்கத்தவர்கள் பேசிக்கொண்டார்கள்.

உலகம் பேசத்தானே செய்யும்?

உலகத்தை எதிர்த்தவன் எவன் உருப்படியாக வாழ்ந்தான்?

அம்மா சொன்னாள்:—

"ரமணி உன் சிநேகம் கல்லூரியோடு இருக்கக் கூடாதா? உன்னால் நாங்கள் கூடப்பேச்சுக்

கேட்க வேண்டியிருக்கிறதே!" என்று அங்கலாய்த்தாள்.

மானத்திற்குப் பயப்பட்டு வாழும் குடும்பம் கவலைப்படாமல் இருக்க முடியுமா?

"நான் அவரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன் அம்மா!" என்றாள் ரமணி.

"அது நடக்கும்போது பார்த்துக் கொள்ளலாம். இப்போது நாலு பேர் பேசாதவண்ணம் சற்று அடக்கமாகயிரு" என்று புத்தி சொன்னாள் அம்மா?

"உன் அக்கா ஏன் இப்படி அந்தப் பையனுடன் சுற்றுகிறாள்?" என்று என்னிடம் கூடப் பலர் கேட்டனர்.

"இருவரும் கணவனும் மனைவியும்தானே? சேர்ந்து சுற்றினால் என்ன?" என்றேன்.

"அந்தப் பையனா உன் அக்காளின் கணவன்? அவன் எங்கே உங்கள் அக்கா எங்கே?" என்றார்கள்.

"ஏன்?" என்றேன்.

"பணத்தில் புரளும் அவன் தகப்பனார் ஒரு குமாஸ்தா வீட்டிலா பெண் எடுப்பார்?"

"பணத்திற்கு இங்கு வேலையில்லை. அவர்கள் ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்கள்!" என்றேன்.

"போடி பைத்தியக்காரி...... காதலாம் காதல்......பணத்திற்குத் தரும் மதிப்பு......அதற்குத் தருவார்களா?"

நான் மேலே பேச முடியாமல் வந்து விடுவேன்.

"அவன் எங்கே......அந்தப் பெண்ணைக் கொடுத்து விட்டுப் போய்விடப் போகிறான்! அதற்குத்தான் இந்த வேலையெல்லாம்!" என்று பலவிதமாகச் சொன்னார்கள்.

எனக்குப் பொறுக்கவில்லை.

அக்காவிடம் சொன்னேன்:—

"வடிவேலுவைச் சீக்கிரம் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யச் சொல்...அவர் எல்லாம் செய்து முடிக்கும்வரை நீ அவருடன் சேர்ந்து கொண்டு வெளியில் கிளம்பாதே!" என்றேன். கண்டிப்பான குரலில் நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த அம்மாவும் அதை ஆமோதித்தாள்.

"ஊரார் பேசிக் கொள்வதைக் கேட்டால்......தூக்குப் போட்டுக் கொள்ளலாம் போலிருக்கிறது!" என்றேன்.

அக்காள் பதில் பேசவில்லை.

என் பேச்சு அவள் மனதில் பதிந்து விட்டதாகத் தெரிந்தது எனக்கு.

அதற்குப் பிறகு சில நாட்கள் வடிவேலு பேச்சையே காணோம்!

"என்ன விசேஷம்?" என்று அவளிடம் கேட்டபோதுதான்... அவள் எல்லா விஷயத்தையும் சொன்னாள்.

"கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்து விட்டு உன்னிடம் வருகிறேன்" என்று சொல்லி விட்டுப் போனாராம் வடிவேலு.

எனக்கு மனதில் நம்பிக்கையிருந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. நாங்கள் ஹாலில் உட்கார்ந்த

வாறு ஏதோ பேசிக் கொண்டிருந்தோம். வாசலில் கார் நிற்கும் சப்தம் கேட்டது.

அந்தத் தொடர்ந்து வடிவேலுவும், தோற்றத்தில் ஏறக்குறைய அவரைப் போலவே இருந்த ஒரு கனவானும், அவருக்குப் பின்னால் ஒரு அம்மாவும் உள்ளே வந்தார்கள். அப்பா தன் இருக்கையை விட்டெழுந்து அவர்களை வரவேற்றார்.

"இவர் என் அப்பா இது என் அம்மா!" என்று வடிவேலு அவர்களை எங்களுக்கெல்லாம் அறிமுகப்படுத்தி வைத்தார்.

வடிவேலுவின் அப்பா பேச்சை ஆரம்பித்தார்.

"உங்களைப் பற்றி வடிவேலு அடிக்கடிச் சொல்லியிருக்கிறான். உங்கள் மகள் இவனோடு காலேஜில் படிக்கிறாளாமே? நாங்கள் இவனுக்குச் சீக்கிரம் கல்யாணம் செய்ய வேண்டுமென்றுதான் நினைத்தோம்—ஒரே பிள்ளை பாருங்கள்......அதனால் தான். இவனுக்கு உங்கள் பெண்ணைத் தான் பிடித்திருக்கிறதாம். இருவரும் 'லவ்' பண்ணுகிறார்களாமே.........(அக்கா இதைச் சொன்னபோது உள்ளே எழுந்து ஓடிவிட்டாள்).......எங்களுக்கு அவனை மீறி ஒன்றுமில்லை. அவனுக்குப் பிடித்திருந்தால் சரிதான். கல்யாணத்தை நடத்திவிடலாம்'" என்றார்.

"அதற்கென்ன செய்து விட்டால் போகிறது!" என்றார் அப்பா.

மகிழ்ச்சி அவர் முகத்தில் தாண்டவமாடியது.

"எல்லாவற்றையும் நான் கவனித்துக் கொள்ளுகிறேன் நீங்கள் பெண்ணைக் கொடுத்தால் போதுமானது" என்றார் வடிவேலுவின் அப்பா!

பணக்காரருக்கு எவ்வளவு நல்ல குணம் என்று நான் நினைத்தேன்.

ரமணி உண்மையில் அதிர்ஷ்டசாலி! இவள்தானே இனி அந்த வீட்டு எஜமானி?

அன்று எங்கள் உள்ளத்தில் மகிழ்ச்சிக் கரை புரண்டு ஓடியது. வடிவேலுவையும் அவர் குடும்பத்தையும் பற்றிப் பேசித் தீர்த்தோம்.

அப்பாவின் அந்தஸ்துக்குத் தக்கவாறு ஏதாவது செய்ய வேண்டாமா? சிலர் சும்மாயிருந்து விடு என்றார்கள். அப்பா அப்படியிருக்கவில்லை. கடன் வாங்கினர்.

"எனது மூத்த மகளுக்குக் கல்யாணம். நானும் ஏதாவது செய்து அவளைத் திருப்திபடுத்த வேண்டாமா?" எங்களுக்கு அவர் சொன்னது சரியாகத்தான் பட்

தேவை

கீழ்க்கண்ட இடங்களுக்கு, "கலைமன்றம்" "கரும்பு" "கலை அரங்கம்" ஆகிய பத்திரிகைகளை விற்பனை செய்ய டிபாஸ்ட் கட்டக் கூடிய ஏஜண்டு தேவை:

ஆண்டியூர்
பாலராமபுரம்
எண்கண்
கருங்காபள்ளி
குழித்தலை
கோம்பை
கோழிக்கோடு
மன்னார்குடி

விபரங்கட்கு:

மானேஜர்

கலைமன்றம், சென்னை—1.

டது. கல்யாணம் விமரிசையாக எல்லோரும், மூக்கின்மேல் விரல் வைக்கும் அளவுக்கு நடந்தது.

அக்காளையும் கூட்டிக்கொண்டு போய் விட்டார்கள். இனி அவளுக்குப் படிப்பெதற்கு?

வீட்டுவாசலில் நானும் அப்பா அம்மாவோடு நின்றபடி அக்காளையும், அத்தானையும் வழி அனுப்பிய காட்சியை என்னல் மறக்கவே முடியாது.

* * *

3

"சாந்தா! அங்கு என்ன செய்கிறாய்? சாப்பிட வாயேன்!" என்று அம்மா கூப்பிட்டபோதுதான் நான் உணர்வு

பெற்றேன். அக்காவின் படத்தைப்பார்த்தவாறேநான்சிந்தனையில்ஆழ்ந்து விட்டேன்என்பதை அறிந்தேன்.

நான் சாப்பிடப் புறப்பட்டேன்.

* * *

மறுநாள் இது நாள்வரை எங்களை எல்லாம் லட்சியம் செய்யாத என் தாய் மாமனிடமிருந்து கடிதம் வந்தது. கடிதம் என் தாயாரின் பேருக்கு அதில் அவர் எழுதியிருந்தார்.

அன்புள்ள தங்கைக்கு,

ஆசி. எனக்கு ஏற்பட்ட பல தொல்லைகளின்காரணமாக உனக்



ாசம்

ம் : தாகூர்
ிழ் : ஆ.நா. பொன்னிறையவன்

1

சசிகலா தன் அறையில் அமைதியின்றி அங்குமிங்கும் ுலேந்தாள். தன் பெட்டியில் வைக் ் பட்டிருந்த ஒரு போட்டோ வ.யும், சில கடிதங்களேயும் டுத்து வந்து அவைகளே ப ார்த்தபடியே இருந்தாள். அவள் ண்கள்தான் அக்கடிதத்தின் மீது ருந்தனவே ஒழிய அவள் மன மல்லாம் வெகு தூரத்திற்கு அப் ல் அஸ்ஸாம் தேயிலேத் தோட் த்தையும், அத் தோட்டத்திற்கு ழைக்கச் சென்ற தன் கணவன் யபாலேயுமே சுற்றி வந்தது. கழிவதே அவளுக்குப் பாடாக விருந்தது.

சசியின் தகப்பனர் பணக்காரர். ஆகவே ஜெயபாலுக்குத் தன் எதிர் கால வாழ்வுக்காக என்று ஒரு வேலே தேடி ஜீவனம் செய்யவேண டும் என்ற நிலே ஏற்படவில்லே. சசி—ஜெயபால் தம்பதிகளுக்குக் கொடுத்துதவ சசியின் தகப்பஞ ரிடம நிறைய பொருள் இருந்தது. அவர்கள் வாழ்க்கையும் யாதொரு சலனமுமின்றி அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது.

சசியின் தகப்பனருக்கு முதிய வயதில் ஓர் ஆண் குழந்தை பிற ந்தது. அவள் பெற்ருேர்க்குப் பை னிடம் அளவிட முடியா அன்பு. மட்டற்ற மகிழ்ச்சி. அவர்கள்

- உண்மை என்ற தத்துவம் இருக்கிறதே அது எப்போதும் பொய்யில்தான் புதைந்துகிடக்கிறது.
- பொய் பேசாத ஒரு மனிதன் உண்டா வெனில் 'இல்லை' என்ற பதிலை ஓங்கி அடிக்கலாம்.
- அந்தப் பொய் எத்தகைய நிலைகளிலெல்லாம் மனிதனிடம் விசித்திரமாக விளையாடுகிறது என்பதை விவரிப்பதே........

பொய்யே வாழ்க!

செ.அமலன்

வாய்மையைக் காப்பாற்ற வேண்டி நாடு நகரிழந்து, மனைவி மகனைப் பிரிந்து, சுடலைக் காவலனாகி, முடிவில் சிறப்பெய்தினன் அரிச்சந்திர மன்னன். இந்தப் புராணக் கதையை அடிப்படையாகக் கொண்டே "நான் பொய்யே சொல்வதில்லை" என்று சத்திய சந்தன்போலச் சாதிக்கும் ஆசாமியை 'அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீடுதானே இவருக்கு?' என்று இடித்துரைக்கிறோம்.

'நெஞ்சாரப் பொய்தனைச் சொல்லவேண்டாம்' 'பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடையாது' 'பொய்சொல்லி வாழ்ந் தாருமில்லை, மெய் சொல்லிக் கெட்டோருமில்லை...' இவை ஆன்றோர் வாக்கு.

எனினும் நமது அன்றாட வாழ்க்கையில் நேரிடும் சிக்கல்களைத் தவிர்க்கும் சமயசஞ்சீவியாய்ப் பயன்படுவது இந்தப் 'பொய்' தான் என்றால் அது பொய்யல்ல.

உதாரணமாக 'பட்டணத்திலிருந்து கராச்சிப்புடவை வாங்கி வருவதாகச் சொன்னீர்களே! எங்கே? என்று கேட்டு 'கண்ணீர்' என்னும் கொடிய படைக்கலனை நிர்த்தாட்சண்யமாய்ப் பிரயோகிக்கும் மனைவியின் போர்க்கோலத்தை 'அடடா மறந்தே போய்விட்டது' என்றுசொல்லி 'பொய்'யென்னும் கேடயத்தைக் கொண்டு சமாளிக்கிறோம். கல்லுப் போலிருக்கும் நமது பாட்டியை மூன்றாவது முறையாகச் சாகடித்து (உண்மையில் அல்ல) ஆபீசில் 'ரஜா' பெற்றுக்கொள்கிறோம். அரட்டை அடிக்கவரும் நண்பன் தரவிருக்கும் தலைவேதனையிலிருந்து தப்பித்துக்கொள்ள "அப்பா வீட்டிலில்லை என்று சொல்லிவிடு" என்று நம் சின்னப் பையனிடம் சொல்லி அனுப்புகிறோம். (அவன் 'அப்பா வீட்டிலில்லை என்று சொல்லிவிடச் சொன்னாங்க' என்று உளறி, நமது

குட்டு வெளிப்பட்டுப்போவதும் உண்டு.)

'ஒரு ஐந்து ரூபாய் இருந்தால் கைமாற்றுக த் தருகிறீங்களா?' என்று வாயெல்லாம் பல்லாகக் கெஞ்சும் மாமூல் கடன்காரரிடம் 'என் கையில் காலணு கிடையாது' என்று 'கெஸர்'கச் சொல்லி அவரை ஏமாற்றிவிடுகிருேம். (நமது கையில் பணமில்லாவிட்டாலும் சட்டைப் பைக்குள் இருக்கலாம்; அல்லது பெட்டிக்குள் இருக்கலாம். காலணு நாணயமாக இல்லாவிட்டாலும், ரூபாய்களாகவோ, 'கரன்ஸி' நோட்டுகளாகவோ இருக்கலாம். ஆகவே நம்மிடம் உண்மையில் பணம் இருந்தாலும்கூட 'நாம் புகன்றது பொய்யல்ல' என்று நமது மனச்சான்றை சமாதானப் படுத்திக்கொள்ளலாம். மேலும், நமது சாதுரியமான பதிலை நினைத்து நமது சாமர்த்தியத்தைக்கூட வியந்துகொள்ளலாம்)

நம்மை யறியாமலேயே சில சமயங்களில் பொய் புகல்வதுமுண்டு. இதோ சில எடுத்துக்காட்டுகள்:

'முத்துக்கருப்பன் முதலாளிக் குத்தாளம்போட்டுக் கொண்டிருக்கிருன்'

'வைர பேசரி வேண்டுமென்று என் மனைவி ஒற்றைக்காலில் நின்ருள்.'

'பணம், பணம் என்று ஏனடா என் கழுத்தை அறுக்கிருய்?' (அல்லது பிராணனை வாங்குகிருய்?)

'பின்னங்கால் பிடரியில்பட ஓடினன்'

'காக்காய் பிடித்துக் காலம் கழிக்கிருன்'

இன்னும் இதுபோல் எத்தனை எத்தனையோ! குட்டிக்கதை யொன்றுண்டு. 'காயமே இது பொய்வடா' எனக்கருதிய முற்றும் துறந்த முனிபுங்கவர் ஒருவர் கானக மொன்றில் தவம் செய்துகொண்டிருந்தார். ஒரு பெரிய பெட்டியின் மீது அமர்ந்தவண்ணம் நிஷ்டையிலாழ்ந்திருந்தார் அத்தவசிரேஷ்டர். திருடர்களால் பின்தொடரப் பட்ட பிரயாணி ஒருவன் ஓடோடி வந்து அவரிடம் சரண்புகுந்தான். அவனை அந்தப் பெட்டிக்குள் ஒளிந்திருக்கச் செய்துவிட்டு மீண்டும் அதனமீதேறி அமர்ந்து தவமியற்றத் தொடங்கினர் ரிஷீஸ்வரர். சற்றைக்கெல்லாம் பிரயாணியைத் துரத்திவந்த கள்வர்கள் அவரை விழித்து "இங்குவந்த பிரயாணியை எங்கே?" என வினவினர்கள். பொய் சொல்வாரா புண்ணியாத்மா? அல்லது தஞ்சம் புகுந்தவனைக் காட்டிதான் கொடுப்பாரா? பார்த்தார் தபஸ்வி. முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொண்டார். குரலில் கோபத்தைக் குழைத்துக்கொண்டார்.

"நல்ல புத்திசாலிகளப்பா நீங்கள்!...... சரியான இடத்தில்தான் வந்து தேடுகிறீர்கள்... இதற்குள் இருக்கிருன் இதற்குள்!" என்று தாம் அமர்ந்திருந்த பெட்டியையே சுட்டிக்காட்டிக் கூறினர். அவர் உரைத்தது உண்மைதானென்ருலும் அவரது முகபாவமும் பேச்சின் தோரணையும் அக்கள்வர்களை ஏமாற்றிவிட்டன. செயலற்றுத் திரும்பினர் திருடர்கள். இந்தக்கதை மெய்யோ பொய்யோ எனக்குத்தெரியாது.

'பொய்' என்ருலும் புளுகு என்ருலும் ஒன்றே. 'புளுகு' என்பது அதன் தரத்துக்குத் தக்கவாறு அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு, கஜப் புளுகு, திடீர்ப் புளுகு என பலதிறப்படும். இவற்றின் சிருஷ்டிகர்த்தாக்கள் முறையே அண்டப் புளுகன், ஆகாசப்புளுகன், கஜப்புளுகன், திடீர்ப் புளுகன் எனப்படுவர்.

சிநேகிதன் வீட்டுக்கு இராப் பாடம் படிக்கப் போவதாகத் தாயிடம் சொல்லிச் சென்றான் சிறுவன் ஒருவன். "இன்றிரவு அவசரமாக ஆபீசுக்குப் போகிறேன்—வேலை தலைக்குமேல் குவிந்துகிடக்கிறது" என்று மனைவியிடம் கூறிச்சென்றார் அச்சிறுவனது தந்தை. ஆனால் சினிமாக் கொட்டகையில் இடைவேளைக்காக வெளிச்சம் போடப்பட்டதும் அருகருகே அமைந்திருந்த தந்தையும், தனயனும் ஒருவரையொருவர் பார்த்து 'திருதிரு'வென விழித்தனர். இருவர் குட்டும் வெட்ட வெளிச்சமாகியது. கெட்டிக்காரன் புளுகுகூட எட்டே நாள்தானே!

'கயிறு திரித்தல்', 'சரடு விடுதல்' 'கதை அளத்தல்', 'மூட்டை அவிழ்த்தல்', 'புருடால் அடித்தல்' 'கப்சால் கிளப்புதல்' இவை 'ஒரு பொருட் பன்மொழிகள்'. அகராதியைப் புரட்டிப் பார்க்காதீர்கள்! பார்த்தால் நிச்சயம் ஏமாற்றம்தான். இச்சொற்கள் வழக்கில் இருந்து வருகின்றன.

"நீ வக்கீல் வைத்துக்கொள்ளவில்லையா" என்று ஒருவர் கேட்டதற்கு, "இல்லை; நான் கோர்ட்டில் உண்மையைச் சொல்லிவிடப் போகிறேன்" என்றானாம் ஒரு கட்சிக்காரன். இது நாம் அடிக்கடி படித்துப் புளித்துப்போனதொரு ஹாஸ்யத் துணுக்கு. இந்த வக்கீல் மகானுபாவர்கள், தங்கள் கட்சிக்காரர்களைச் சிறைத்தண்டனையிலிருந்தோ, தூக்கு மேடையிலிருந்தோ விடுவிக்க நாவன்மையோடு அடித்துப் புளுகுவதைக் கேட்கப் பதினாயிரம் காதுகள் வேண்டும்.

"என்ன?... பதினாயிரம் காதுகளா?... உமது கூற்று பச்சைப் பொய்" என்று நேயர்கள் கூறுவது காதில் விழுகிறது.

"அதுதான் இல்லை" என்று அடித்துச் சொல்வேன்.

"என்ன ஐயா சும்மா அளக்கிறீர்? ஒரு பொய்யை மறைக்க ஏன் ஒன்பது பொய் சொல்கிறீர்?' என்கிறீர்களா?

இதோ விளக்கம்! இலக்கணத்தில் 'உயர்வு நவிற்சி அணி' என்றொரு அணி உண்டு. ஆங்கிலத்தில் அதை **'Exaggeration'** என்பார்கள். என் கூற்று அதற்கொரு எடுத்துக்காட்டு. **(Example)** அவ்வளவுதான்.

"அதோபார்! முழுமதி மங்கை உன் முகமதியைக்காண நாணி மேகத்திரையை இழுத்து மூடிக் கொள்கிறாள்" என்கிறான் காதலன். அங்கே 'முழுப் புளுகு' தற்குறிப்பேற்றணியாகப் பரிணமித்துக் காதலியைக் களிப்புக் கடலில் ஆழ்த்துகிறது.

இனி, 'கதாசிரியர்களும் கஜப் புளுகர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர்களே' என்பதே எனது துணிபு. (சக எழுத்தாளத் தோழர்கள் மன்னிக்கவும்!) கதாநாயகனோ கதாநாயகியோ ஆற்றில் மூழ்கி இறப்பதாக சுவாரஸ்யமாய்க் கதை அளக்கிறார் ஒரு கதாசிரியர். காதலனும், கதலியும் முடிவில் கலியாணம் செய்துகொள்வதாக பயங்கரமாய்க் கயிறு திரிக்கிறார் மற்றொருவர். ஆனால் இக்கதாசிரியர்கள் அவிழ்க்கும் மூட்டைக்குச் செல்லப்பெயர் கற்பனை.

இந்தக் கட்டுரை எழுத எனக்குச் சமய சஞ்சீவியாய் உதவிய பொய்யே, வாழ்க!

என் கட்டுரை எப்படி.........? நன்றாயிருக்கிறதா.........? பொய் சொல்லாதீர்கள்!



போர்

— புலவர்

தலைவன் ஒருவன்; தன்னேடு ஒத்தவரும் மிக்கவரும் இல்லாதபடி உயர்ந்தவன்; வீரருள் வீரன்; வல்லில் வீரன்; வில்லும் அம்பும் கை கொண்டு, பெருவாளும் சிறுவாளும் இடையிற்கொண்டு வேல் தாங்கிய வீரர்கள் புடை சூழப்புறப்படுகின்ருன் வேட்டைக்கு. வேட்டை நல்ல வேட்டை. காட்டுப் பன்றியும் கானகத்து வேங்கையுமாய் எத்தனை எத்தனையோ காடுவாய் மாக்களை ஆடுகின்ருன், வேட்டை!

அதோ—களிறு ஒன்று. கண்டு விட்டான் தலைவன்! முண்டியடித்து ஓடும் அதனைக் கண்டவன் நிற்பானே? அது பெருநடையால் பாய்ந்து ஓடுகின்றது. அவன்—பெருவீரன்—பின் தொடர்ந்து விட்டான்! துரத்தி ஓடுகின்ருன். நீண்ட தூரம். தோழர்களை விட்டுத் தான் தனித்து விட்டான், அத்தீரன். ஆம்! சினத்தின் சிகரத்தில் நின்று விட்டான், அவ்வீரன்! அம்பு ஒன்றை எடுத்து, வல்வில் வில் தொடுத்து, விரைந்து செலுத்தி விடுகின்ருன். அம்புபாய்கின்றது, யானைமேல்! அடிபட்டயானை அலறிப்பாய்கிறது. முன்னிலும் வேகமாக; அடர்ந்த சோலையுள் மறைந்து விடுகின்றது.

ஓய்வு விரும்பினன், தலைவன். திசைமாறிக் குளிர்ந்த சோலை ஒன்றுள் நுழைந்தான். "சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகமும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவைஞாழலும் பைங்கொன்றையொடு பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னகமும் முருகொடு முகை சிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக் குயில்கள் இசைபாட, தண்டென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிலது நடுவண்"

மறவன்

செ. வரதராசன் —

அமைதியாய் நடந்து கொண்டு இருந்தான்.

மரகத மணியர்லான விளிம்புள்ள ஒரு மாணிக்கச் சுனை. அதன் அருகில் மாதவிக் கொடி படர்ந்தமண்டபம்! அங்கே மலர்ந்து கொண்டு இருக்கும் மொட்டுகளின் மணம் பரவுகின்றது! கொழுத்த நிழல் குவிந்திருக்கின்றது. அருகே குருக்கத்திக் கொடி. இக் கொடிமுதல் அருகே உள்ள மலையின் பசும் பொற்சிகரங்களின் முகடுவரையும் தொங்குவதுபோல வந்து இழிகின்றது நீரருவி ஒன்று. இவ்வருவி பொன் கொழித்து மணிகளையும் மாணிக்கத்தையும் வயிரத்தையும் அடித்துக்கொண்டு அழகு மிக அருகுள்ள ஆடகப் பாறைமேல் ஒலித்துக்கொண்டு விழுகின்றது, அதிரும் குரலுடைய முரசொலி போல. அச் சூழ்நிலையில் வண்டும் தேனும் யாழ்போல முரலுகின்றன. வரிக் கிளியும் வண்டும் பாடுகின்றன. அவ்விடத்தே குளிர்ந்த தாதுவைப் பரப்பியது போன்ற மகரந்தப் பொடி பரவியுள்ள ஒரு பளிக்குப் பாறை மணித்தலம். அதன்மேல் நீலவட்டம் விரித்தாற்போலத் தன் கோலத் தோகைக் கலாபம் கொள விரித்து, ஓர் இள மயில் ஆடுகிறது. அதனை நோக்கினன் தலைவன்; நோக்கி வியந்தான்; நின்றான்.

வியப்பு மீதூரப் பெற்ற வீரன், ஆடும் மயிலின் எதிர்ப்புரம் நோக்கினன். என்ன வியப்பு! அங்கே ஒரு மாணிக்கச் செய்குன்று. அதனைச் சார்ந்து விண்வரையும் வண்ணப் பசும்பொன் பூத்தது போன்ற வண்டுகள் புடைசூழ்ந்துள்ள தேன் துளிக்கும் மணம் நிரம்பிய மலர்களுள்ள வேங்கை ஒன்றைக் கண்டான். கண்டவன் அவ் வேங்கை மட்டுமா கண்டான்? அவ் வேங்கையைக் கண்டு, பெரியதோர் காதல் களிகூர்ந்து, தன் செம்மலர்ச் சீரடிமேல் சிலம்பு கிடந்து, சிலம்பு புடைப்ப, அம் மலரணிக்கொம்பர் நடை கற்பதென நடந்து சென்று

அக்நறை விரிவேங்கையின் அன்று மலர்ந்த மலர்களைக் கொய்து கொண்டு நின்றாள், ஒப்புயர்வற்ற ஒரு மகள், "தலைவி!" அவளையும் கண்டான், அவன். கண்டவன் வியப்புக் குறியாக ஓங்கி நின்றான்!

நின்றவன் அவளைப்பற்றி சினைக்கத் தொடங்கினான். "அணங்கா? ஆய் மயிலா? கனங்குழை மாதரா?" அவன் மனம் மயங்குகின்றது. தன் நோக்கிற்கு எதிர்நோக்கும் அத்தாக்கணங்கின் கண்கள் பற்றி ஆராய்கின்றான். கண்களில் கூற்று இருப்பதாக எண்ணி எண்ணி, அது கூற்றோ—கண்ணோ—பிணையோ(பெண்மான்) என வியப்படைகின்றான்; அவளது மார்பக மாட்சி கண்டு மயலுறுகின்றான்; அவளது ஒளிமிக்க நுதலுக்குப் போர்க்களத்தில் பகைவரும் அஞ்சும் தனது வலிவு நிரம்பிய பெருமையினையே இழக்கின்றான்; தன்னையறியாததொரு பாசம் அவளோடு பிணைக்க, அன்பு வயப்பட்ட இன்ப வேட்கையில் மிதக்கின்றான்; காமத்தின் கண்டவரையும் மகிழச் செய்யும் மாட்சியினைப் போற்றுகின்றான்; அவள் நோக்கில் இரு நோக்கு கண்டு இன்புறுகின்றான்.

அவளது கண்கள் கள்ளத்தனமாகப் பார்த்தன. அப் பார்வை மெய்யுறு புணர்ச்சியின் பாதியளவினும் மிக்கிருப்பது அறிந்து மயங்கினான், அவன். அவன் நோக்குகின்றான்; அவள் நிலத்தை நோக்குகின்றாள். அவன் நோக்காதபோது தான்மட்டும் நோக்கி மெல்ல நகுகின்றாள்; ஒரு கண்ணைச் சுருக்கினவள்போல அவனைப் பார்த்து மகிழ்கின்றாள், மனம் ஒன்றிய மாட்சியோடும். பகைவரைப்போல கடுஞ்சொல் சொன்னாலும் பகையாதவர்களின் சொற்களின் உட்பொருளை விரைவில் உணரலாமன்றோ? தமக்குள் இன்பந்தராத சிறு சொல்லும் பகைவர் போல் பார்வையும் கொண்டு அயலார்போல இருந்தே இன்பக் குறிப்பினைச் செய்து கொண்டனர்; அவனும் அவளும் தமக்குள். மீண்டும் அவன் பார்த்தான். பாசத்தின் வயப்பட்ட அவள், மெல்ல புன்னகைத்தாள். ஆம்! அவன், அந்த அசையும் இயல்புடையாளிடம் ஓர் அழகு இலங்குவது காண இன்புறுகின்றான். முன்பின் அறியாதார் போல ஒருவரை ஒருவர் நோக்குவது காதலரிடம் உள்ள இயல்பு அன்றோ! கொஞ்சங் கொஞ்சமாக ஒத்துக்காணும் களவில் மிஞ்சிவிட்டனர். கண்ணொடு கண்ணிணை நோக்குகின்றன. இனி வாய்ச் சொற்களால் என்ன பயன்?

"பொற்சிலையே, பெண்மானே, வீசு தென்றலே, வீங்கிள வேனிலே!" என்று கூறிக்கொண்டே மெய்மறந்து மெதுவாக அவளிடம் நெருங்குகின்றான்; "கண்ணழகி,

திருமணப் பரிசுக்குரிய அரிய நூல்கள்

தம்பதிகள் சுகமாய் வாழ்வதெப்படி?	3	12	0
திருக்குறள்—பரிமேலழகர் உரை	5	0	0
திருக்குறள் சிறப்புரை	1	4	0
முல்லைக்காடு	0	8	0
நல்ல பெண்மணி	2	4	0
இன்ப நிலா	1	0	0
புது வாழ்வு	1	0	0
வாழ்க்கை வாழ்வதற்கே	0	12	0

ஸ்ரீமகள் கம்பெனி,
சென்னை-1

அட்டைப்பட எழுத்தோவியம்

கட்டழகி, என் கருத்துக்கினிய காரிகையே, நாணப்படுகிருயா நல்லவளே, அன்புமிக உள்ளவளே!" என்று சொல்லியபடியே அவளது மெய்தொட்டு பயில்கின்ருன், அவன். பயின்றவன், அவளது கவினெல்லாம் கண்டு களிக்கின்ருன்; அவளிடம் இன்ப இசையைக் கேளாது கேட்கின்ருன்; அவளது பவளக்கூட்டு வாயுள் ஊறிய பாலொடு தேன் கலந்தது போன்ற நீரை, இதழொடு இதழ் கூட்டிச் சுவைக்கின்ருன்; அவளிடம் இயற்கையில் எழும் இன்ப மணத்தை நுகர்கின்ருன்; அவளது மெய்யொடு தனது மெய்ப் புணர உற்று இன்பக் கடலுள் திளேக்கின்ருன். அன்று, திளேக்கின்றனர். ஆம்! ஐம்புலப் பேரின்பமும் அவ்வொண்டொடியாளிடம் பெறுகின்ருன்.. தொடக்கத்தில் அவளேக் கண்டு நோயுற்றவன், அவளிடமே மருந்து பெற்ருல் மகிழ்ச்சிக்குச் சொல்ல வேண்டுமா? குளிர்ந்த அருள் நோக்குடைய மன்னன் ஒருவனின் ஆட்சியில் வாழும் குடிகளினும் இன்பமுறுகின்றனர். அவளே விட்டு அவன் பிரிந்தால், தீயால் சுடப்படுவதுபோன்ற உணர்ச்சி பெறுகின்ருன். நெருங்கினலோ தண்மை இன்பம் காண்கின்ருன். "என்ன வியப்பு இத்தகைய நெருப்பு இவளுக்கு எப்படிக் கிடைத்தது?" ஆம்! தலேவன் இப்படி வியக்கின்ருன். அவள் தோள்களில் அவன் எண்ணும் இன்பமெல்லாம் காண்கின்ருன். "அவள் தோள்கள் அமிழ்தத்தாலேயே செய்யப்பட்டனவோ?" என எண்ணி வியக்கின்ருன்.

தலேவன் தன் தலேவியிடம் பெற்ற இன்பத்தினே இப்படியெல்லாம் எண்ணிப் பார்ப்பதோடு அமையவில்லே; மேலும் ஓர் உவமை எண்ணி வியக்கின்ருன்.

ஒருவன் — தானே முயன்று பொருள் ஈட்டுகின்ருன்; ஈட்டிய பொருள் கொண்டு, தான்—தனது வீட்டிலேயே இருந்து மற்ற ஏழை-எளியவருக்கெல்லாம் விருந்தினர்—சுற்றத்தினருக்கெல்லாம் பகுத்துக் கொடுக்கின்ருன்; தானும் பயன்கொள்ள உண்ணுகின்ருன்; இன்புறுகின்ருன். அவன் அடையும் இன்பத்திற்கு உவமை கூற முடியுமா? கடமை முடித்துப் பெறும் இன்பத்திற்கு உவமையா கூறமுடியும்? **இது உவமையாக எடுத்தாலும் உயர்வுபெற்ற இன்பமன்ருே!** உலகோர் உறும் இவ்வின்பக் கிளர்ச்சியை—கடமை நிகழ்ச்சியைக் கண்டு கண்டு மகிழ்ந்து, உணர்ச்சி கொண்டவனுவான் இத் தலேவன்; எனவே, "இவ்வின்பத்தைப் போன்றதாகும் என் ஒண்டொடியாளிடம் யான் பெறும் இப் பேரின்பம்!" என்று உவமை கூறி மகிழ்கின்ருன். காதலில் கடமையுணர்ச்சியை எண்ணும் இத் தலேவனது உயர்ந்த எண்ணத்தை நாம் எண்ணிப் பாராக்கக் கடமைப் பட்டவராவோம்!

"காதலா—கடமையா? காதல் இன்றேல் சாதல்தானு? கடமைக்காகக் காதலேப் புறக்கணிக்க

வெளிவந்துவிட்டது!

மாணவர்களின் ஆங்கில
தமிழ் பொக்கிஷம்!
சிறந்ததொருபடைப்பு!

**ஸ்ரீமகள் பாக்கெட்
இங்கிலீஷ்- தமிழ் அகராதி**

**English-English
Tamil Dictionary**

20000 க்கு மேற்பட்ட ஆங்கில வார்த்தைகளுக்கு விளக்கம் நிறைந்த ஆங்கிலப் பதங்களும்—அதற் கேற்ற தமிழ்ப் பொருளும் இதில் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. இது உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் தொகுக்கப் பெற்ற ஆங்கில அகராதி யாகும்.

விலை ரூ. 2—8—0

**ஸ்ரீமகள்
கம்பெனி**
த. பெ. எண்—275
சென்னை—1

வேண்டுமா?" என்பது இன்றைய பிரச்னையாகும்; ஆனால், இங்கு **காதலில் களிக்கும் இக்காளை, கடமையை நினைக்கின்றான்; காதல் இன்பத்தையும் கடமை இன்பத்தையும் ஒன்றாகப் பிணைக்கின்றான்; இரண்டும் இரு கண்ணாக எண்ணுகின்றான்.** ஆம்! ஒருகண் போயின் கவினோ—பார்வை நலமோ—வாழ்வில் உயர்வோ காண முடியுமா?

எனவே, காதலில் கடமை நலம் காணும் இத் தலைமகன், கடமையில் காதலையும் மறவாது, இரண்டும் உடலும் உயிருமாய் இரு கண்ணாய்ப் போற்றி இன்புறுகின்றான்; இனியும் இன்புற்று வாழ்வுற உறுதி கொள்கின்றான்! வாழ்க அவன் உயர் உள்ளம்!

இப்படி ஏறக்குறைய **முப்பத்திரண்டு குறட்பாக்களால், வலியுறுத்திக் கூறும் பகுத்துண்ணும் ஈகை நலத்தினை,** காதல் வாழ்வொடும் பிணைத்து, "புணர்ச்சி மகிழ்தல்" என்ற அதிகாரத்தில் வகுத்து,

**"தம்மில் தமதுபாத்(து)
உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு!"**

[தமது வீட்டிலிருந்து, தாமே சேர்த்த செல்வத்தைப் பகுத்து, மற்றவருக்கும் கொடுத்து உண்ணுவது போன்று இனிமையாக இருக்கின்றதே, இந்த அரிவையாளோடு கூடிய கூட்டத்துப் பெற்ற பேரின்பம்!]

என்று **தெள்ளுதமிழ்த் திருவள்ளுவர்,** தமது உள்ளத்தால் உணர்ந்த உறுதியைக் கூறி, மக்களை நல்வாழ்வின் அறநெறியில் ஊக்குவித்து வாழ்வளிக்கின்றார்! செயற்படுக அவர் சிறப்புள்ளம்!

❀ அவரொரு, மானம்—வெட்கமற்ற விவேகமில்லாத மனிதர்.

❀ அந்த விநோத மனிதரின் அன்பு மகள் மீனுகௌர்.

❀ அவளுக்கொரு ஆசைக் காதலன். அவனை ஆட்டி வைத்தாள், அவனும் ஆடினான் கோல் ஆட்டக் குரங்கு ஆடுவதுபோல......

❀ அவனுக்குக் கிடைத்த முடிவோ............

கருங்காலி

எம்.ஏ.துரை

'வைர்லஸ் ஆப்பரேட்டர்' பொன்னரசு அன்றைய நிகழ்ச்சிகள் அனைத்தையும் மனம் எனும் திரையில் ஒருமுறை ஓட விட்டுப் பார்த்தான். ஒழுங்குக்கு மீறினது ஒன்றும் அவனுக்குத் தென்படவில்லை. ஒரு சமயம் முந்தின தினம்......? அப்படியும் ஒன்றுமில்லையே. உத்தரவு பெற்றுக் கொண்டு திரைப் படம் காணச் சென்றிருந்தான். வரவேண்டிய நேரத்திற்கு முன்னதாகவே "பேரக்சுக்கு" வந்து விட்டான். பிறகு ஏன் மேலதிகாரி அவரைச் சந்திக்கும்படி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்? ஒன்றுமே புரியவில்லை அவனுக்கு. மனக் குழப்பத்துடன் 'சட சட'வென்று அமுக்கி வைக்கப்பட்ட ராணுவ உடையையும், மாட்டிக்கொண்டு அருகே சுவற்றில் சாத்தப் பெற்றிருந்த நிலக்கண்ணாடியின் முன் போய் நின்றான். அவன் அழகில் அவனே சொக்கிப்போய் விட்டான். இருபது வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த பருவம். இளமை கொப்பளிக்கும் குளுமையான தோற்றம். எலுமிச்சம் பழம் போன்ற இழுக்கும் தன்மையுடைய நிறம்! வயதுக்கேற்ப வளர்ந்திருந்தான்; ஆனால் உயரத்திற்கேற்ப பருமன் இல்லை. அது அவனுக்கே சற்று வருத்தமாய்த் தானிருந்தது. இருந்தாலும், மொத்தத்தில் அவன் ஒரு அழகுச் சிலை! இப்படி ஒரு வாலிபன் அழகனாய் இருந்தால் ஏன் சிநேகிதர்கள் வந்து குவிய மாட்டார்கள்! மீனுகௌர் பொன்னரசுவைக் காதலிக்கிறாள் என்றால் அது அவள் குற்றம் ஆகாது.

தன் உடையில் யாதொரு குறையும் இல்லை என்பதை நிச்சயப்படுத்திக்கொண்டு ஆபீஸை நோக்கி நடையைக் கட்டினான். காவல் பகுதியிலிருந்த கடிகாரம்

ஐந்து முறை அதன் சங்க நாதத்தை எழுப்பி நின்றது. ஆம், மாலை மணி ஐந்தாயிற்று. இன்னும் அரைமணி நேரத்தில் உணவுக்கான மணியும் ஒலித்துவிடும். அன்று இறைச்சி முறையல்லவா? மேலும் நான்கு அவுன்ஸ் 'ரம்' வேறு இனாமாகக் கிடைக்குமே! மதுவிலக்குக் கர்த்தாக்களின் கைங்கர்யம் ராணுவத்தினரிடம் பலிக்கவில்லை.

'என்னவோ, ஏதோ' என்ற திகிலுடன், சிங்கத்தின் குகையை எட்டிப் பார்க்கும் சிறு நரி போன்று அதிகாரி இருந்த அறையை எட்டிப் பார்த்தான் பொன்னரசு. "ஒரு வேளை மீனா கௌருடன் நாம் கொண்டிருந்த தொடர்பு வெளிப்பட்டு விட்டதோ?" அந்தக் கேள்வியையே அவனால் தாங்க முடியவில்லை. அதிகாரியின் அருமை மகளாயிற்றே மீனா கௌர். தான் ஒரு சாதாரணச் சிப்பாய். எட்டுமா...? இருந்தாலும் என்ன செய்வது, எப்படியோ ஒட்டி விட்டது! இனி எட்டி ஓடிவிட முடியுமா? ஏதாவது என்றால் எதிர்த்தே பார்த்து விடவேண்டியதுதான்!

தில்லுமல்லான முடிவுடன் உள்ளே நுழைந்து 'டமார்' என்று ராணுவ 'சலூட்' ஒன்றைக் கொடுத்தான்! இரு பகுதி மேகங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும் பொழுது எழும்பும் முழக்கமும், தோன்றும் மின்னலுங்கூடச் சற்றே முன்பின் நிகழ்ந்து விடலாம். ஆனால் ஒரு சிப்பாய் 'சலூட்' செய்யும் பொழுது அவனது 'பூட்ஸ்' கால்கள் தரையில் உதைந்து கொண்டு ஒன்று சேருவதும் இடது கரம் எள்ளத்தனை இடையும் விடாமல் இடதுபுற விலாவுடன் இணைந்து கொள்வதும், வலது கை 'பட்' என்று நெற்றிக்குச் செல்வதும் ஒன்றுபோல் இருக்க வேண்டும்! ஒருவனைப் பற்றிய அபிப்பிராயம் அவன் 'சலூட்'டிலேயே வெளியாகி விடுகிறதென்பது உயர்தர அதிகாரிகளின் மாறாத கருத்து.

உலக ரயில் மார்க்கங்களைத்தும் தன் உடம்பிலேயே போடப்பட்டிருப்பது போன்ற பெருமிதத்துடன் ஏறெடுத்துப் பார்த்தார் மேஜர் லக்ஷ்மண்சிங், நாற்காலியில் அமர்ந்தவாறே. தற்பெருமை என்பது ராணுவ அதிகாரிகளுக்கு ஏற்பட்டுவிடும் ஒரு தொத்து நோய் போலும். ஒருவரைப் பார்த்து ஒருவர். ஜெனரலைப் பார்த்து கர்னல். கர்னலைப்பார்த்து கேப்டன். கேப்டனைப் பார்த்து கோள் குத்திவிடும் ஜமேதார்! இப்படியே படிப்படியாக. ஆனால் இப் பொது விதிக்கு விலக்கானவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். குப்பையில் எறிந்து விட்டால் குன்னிமுத்து மங்கியா விடுகிறது? காக்கை அடையில் பொரித்த குயிலின் குஞ்சு காக்கையுடன் கூடி கறையவா செய்யும்? நல்ல குடும்பத்திலிருந்து வந்தவர்கள் நல்லவர்களாகவே யிருந்தனர்.

நாற்காலியில் அமர்ந்து கொண்டே பதில் சலூட்டும் கொடுக்காமல் பொன்னரசுவை உற்றுப் பார்த்தார் மேஜர் லக்ஷ்மண்சிங். பொன்னரசு ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றான். இருந்தாலும் 'இப்படிப் பார்க்கிறாரே இவர்' என்ற ஒரு கலவரம் அவனுக்கு!

"பொன்னரசு!" சிங்கம் கர்ஜிப்பது போன்றிருந்தது அவன் பெயரை அவர் விளித்தது.

"சார்!" பதிலுரைத்தான் அவன்: ஹிந்தியும் ஆங்கிலமும் கலந்த பட்டாளத்துப் பாஷையிலேயே உரையாடலும் நிகழ்ந்தது.

"நமது முகாமில் ஒரு நாடகம் நடத்துமாறு பிரிகேடியர் சாகிப் உத்தரவுபிறப்பித்துள்ளார்." பேச்சை அம்மட்டோடே நிறுத்தி விட்டு அவனைக் கவனித்தார் அவர்.

"நல்லவேளை. நாம் பயந்தது போல் ஆபத்து ஒன்றுமில்லை" என்று அறிந்து கொண்ட பொன்னரசுவுக்கு ஒருவிதத்தில் திருப்தி தான். "ஆனாலும் நாடகத்தைப் பற்றிய பேச்சை நம்மிடம் ஏன் தூண்டுகிறார் இவர்? நடிப்புத்தான் என்னைப் பொறுத்த அளவில் கிரேக்க மொழியாயிற்றே!"

அதிகாரி மேலும் தொடர்ந்தார். "அதில் நீ கதாநாயகி பாகமேற்று நடிக்க வேண்டுமென்பது எனது விருப்பம்!"

கட்டளையென்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசி விடாமல் விருப்பம் என்றுவது சொல்லித் தொலைத்தாரே! படுகுழியில் போய் விழு என்றால் விழுந்து தான் ஆகவேண்டும். ஏன், எப்படி என்ற கேள்விகளுக்கு அங்கே இடமே இல்லை. கட்டளையின் சக்தி அவ்வளவு தூரத்தில் இருக்கிறது பட்டாளத்தில். ஆனால் நாடகத்தில் எப்படி நடிக்கிறது? இவ்வாறான சிந்தனையில் மிதந்து கொண்டிருந்தான் பொன்னரசு.

"பெண் வேஷம் உனக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும். என்ன பொன்னரசு?" என்று அவர் சிரித்தார்.

எப்பொழுதும் பொன்னரசுவோடு அன்பாய்த்தானிருப்பார் அவர். ஆனால் அன்று தன் கௌரவத்தையும் மறந்து சிரிக்க ஆரம்பித்து விட்டாரே! என்ன விஷயமோ? என்ற குழப்பத்தில் கொடாமல் நின்றான்.

"என்ன, நடிக்கிறாயா?" குழந்தையைப் பார்த்து விளையாட வருகிறாயா என்று கேட்பது போன்றிருந்தது, அவர் அவனைப் பார்த்துக் கேட்டது.

"நடித்துப் பழக்கமில்லை. என்னைக் கேட்டால் நான் என்ன சொல்வது? உங்கள் விருப்பம் அதுதானென்றால் நான் ஒப்புக் கொள்கிறேன்."

"பொன்னரசு! நீ மிகவும் நல்லவன். நான்கூட நீ ஒரு மதராசி

ஆக்க வேலைக்கு அணுச்சக்தி

அணுசக்தியின் பெருமைகளை அறிவதில் பிரிட்டன் முன்னணியில் நிற்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்று 7-5-55ல் 'மான்செஸ்டர் கார்டியன்' எழுதிற்று. குண்டுகளைத் தயாரிக்கவும் ஆக்க வேலைகளுக்குப் பயன் படுத்தவும் நமக்குத் தெரியும். சென்ற பத்தாண்டுகளில் தொழிலிலும் வைத்தியத் துறையிலும் அணுசக்தியால் புரட்சி ஏற்பட்டு விட்டது. அணுசக்தியினால் மலிவாக மின்சார உற்பத்தி செய்ய முடியும். அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்துவது பற்றி ஆலோசிக்க அண்மையில் ஜினீவாவில் சர்வதேச மகாநாடு கூடப் போகிறது. எல்லா நாடுகளும், ஆராய்ச்சிப் பயன்களைக் கூறி பரஸ்பரம் உதவிக் கொள்ளும் என நம்புகிறோம்.

மாக
நாவின்
லலாம்.
றுதிபதி
டியிருப்
ல் சூட்,
திரத்திற்
மேலும்
து. ஆங்
லும் தங்கள்
வத்தையே
மதிக்கிறுர்
பவர்களைத்தான்
ாதியான மரியா
ப்பர்.
னிகத் துறையில்
தியான நேரத்தைப்
ம் விளையாட்டுகளில்
யைச் செலவு செய்யத்
றுவதில்லை. இதோ இந்த காட்
யைப் பாருங்கள். அதோ அந்த
ுளிக் கடைக்காரர் மவுன் பாசு
வ இருக்கிறுரே அவ்வருட இன்
ம் டாக்ஸ் அதிகம் விதித்திருப்ப
தால் மூளையைக் குழப்பிக் கொண்
டிருக்கிறுர். இதோ கால் பந்து
விளையாட்டு ஸ்தாபனத்தார் அவரை நெருங்கி "சதுர்தேச பந்தாட்டம் ரங்கூனில் நடைபெறப் போகிறது சீசன் டிக்கட் 5 ரூபாய்தான்" என்று சொன்னவுடன் கையிலுள்ள தஸ்தாவேஜுகளை உதறி எறிந்து "கொடும் ஐயா ஐந்து டிக்கட்டுகள். நாங்கள் குடும்ப சகிதம் பார்க்கவேண்டும்" என்று சொல்லி வருமான வரி அதிகம் விதித்ததைக் கூட பொருட்படுத்தாது விளையாட்டு உலகில் மூழ்கி விடுகிறுர். இதுதான் 'ஸ்போர்ட்ஸ்' விஷயங்களில் பர்மியர்களின் சராசரி மனேபாவம்!

காலபந்து விளையாட்டுப் போக கூடைபந்து விளையாட்டு பர்மியர்களின் பரம்பரை விளையாட்டுகளில் ஒன்று! இந்தக் கூடைபந்து விளையாட்டு மிகமிக ரசமானது! வட்டமாக சுற்றி நின்று கொண்டு கூடைபந்தை காலாலும், முழங்காலாலும், தோள்களாலும் இடித்து விளையாடுவார்கள். ஆனுல் தரையில் அல்ல. ஆகாயத்தில்! இந்த விளையாட்டின் விசேஷ மென்னவென்றுல் பந்து கீழே விழாதவாறு சுற்றி நிற்பவர்கள் தோளா

இருண்ட வாழ்வு

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

புதுமை மணம் கமழும் கற்பனைக் களஞ்சியமாகிய இருண்ட வாழ்வு, செல்லாத நோட்டு, மதுரை மீனுட்சி, லைலா-மஜ்னு, நல்லதங்காள், சிற்பி ஆகிய கருத்து நிறைந்த கதைகள்.

விலை 12 அணு

13 அணு ஸ்டாம்புகள் அனுப்பிப் பெறுக.

கலைமன்றம், சென்னை-1

இந்தச் சனியன் பிடித்த பொத்தான் ஏன் நம் கண்களில் படவில்லை என்று அதையும் தூற்றிக் கொண்டான்.

"இனிமேல் இவ்விதமான சிறு பிழைகளைக் காண நான் விரும்பவில்லை. எச்சரிக்கை!"

"மிகவும் நல்லது சார்!" பட்டென்று பதிலுரைத்தான். மறுபடியும் ஒரு சலூட். ஆபீஸை விட்டு வெளியேறி விட்டான் அவன்.

* * *

கடல் மட்டத்திலிருந்து சுமார் ஆறாயிரம் அடி உயர்ந்த மலைப் பிரதேசத்தில்தான் கசௌளி என்ற சிறிய நகரம் அமையப் பெற்றிருந்தது. அதிலும் டிசம்பர் மாதம் என்றால் கேட்கவா வேண்டும்? பனி பெய்தாலாவது பொறுத்துக் கொள்ளலாம். அதைவிடக் கொடுமையான வாடைக் காற்று எலும்பு வரையிலும் சென்று துளைத்தது. சிகரட் ஒன்றையும் புகைத்துக் கொண்டே, மேஜர் லக்ஷ்மண் சிங்கின் பங்களாவை நோக்கி நடந்து கொண்டிருந்தான் பொன்னரசு. ராணுவ உடையிலிருக்கும் சிப்பாய் ஒருவன் நடந்து செல்லும் போது புகை பிடித்தல் ஒரு குற்றமாகக் கருதப்படும். ஆனால் அதையெல்லாம் பார்த்தால் முடியுமா! யாரால்தான் அப்படி நடக்க முடிகிறது? மேலும் குளிர் காற்று வேறு உயிரை வாங்குகிறதே!

நன்றாக இருட்டி விட்டிருந்தது. மின் விளக்கொளியில் ஏதோ புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தாள மீனா கௌர். பங்களாவை அடைந்த பொன்னரசு வாசலின் பக்கமாக நின்று, அடக்க ஒடுக்கமாக, "ஆபீஸர் கமாண்டிங் சாகிப் இவைகளைக் கொடுத்து வருமாறு கூறினார்கள்!" என்றான். மீனா கௌரின் தாயார், அதாவது மேஜர் லக்ஷ்மண்சிங்கின் மனைவி அங்கே இருக்கலாம் என்ற எண்ணம் அவனுக்கு.

"ஓ! பொன்னரசுவா? வாருங்கள்! நான் மட்டும்தான் தனியாக இருக்கிறேன். அம்மா பிரிகேடியர் சாகிப்பின் வீட்டிற்குப் போயிருக்கிறார்கள். நான் உங்களைக் காண வரலாமென்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். நீங்களே வந்து விட்டீர்கள்!" என்று எழுந்து வந்து தன் காதலனை எதிர் கொண்டழைத்தாள். மேஜர் லக்ஷ்மண்சிங்கின் மகள், மீனா கௌர்!

பரிசு பெற்றார்

சென்றவாரம் (21-5-55-ம்தேதி) கலைமன்றம் மேலட்டை இரண்டாவது பக்கத்தில் பிரசுரமான 'புத்திக்கூர்மை மிக்க பாப்பா'வின் புகைப்படத்தை அனுப்பிய (74, லிங்கிச் செட்டி தெரு, சென்னை 1.) என்பவர் திரு. ஆர். எஸ். சுப்பையா ரூ 10 முதற்பரிசாகப் பெற்றார். இவ்வார இதழிலும் அவர் அனுப்பிய புகைப் படங்களே பிரசுரிக்கத் தகுதிபெற்றன.

—ஆசிரியர்

"உன் தந்தையும் பிரிகேடியர் சாகிப்பின் பங்களாவிற்குத்தான் சென்றிருக்கிறார். அம்மாவும் அங்கேதான் போயிருக்கிறாப்பிலேயா உம்......ஏதாவது 'பார்ட்டி'. 'கிர்ட்டி' நடக்கிறாபபிலே!" தன் காதலியின் கழுத்தைச் சுற்றிக் கையைப் போட்டுக் கொண்டு மேஜையை நோக்கி நடந்தான் வாலிப வீரன்.

"பௌடர் என்றாலே அப்பாவுக்குப் பிடிக்காதே! இதெல்லாம் அவர்கள் கொடுத்தனுப்பியவை தானா?" சாமான்களை வாங்கி மேஜையில் வைத்துக் கொண்டே கேட்டாள்.

"உம்" ஆமோதிக்கும் பாவனையில் தலையசைத்து விட்டு, மேலும் தொடர்ந்தான். "பாவம், மூஞ்சியெல்லாம் ஒரே தாடி மயம்! அவருக்கு ஏன் பிடிக்கப் போவுது பவுடர்?" என்று அவன் சிரித்தான். அவளும் சிரித்துக் கொண்டாள்.

"மீனா, நான் ஒன்று கேட்கிறேன், கோபித்துக் கொள்ளாதே ஆமா ... உங்க வகையறாவிலே ஆம்பளைங்கதான் போகட்டும். நீங்க கூட ரோமத்தை வளர்க்கிறதுண்டோ?" குறும்புத்தனமான கேள்வியைக் கேட்டு விட்டுக் குழந்தை முகத்துடன் அவளைப் பார்த்தான்.

"போங்கள் பொன்னரசு! இதே கேலிதான் எப்பொழுதும் உங்களுக்கு! என்னைப் பிடிக்கவில்லையென்றால் சொல்லி விடுங்கள், தூக்குப் போட்டுக் கொண்டு உயிரையாவது விட்டு விடுகிறேன்."

"ஐயையோ!......மீனா, பார்த்தாயா—நான் விளையாட்டாகக் கூறினேன். நீ வேறுவிதமாக எடுத்துக் கொண்டாய்! மீனா,......என்னைப் பார். ஒண்ணு கொடுக்க மாட்டே......?"

"ஊஹூம்!......வேண்டாம், ரோமமாயிருக்கும்!"

"இல்லை மீனா......பஞ்சணை மெத்தை அது! எங்கே? பாகு மொழி பகரும் உன் பவள வாயை அசைத்து புன்னகை ஒன்று அரும்பு!"

அவள் புன்னகை பூத்தாள். ரொட்டி தின்னும் வாயில் ஊறிய உமிழ்நீர் அரிசியை ருசிக்கும் நாவுக்கு இனித்துத்தான் கிடந்தது!

அவன் வேறு பக்கமாகப் பேச்சைத் திருப்ப முயன்றான். "மீனா! உனக்குத் தெரியுமா, நான் கூடிய சீக்கிரம் ஒரு கமிஷண்ட் அதிகாரியாகப் போகிறேன்."

"அப்படியா! மிகவும் மகிழ்ச்சி. நம் விவாகத்துக்கு அப்பா தடையே சொல்ல மாட்டார்! சரி, பக்கத்தில்......" சற்று நகர்ந்து படுத்துக் கொண்டு காலியான இடத்தைச் சுட்டிக் காட்டினாள் அவள்.

"இருந்தாலும்..." இழுத்தான் அவன்.

"இருக்கத்தானே சொல்லுகிறேன்!" சொல்லிக் கொண்டே இழுத்தும் போட்டுக் கொண்டாள் அவனை.

* * *

பொன்னரசு அங்கிருந்து சென்ற சற்று நேரத்திலெல்லாம் மேஜர் லக்ஷ்மண்சிங் வந்து விட்டார். உற்சாகமாகவே காணப்பட்டார் அவர். அதற்குக் காரணம் இல்லாமலில்லை. அடுத்த பதவி உயர்வுக்கு அச்சாரம் போட்டிருந்தார் அவர். ஆனால் இன்னொரு மேஜரும் அவருக்குப் போட்



டியாக இருந்தார். லக்ஷ்மண் சிங்கை விட அவர் சற்று ‘சீனியரு’ம் கூட. இருந்த போதிலும் தான் எப்படியாவது ஒரு லெப்டினென்ட் கர்னல் ஆகிவிட வேண்டுமென்ற பேராசை அவருக்கு.

“அப்பா! அம்மா வரவில்லையா?” என்று மீனா கௌர் தன் தந்தையைப் பார்த்து வினவினாள்.

“பிரிகேடியர் சாகிப் ஒரு பார்ட்டி நடத்துகிறார். அப்புறமாக வருவாள்!” சுருக்கமாகக் கூறி முடித்தார்.

“அதற்கு மேலும் மீனா கௌர் அதைப் பற்றித் துருவித் துருவிக் கேட்க விரும்பவில்லை. பிரிகேடியர் சாகிப் ‘பார்ட்டி’ நடத்துகிறார். அதில் தன் தாய் கலந்து கொள்கிறாள்! என்றால் அதன் அர்த்தம் என்னவென்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். சிப்பாயாக இருந்த லக்ஷ்மண் சிங் சில வருட காலத்திலேயே மேஜர் லக்ஷ்மண் சிங் ஆகி விட்டாரென்றால் அவ்வளவு பெரிய உத்தி

யோக உயர்வுக்கு ஏணியாக வந்தமைந்தது அவரின் மனைவிதான் என்றால் மிகையாகாது. மீனு கௌர் சிறு பாப்பா அல்லவே! ராணுவ முகாமிலேயே வளர்ந்து பருவத்தை எட்டிப் பிடித்து விட்டவள் அல்லவா அவள்? அத்தனையும் தண்ணீர் பட்ட பாடம் அவளுக்கு.

ராணுவ உடைகளைக் களைந்து விட்டு இரவு அணியுடன் சோபாவில் வந்து சாய்ந்து கொண்டு தன் மகளையும் அழைத்து அருகில் இருத்திக் கொண்டார் மேஜர் லக்ஷ்மண்சிங்.

"மீனு! களைத்துப் போய்க் காணப்படுகிறாயே, காரணம் என்ன?" பழக்கப்பட்ட கண்கள் அல்லவா? மகளைப் பார்த்து வினவினர்.

"இல்லையே! எனக்கொன்றும் களைப்புக் காணவில்லை. உங்கள் கண்கள்தான் அலுத்துப் போயிருக்க வேண்டும்!" எப்படியோ தன் முகம் உண்மை நிலையைக் காட்டி விட்டதே என்ற கலக்கம். ஆனால் மீன் குஞ்சிக்கு நீந்துவதற்குக் கற்றுக் கொடுக்கவா வேண்டும்? நடிப்புத்தான் பெண்களுக்கு அடுப்பூதும் தொழிலாயிற்றே!

"பவுடர் எல்லாம் வாங்கி அனுப்பியிருந்தேனே, பெற்றுக் கொண்டாயல்லவா? சரி, பார்ட்டியில் நீ கலந்து கொள்ள வேண்டுமென்று பிரிகேடியர் சாகிப் வெகுவாகப் பிரியப்படுகிறார்!" என்று பேசி முடித்துவிட்டு ஓரக் கண்களால் கவனித்தார் மகளை.

"அப்பா!......"

"மீனு! பிரிகேடியர் சாகிப் நடத்தும் பார்ட்டியில் பங்கு கொள்வதென்றால் அது கௌரவம் தானே!" கண்டிப்பாய் போய்த்தானாக வேண்டுமென்பதை மறைமுகமாக வெளிப்படுத்தினர்.

"அப்பா! அவரை நினைத்தால் எனக்குப் பயமாயிருக்கிறதப்பா!" தந்தையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு குழைந்தாள் அவள்.

"அசடே! அவர் எவ்வளவு நல்லவர் என்பது உனக்குத் தெரியுமா?" முதுகில் தட்டிக் கொடுக்கும் பாவனையாகப் பேசினர் அவர்.

"அப்பா! நான் போகத்தான் வேண்டுமா? அம்மாதான் போயிருக்கிறார்களே, அது போதாதா?" தாயைத் தள்ளிவிட்டுத் தான் தப்பிக்கொள்ளலாம் என்று பார்த்தாள் போலும்.

"உன்னுடைய அம்மா இன்னும் கால் மணி நேரத்தில் வந்துவிடுவாள். நீதான் போய் வாயேன்!"

* * *

அவள் போகவும் செய்தாள். ஆனால் போகும் பொழுது ஒரு எச்சரிக்கை விடுக்கவும் தவறவில்லை மேஜர் சாகிப்.

"மீனு! என்னுடைய உத்தி உயர்வைப் பற்றி ஏதாகிலும் சொல்லுகிறாரா என்று கவனி!"

"உம்!" தலையசைத்து விட்டு மின்னல் போல் ஓடி மறைந்து விட்டாள். அவளுக்குத் தெரியும், தன் தந்தையின் 'பிரமோஷன்' பற்றிய பேச்சைத் தான் தூண்ட வேண்டுமென்பதற்காகவே அவர் அப்படிப் பேசினர் என்று.

* * *

இரண்டு மூன்று தினங்களாகியும் மீனு கௌர் தன்னைச் சந்திக்க வராதது குறித்து ஒரே திகில் பொன்னரசுவுக்கு. ஒரு வேளை விஷயம் தெரிந்து அவளுடைய

தந்தை அவளைத் தடுத்துவிட்டரோ? அப்படியும் நிற்கமாட்டாளே அவள். இன்று எப்படியாவது மேஜர் சாகிப்பின் வீட்டிற்குச் சென்று விஷயத்தை அறிந்து விடுவதென்ற முடிவு செய்திருந்தான் அவன்.

அதே முடிவுடன் மேஜர் லக்ஷ்மண் சிங்கின் பங்களாவை வந்தடைந்தான். நல்ல இருட்டு. வெளியே நின்றுகொண்டு ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தான். அங்கே தன் காதலி அலங்காரத்தில் மூழ்கிப் போயிருந்தாள். அவளைக் கண்டவுடன் நிலவைக் கண்ட வையகம் போல் உளம் குளிர்ந்தான். "நம்மைச் சந்திக்க வேண்டித்தான் இவ்வளவு தடபுடலாகத் தன்னை அலங்கரித்துக் கொள்கிறாள்" என்று எண்ணிய பொன்னரசு அவளை—அவளுடைய வரவை எதிர்நோக்கி நின்றான் வெளியே.

அலங்காரத்தை முடித்துக் கொண்டு வெளியே வந்தாள். ஆபீஸரின் அருமை மகள் மீனு கௌர். வெளியே நின்ற கார் ஒன்றில் அவள் ஏறியதுதான் தாமதம், கார் காற்றாய்ப் பறந்தது! ஏமாற்றமடைந்த பொன்னரசுவைப்பெரிய சந்தேகம் ஒன்றுக் கவ்விக் கொண்டது.

"பிரிகேடியரின் காரில் அவள் செல்லவேண்டிய காரணம்?" அந்தக் கேள்விக்கு விடை காண வேண்டுமென்பது ஆயிரம் ஈட்டிகளைத் தன் உடலில் குத்திக் கொள்வது போன்றிருநதது. வேகமாகச் சென்றான். ஓட்டமும் நடையுமாகச் சென்றான். சற்று நேரத்திலெல்லாம் பிரிகேடியரின் பங்களாவையும் அடைந்து விட்டான். அங்கே அவன் கண்ட காட்சி; கேட்ட கேள்வி!

"மீனு! தேனுக நீ வந்து என் சிந்தையை இனிக்கச் செய்து விட்டாய்! போதை தரும் மதுக் குடமே.........தெவிட்டாத செந்தேனே!" மதம் பிடிந்துவிட்ட யானையை நினைவு படுத்தியது பிரிகேடியர் சாகிப்பின் தோற்றம்.

"ஆ!...பைய..." குயிலின் குரலாள் கொட்டிய வார்த்தை.

"என் தந்தையின் உத்தியோக உயர்வு...?" ஞாபகப் படுத்தினள் இராணுவ அதிகாரியின் அழகிய மகள்.

"இன்னும் ஒன்றிரண்டு தினங்களில் பாரேன், உன் தந்தை ஒரு லெப்டினென்ட் கர்னல்!"

"நிச்சயமாகவா? அப்படியானல் பர்தர் பிரமோஷன்?" அவள் கேட்டாள்.

"ஆல் ரெடி சேங்ஷண்ட்!" அவசரமாகப் பதிலுரைத்தார் அவர்.

அதற்கு மேலும் தன் காதைப் பொத்திக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை பொன்னரசுவால். "என்னடா இது உலகம்! பர்தர் பிரமோஷன்......ஆல் ரெடி சேங்ஷண்ட்? நான்சென்ஸ்! வஞ்சகி... கயவஞ்சகி!" அந்நேரம் அவன்

கலைமன்ற சந்தா விபரம்

உள்நாடு

வருடச் சந்தா	12—0
ஆறு மாதச் சந்தா	6—0

வெளிநாடு

வருடச் சந்தா	13—0
ஆறு மாதச் சந்தா	6—8

கையில் ஆயுதம் இருந்திருந்தால் என்ன நேர்ந்திருக்குமோ? விரைந்தான், முகாமை நோக்கி விரைந்தான். வெறுப்புணர்ச்சி மேல் தட்ட விறுவிறுவென்று நடந்தான்.

மறுநாள். அவளே வந்து சந்தித்தாள் இவனை. ஆத்திரம் தீரப் பேசித் தள்ளினன். முந்தின இரவு தான் கண்டவை கேட்டவை அத்தனையும் உளறிக் கொட்டி விட்டான். "இனி என் கண்களிலே விழிக்காதே!" அனல் கக்கிருன் அவன். காதலி; கல்யாணம் செய்துகொண்டு களிப்புடன் வாழலாம் என்று கனவுக் கோட்டைகளை எழுப்பியிருந்தான். ஆனல் அத்தனையும் கலைந்த கனவாகவே போய்விட்டதே!

"ஐயோ! என்னையும் பேசவிடுங்களேன்." தற்காப்பு வாதம் புரிய எண்ணினள் போலும் அவள். "என் குற்றமில்லை அது; அப்பா தான் வற்புறுத்தினர்......" பேசி முடிக்கவில்லை அவள்.

"சீ! அப்பா வற்புறுத்தினர்; நீ அவனுக்கு ஆசை நாயகியாகி விட்டாய்? அற்புதமான வாதம்! அழகைக் காட்டி வாழ்வைத் தேடும் இழிகுலத்தவளே! இன்னும் என்ன என்னிடம்? ஓடிவிடு இங்கிருந்து!"

"ஐயோ! அப்படி நான் என்ன தவறிழைத்துவிட்டேன்?"

"மானம் கெட்டவளே! பேய் இல்லை யென்று எந்த மடையன் சொன்னன்? இதோ, என் எதிரிலேயே நிற்கிருளே பேய் ஒருத்தி!" தன்னைக் கட்டிப் பிடிக்க வந்தவளையும் உதறித் தள்ளிவிட்டு மறைந்துவிட்டான். அங்கிருந்து.

தன்னை அலட்சியப் படுத்தி விட்டுச் செல்லும் பொன்னரசுவை விழித்துப் பார்த்தாள், கோபக் கனல் தெறிக்க. "இவ்வளவு துணிச்சலா? என்னை அலட்சியப் படுத்தும் அளவுக்கு இவ்வளவு திமிரா? பார்த்துக் கொள்கிறேன் ஒரு கை!"

அடுத்த நாள். காலை மணி பத்து. ஆபீஸுக்குள் மார்ச் செய்து கொண்டு செல்லப்பட்டான் 'வைர்லஸ் ஆப்பரேட்டர்' பொன்னரசு. குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டது. சில தினங்களுக்கு முன் தன் சட்டைப் பையிலுள்ள பொத்தானை மாட்டவில்லை என்பது தான் அவன்மீது சாட்டப்பட்டிருந்த குற்றம். வேறு ஒரு பிழையும் அவனிடம் கண்டு பிடிக்க முடியவில்லை அவரால்!

"இருபத்தெட்டு நாளையக் கடுட் காவல்!" தண்டனை விதிக்கப்பட்டது. அதோடு அவன் உத்தியோக உயர்வுக்கான கடிதத்தில்' "தகுதியுடையவன் அல்ல'! என்று சிவப்பு மையினல் வரைந்து தள்ளி விட்டார்.

இரும்புக் கண்ணிகளை எண்ணிக் கொண்டிருந்தான் பொன்னரசு. உத்தியோகஉயர்வுக்கான வாய்ப்பும் பாழாய்ப் போய்விட்டது. ஆனலும் அவன் காதல் கொண்டிருந்த அந்தப்பெண்ணின் வேடம் தகுந்த சமயத்தில் வெளிப்பட்டுவிட்டதைக் குறித்து ஒரு திருப்தி அவனுக்கு. ஆனலும் தனது 'காதல்' கடுங்காவல் தந்துவிட்டதே தனக்கு என்ற துயரம் அவனைத் துன்புறுத்தியது.

* சிரிப்பது உடலை வளர்க்கும் சிந்தனையை உருவாக்கும் என்பது அறிஞர் களின் துணிபு,
* அந்தச் சிரிப்புக்காக ஏங்கிக்கிடப்போர் ஏராளம்.
* இன்றையத் திரைப்படங்களில் கூட 'நகைச் சுவை'ப் பகுதிக்கே அலாதி யான வரவேற்பு.
* நவரஸங்களில் ஒன்றான இந் நகைச்சுவை அந்நாளில் எத்துணை மதிப்புடன் விளங்கிற்று என்பதின் விளக்கமே.......



நகைச்சுவை

ந. ரா. தருமலிங்கம்

தமிழ் நூல்களில் நகை, அவலம், இழிப்பு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை, சமநிலை என்று ஒன்பது வகையான சுவைகள் கூறப்படுகின்றன. அவற்றுள் முதலாவதாகக் கூறப்படும் நகைச்சுவையை ஈண்டு காண்போம்.

அறிஞர்களாலும், அறிவிலிகளாலும் பணக்காரர்களாலும், பாட்டாளிகளாலும் விரும்பப்படும் சுவையென்ப திஃதொன்றே.

நம் தமிழ்ப் புலவர் மாட்டு இச் சுவை மலிந்திருந்த தென்பது சங்ககால இலக்கிய இலக்கணங்களால் நன்கு அறியற்பாலது.

பெருஞ் செல்வர்களிடை இச் சுவை காணப்பட்டால் அதில் வியப்பதற்கொன்றுமில்லை. பண்டைத் தமிழ்ப்புலவர் வறுமையில் உழன்றனர். அது போதும் அவர்களிடை நகை என்னுஞ் சுவை நன்கு விளங்கியது. இதுவே சிறப்புடைத்து என்பதில் ஐயமில்லை.

புலவர் ஒருவர் வறுமையால் வாடி நாடோறும் திரிந்து வந்தார். ஒரு நாள் ஒரு சிற்றூரை அடைந்து "பாடல்கள் பல கேட்டுப் பரிசளிக்கும் பண்பு வாய்ந்த பணக்காரர் யாரேனும் ஈண்டு உண்டா?" என வினவினர். அவ்வூர் மக்கள் இராக்கப்பப் பூபதி என்பாரிடம் செல்லுமாறு ஆற்றுப் படுத்த புலவரும் அப்பூபதியை அடைந்து வணங்கி நின்றார். வந்தவர் புலவர் என்றுணர்ந்த பூபதி முகத்தில் கடுமை தோன்ற "பொய் கூறும் பாடல்களை யான் விரும்பேன். உண்மை விளம்பும் பாடல்களைக் கூறுக" எனப் பணித்தான். புலவரும் அவ்வாறே பாடல் ஒன்றை இயற்றிச் சென்றார். பூபதியும் மனம் மகிழ்ந்து பலவாறு புலவர்க்கு

பரிசளித்தார். அப்பாடலைக் காண்க.

"அண்ணன் என்பவன்
தம்பிக்கு மூத்தவன்
வெண்ணெய் என்பது பாலில்
விளைவது

....

நாற்காதமும் முக்காதமும்
நடந்தால் ஏழுகாதம்
மேற்கே நின்று பாத்தால்
கிழக்கது தெரியாது
இராக்கா உள்ளதைச்
சொன்னேன் இரட்சிப்பாயே"

எப்படிப்பட்ட உண்மையான உண்மைகள் பார்த்தீர்களா!

முன்னொருகால் கடிகை முத்துப் புலவர் என்பார் தமிழ் நாட்டின் கண் வாழ்ந்து வந்தார். ஒரு நாள் அவருக்கு வாத நோய் கண்டது. புலவர் எழுந்து நடமாடக்கூட முடியவில்லை. வாயைத் திறப்பதும் கடினமாகிவிட்டது. தந்தையாரின் வருத்தத்தை யறிந்த புலவரின் பெண் மக்கள் இருவரும் துணியொன்றில் பாலைத் தோய்த்து தந்தையாரின் வாயில் பிழிந்து வந்தனர். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் பெண் மக்கள் புலவர் வாயில் பாலைப் பிழிந்த காலை அவர் வெறுப்புடன் முகத்தைச் சுளித்தார். தம் தந்தையின் மீது அளவற்ற அன்பு பூண்ட அப் பெண்டிர் கனிவுடன் "பால் கசக்கின்றதோ?" என வினவினர். புலவர் வெறுப்புடன் "பாலும் கசக்கவில்லை! துணியும் கசக்கவில்லை!!" என்றார்.

இவ்வாறு கூறியதின் மூலம் பல நாட்களாகப் பாலைப் பிழிந்தெடுத்த துணியை நன்றாகக் கசக்கிச் சுத்தப்படுத்தவில்லை. என்று புலவர் சிலேடை நயம் பொருந்தக் கூறியது காண்க.

தந்தையாரின் எண்ணத்தை யறிந்த பெண்களும் புலவர்க்குப் புதுத் துணியில் பால் பிழிந்து ஊட்டினராம்.

ஒரு நாள் சர்க்கரைப் புலவர் என்பாரும் சவ்வாதுப் புலவர் என்பாரும் உரை நிகழ்த்த நேர்ந்தது. பேச்சினிடையே சர்க்கரைப் புலவர் வேடிக்கையாக "சவ்வாது மணம் மூக்கு மட்டும்; சர்க்கரைச் சுவை கண்ட மட்டும்"

இதைக் கேட்ட சவ்வாதுப் புலவர் அமைதியுடன் "அதுவும் கண்ட மட்டும்" எனக் கூறினர். இதைக் கேட்டதும் சர்க்கரைப் புலவரின் முகம் சுருங்கிற்று.

'சவ்வாது மணம் மூக்குவரை தான், சர்க்கரையின் சுவை எப்பொழுதும் எங்கும் உளது' என்று பொருள் படக்கூறினர் சர்க்கரைப் புலவர்.

ஆனல் அவருடைய வார்த்தைகளைக் கொண்டே ஏமாற்றிவிட்டார் சவ்வாதுப் புலவர். கண்டம் என்று கூறினல் தொண்டை என்றோ கழுத்து என்றோ பொருள் படும். எனவே சவ்வாதுப் புலவர் "அதுவுங் கண்ட மட்டும்" எனக் கூறி 'அதுவும் கழுத்து மட்டிலும்தான் சுவை' என்று வேறு பொருள்படக் கூறிச் சர்க்கரைப் புலவரை மட்டந்தட்டினர். சர்க்கரைப் புலவரின் முகஞ் சுருங்கியதின் காரணம் இப்பொழுது விளங்குகின்றதா?

தமிழ் நாட்டிற்கும், வடநாட்டிற்கும் அந்நாளில் புலமைத்திறத்தில் கடுமையான போட்டி இருந்து வந்தது. இந்நாட்டுப் புலவர் அந்நாடு செல்வதும், அந்

நாட்டுப் புலவர் இந்நாடு வருவதும் 'எம்மை வெல்வாருண்டா?' என வீரமுழக்கம் செய்வதும் வழக்கமாயிருந்தன.

ஒரு நாள் சர்வக்ஞப் பட்டர் என்பார் இந்நாட்டிற்கு வந்தார். அவருடன் ஏராளமான படைகளும், பல்லக்குகளும், ஆடைகளும், ஆபரணங்களும் வந்தன. இவ்வித ஆடம்பரப் புலவரைக் கண்ணுற்ற தமிழ் மைந்தன் ஒருவன் அவர் செருக்கை அழிக்க எண்ணினன். அச்சமின்றி அவர் முன்னிலையில் போய் நின்று தான் ஒரு கேள்வி கேட்க விரும்புவதாக் கூறினன். எல்லோரும் திகைத்து நின்றபோது அச்சிறுவன் கீழிருந்த மணலில் ஒரு பிடி கைகளில் அள்ளி "இது எவ்வளவு மண்" என்று புலவரைக் கேட்டான். புலவர்க்கு பாவம் ஒன்றும் புரியவில்லை

தான் கரைத்துக் குடித்த நூல்களையெல்லாம் நினைவு படுத்திப் பார்த்தார், தலையைச் சொறிந்தார், தலையை அப்படியும், இப்படியும் ஆட்டினர். பயன் ஒன்றும் கிட்டவில்லை. மலர்ந்த முகத்துடன் அச்சிறுவன் "இது தெரியவில்லையா? இது "**பிடிமண்**" என்று கூறினன்.

மற்றவர்களது வானத்தைத் தழுவும் சிரிப்பு முழுவதும் நிற்கு மட்டும் காத்திருக்கவில்லை புலவர். அதற்கு மாருக வடக்குத் திக்கு நோக்கிய பாதையில் கடுமையான புழுதிப்படலம் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. புலவர்களேயன்றி தமிழ்ச் சிறுவர்களும் நகைச்சுவையில் விருப்பம் கொண்டிருந்தனர் என்பது மேற்கூறிய வரலாற்றுல் நன்கு புலப்படும்.

கொல்லர் பரம்பரையைச் சார்ந்த புலவர் ஒருவர் சைவமடம் ஒன்றை அடைந்தார்.

அம் மடத் தலைவர் அப்புலவரின் நண்பர். எனவே புலவரைக் கண்டதும் அம் மடத் தலைவர் "வாரும் இரும் படியும் புலவரே!" என வரவேற்ருர்.

காலம் அழிக்க முடியாத கதைப் பெட்டகங்கள்

		ரூ.	அ.
கசந்த கரும்பு	...	1	8
வாழ்க்கை வாழ்வதற்கே	...	0	12
இருண்ட வாழ்வு	...	0	12
கொலேகாரி	...	0	12
அவள் வாழ்வு	...	0	8
மனேவி	...	0	12
முள்	...	1	0
வழுக்கி விழுந்தவள்	...	1	0
தளபதி	...	1	0
இலட்சியப் பெண்	...	1	0
அரண்மனே அழகிகள்	...	1	8
நல்ல பெண்மணி	...	2	4
ஒருதுளி இரத்தம்	...	2	0
காயகல்பம்	...	2	0
சண்முகவடிவு	...	0	12
கோகிலசுந்தரி	...	0	12
மின்னல்	...	1	0
வானம்பாடி	...	1	8
எகிப்துநாட்டு எழிலரசி	...	1	0
காதல் சிரித்தது	...	0	8
சிலம்பு	...	0	12
அந்தப்புரம்	...	0	12
திருடர்கள் ராஜ்யம்	...	0	6
வாழமுடியாதவர்கள்	...	0	12
பெரியஇடத்துப் பெண்	...	0	8
தப்பிவிட்டார்கள்	...	0	6
வாழ்க்கைப் போர்	...	1	0

ஸ்ரீமகள் கம்பெனி,
சென்னை-1.

இச் சொற்றொடர் 'வாருங்கள்! அமருங்கள்! படியுங்கள்! புலவரே!' என்று பொருள் தருவது போன்று காணப்படினும் இதற்கு வேறொரு பொருளும் உண்டு. இரும்படியும் என்பதை ஒன்று சேர்த்து 'இரும்படியும்' (இரும்படிக்கும் கொல்லரைச் சேர்ந்த) புலவரே!' என்று வர வேற்றதாகவும் கூறலாம். தலைவரின் சிலேடை நயத்தை யுணர்ந்த புலவர் வாளாவிடவில்லை "மடத் தடிகளே அப்படியே யாகட்டும்" என்றார்.

இப்போது மடத் தலைவரது முகம் எவ்வாறு இருந்திருக்கு மென நீவிரே ஊகிக்கலாகும்.

பண்டைத் தமிழ்ச் சிறாரிடம் நகைச்சுவை மலிந்து விளங்கிய தென்பதற்கு வேறோர் சான்றும் உண்டு.

ஒரு புலவர், செருக்குமிகுந்த குருடர். இப்புலவர் ஒரு நாள் தமிழ்ப்பள்ளியொன்றிற்குச்செல்ல நேர்ந்தது. பள்ளியை யடைந்ததும் மாணாக்கரிடம் கேள்வி கேட்க எண்ணினார் அவர். "குற்றிய லுகர ஒற்றுக்கள் வேற்றுமையில் இரட்டும் என்பதற்கு சான்று தருக" என வினவினார். உடனே ஒரு மாணவன் எழுந்திருந்து படபடப்புடன் "குருடு + கண் — குருட்டுக் கண்" என்றான்.

வகுப்பிலிருந்த மாணவர் அனைவரும் குபீரென நகைத்தனர். அன்று முதல் புலவரது செருக்குக் குபீரெனப் பறந்தோடியதோ இல்லையோ யாமறியோம்!

உங்கள் பொழுதை உல்லாசமாகப் போக்க வேண்டுமா ?

இதோ.........

கலை அரங்கம்

[அனைவரும் பாராட்டும் அழகு மிகுந்த சினிமாப் பத்திரிகை]

நீங்கள் விரும்பும் நடிகைகள், நடிகர்கள், பின்னணிப் பாடகர்கள், கலைநிபுணர்கள், அனைவரும் எழுதுகிறார்கள். இன்னும் பல புதிய அம்சங்கள், சினிமா சம்பந்தப்பட்டவர்கள் பாடும் ரேடியோ விமர்சனங்கள், பட விமர்சனங்கள், கதைகள், செய்திகள், மூவர்ணப்படங்கள் ஆகியவைகளைத் தாங்கிப் பிரதி இங்கிலீஷ் மாதம் முதல் தேதியன்று உங்கள் பொன்னான கரங்களிலே தவழும்

இதழுக்கு முந்திக்கொள்ள மறந்துவிடாதீர்கள்.

ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.

விபரங்களுக்கு :-

கலை அரங்கம்

த. பெ. எண் 275. சென்னை-1.

பிறிதோர் புலவர் தன் நண்பர் இல்லிற்கு விருந்துண்ண ஏகினார். விருந்து முடிந்தது. வயிற்றைத் தடவிக் கொண்டு வேதிகையில் வந்தமர்ந்தார் புலவர். அவர் காதில் தம் நண்பர் இல்லக் கிழத்தியிடம் "உண்ட இடத்தில் சாணியைத் தடவு" எனக் கூறுவது விழுந்தது.

தம் நண்பரின் சிலேடை நயத்தை யுணர்ந்த புலவர் புன் சிரிப்புடன் "சொல்லிய இடத்தில் தடவு" எனக்கூறி விட்டிலிருந்தோர் அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினர்.

சாதாரணமாக அக்காலப் புலவர் அனைவரும் வள்ளல்களுக்கு அறிமுகமாகி யிருந்தனர். ஒரு நாள் புலிக்கவிராயர் என்பார் நிலத்தலைவன் ஒருவனது வீட்டை யடைத்தார். வாயில் காப்போனிடம் "புலி வந்துள்ளது" எனக் கூறினார். அக்காவலன தன் தலைவரிடம் இச்செய்தியைக் கூறினான். அவ்வமயம் நிலத் தலைவர் வேலுக் கவிராயர் என்பாரிடம் அளவளாவிக் கொண்டிருந்தார். புலிக்கவிராயர் வந்துள்ள செய்தியை அறிவித்த காவலனிடம் "இங்கு வேல் உள்ளது" எனக் கூறுமாறு பணித்தார். இதைக் கேட்டுக் காவலனும், புலவர் இருவரும் நெடுநேரம் நகைத்தனர்.

ஆக வாழ்க்கையில் நகைச் சுவை என்பது மிகவும் முக்கிய மான சுவையாம். இதுபற்றியே ஒன்பது சுவைகளுள் இது முதன்மையாக வைக்கப்பட்டது போலும்.

வள்ளுவரும் நம்மை நகைக்கச் சொல்லுகின்றார். அதுவும் துன்பம் வரும்போது நகைக்க வேண்டுமாம்.

"இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
எடுத்து ஊர்வது அஃதொப்பது இல்"

என்பது குறள்.

எனவே துன்பத்தை நீக்கி இன்பம் தந்து உடல் வளர்ச்சிக்கு உதவி செய்யும் நகைச் சுவையை நாம் வாழ்த்துவோமாக!

வாழ்க நகைச்சுவை!!

[குறிப்பு: பற்பல அறிஞர்கள் எழுதிய நூல்களையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் துணைகொண்டு இது இயற்றப்பட்டுள்ளது]

கருத்துக் கருவூலங்கள்

அமெரிக்கநாட்டுப் பொன் மொழிகள் ...	0 8
ஆங்கில நாட்டுப் பொன் மொழிகள் ...	0 8
தமிழ்நாட்டுப் பொன் மொழிகள் ...	0 8
கார்க்கியின் கருத்துரைகள் ...	0 8
டால்ஸ்டாய் அறிவுரைகள் ...	0 8
திருக்குறள் மூலம் ...	0 8
அண்ணாவின் உவமைகள் ...	0 8
கருணாநிதியின் கருத்துரைகள்	0 8
தாகூர் முத்துக் குவியல் ...	0 8
லெனின் பொன் மொழிகள்	0 8
இங்கர்சால் அறிவுரைகள் ...	0 8
விவேகானந்தர் வீரவுரைகள்	0 8
இராமகிருஷ்ணர் அருள் மொழிகள் ...	0 8
ஏசுநாதர் அருள் வாக்குகள் ...	0 8
ஸ்டாலின் புரட்சி மொழிகள்	0 8
மாஜினி மணி மொழிகள் ...	0 8

ஸ்ரீமகள் கம்பெனி,
சென்னை-1

கீழ் வானத்திலுதித்து மேல்வானுக்கு விரைந்தோடுவதாகத் தோற்றம் தரும் ஆதவனை நாம் வரவேற்றே தீர வேண்டும்.

ஆதவனின் கதிர்களிலே நமது வாழ்வு இணைந்திருக்கிறது.

ஆனால் பனித்துளி வரவேற்குமா பகலவனை......! அவன் கண் பார்வை பட்டாலே மறைந்து விடுமே பனித்துளி......

ஞாயிற்றின் ஒளியால் ஏழை வியர்வைத் துளிகளைக் கொட்டுகிறான். ஆனால் பனித்துளிகளோ—மாய்ந்தொழிகிறது. இவ்விரு மாறுபட்ட நிலைமைகளின் படப்பிடிப்பே... ...

பொழுது புலர்ந்தது.

இளம் காலை! பனித்துளியே உன் பளபளக்கும் உச்சாடனம் புல் நுனியில். பசும் வயலின் குளு குளுப்பு கண்ணுக்கெட்டிய வரையில்...! பொன்னொளியை உலகமெலாம் தெளிக்க எழுந்தான் ஞாயிறு.

ஒரு வினாடி! இன்னும் உதிரும் அந்தப் பயங்கர நேரம் நெருங்கவில்லை. அழகு கெடவில்லை. ஆனந்தக் களிப்பின் எக்காளம். அவனைக் கண்டவுடனே ஏன் சூன்யமாகப் போகிறாய்?

ஆனால்... ....!

பனித்துளியே! ஊசிமுனையில் நீ வாசம்......மின்னென மறையும் வண்ணக்கோலம். புல்நுனி புவனத்தைத் தாங்கி பூரிப்பு முரசு கொட்டும் வண்ணக்காட்சி! வானவில்லின் அழகை நீட்டும். அலையென மிதக்கும் முகில் கூட்டம் உன் விளிம்பிலே ஒட்டிச் சிரிக்கும் நிறச்சோலை!

இப்படிப் பலவிதங்களை தாங்கும் பனித்துளியே! ஞாயிறு வேண்டும் என்று ஞாலம் வேண்டுகிறது. உலகம் அவன் அழகைக்காண தாயிழந்த கன்றுபோல் துள்ளுகிறது. ஓடையிலே ஓடு நீர்... பொன் கிரணம் கண்டு துள்ளியாடும் சேல்... கன்னியர் விழியா-என் நெளிவுக்கு ஈடு என க டு கெ ன ப் பா யு ம்! கொஞ்சு மொழிக்காரன் வருவான். உன் கோமள இதழும் விரியும்... அவன் பஞ்சுப்பாதம் பரிபவம் பேசும் என மெள்ளச் சிரிக்கும் தாமரையாள்... நீரில் வேதனைக் குமிழிட நிற்கும் வேதனை விருந்து. ஆனால் நீமட்டும் ஆதவனைக் கண்டபோதே........—? ஏன்? பேசு. நீ பேசமாட்டாய்...!

நீதானா அப்படி... நாளெல்லாம் நரம்பு வலிகக, இரத்தம் சுண்ட, காதல் தடுமாற கண் குளமாக நிற்கிறான் அவனைவிட நீ என்ன துன்பச்சுமையை அதிகம் தாங்குகிறாய்? குருதி கொட்டித் தன் வாழ்வுப் பாதையைச் செப்பனிடுகிறான். அங்கே எத்தனைபணக்கார அட்டைகள்! விட்டதில்லை......... விடுதலை தந்ததில்லை. உனது தோற்றமே அவன்தன் உடலில் வழியும் வேர்வை. அவன் வேதனை தான் எவ்வளவு. நீ ஒருதுளி. அது பலதுளி கொண்ட அருவி. அந்தத் துளிகளிலே நிரம்பியிருக்கும் உரிமைக்குரல் வெடித்தால்... பனித் துளியே நீ வெடிக்கிறாய்... அதே போன்று அவனுள்ளமும் வெடிக்கிறது—... காண்பவர் யார்? உன்னைப் போன்றுதான் பாட்டாளியும.........

எழில் மாடம் கட்டுகிறான். கடல் மூழ்கி முத்தெடுக்கிறான். சாலைபோடுகிறான். சோலை வைக்கிறான்...—...மேழி பிடிக்கிறான், இந்த மேதினி காக்கிறான். இரும்புருக்க அனலிலே நிற்கிறான். பணி புரிகிறான்.

நீ அகிலம் காட்டுகிறாய். அவன் அனைத்தையும் செய்கிறான். கரும்பு கொடுக்கிறான், அவனுக்கு ஒரு துரும்பும் கொடுப்பதில்லை நீதி பேசும் நானிலம்.

நிமிர்ந்த நோக்கு...... தெளிந்த காட்சி... இத்தனையும் நீ பெறுகிறாய்... அவன் பொறுமைப் பூச்சி. வறுமைச் சுமையைத் தோள் வளையச் சுமக்கிறான். சிறு நேரமாகிலும் நினைக்கத்தான் நேரமுண்டா? குனிந்த நடை, குழிவிழுந்த கண், உழைத்து உரமேறிய கரங்கள்... ஊசலாடும் அவன் எலும்புக்கூடு

வாழ்க்கைக்கு வழிகாட்டி! இல்லறத்திற்குத் திறவுகோல்!
எஸ். எஸ். வாஸன் எழுதிய
தம்பதிகள்
சுகமாய் வாழ்வதெப்படி?
குடும்பத்தினர் யாவரும் படிக்கவேண்டிய புத்தகம்
பரிசளிப்பதற்கேற்ற அழகிய விசேஷ பதிப்பு
விலை 3-12-0
ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தெரிந்திருக்கவேண்டிய பல அபூர்வ விஷயங்கள் அடங்கியது
ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை-1

இதனால் ஏற்படும் எண்ணங்கள்... அழுகுரல்தான் எழுப்புகிறான்... அந்த உரிமைக் குரலும். ஆனால் ஆனந்தக் குரலும் எழுப்ப நேரம் உண்டா?

புல்லிலே நிற்கிறாய்! நீயும் வாயில்லாப் பூச்சி. அவனும் வாயில்லாப் பூச்சி. புவனம் தந்த வறுமை ஈட்டிகளின் நுனியிலே பணத்தின் அனலிலே...... சோக கீதம் தட்டுகிறான்... பாட்டாளி...!

பாட்டாளி... பயங்கர வாதியாம். எவர்செய்த சதி அவன் இந்நிலைக்கு வர? எழுப்பிடு இடிக்குரலை.

பளிங்குப் பதுமையே! நீ எப்படித் தட்டிக்கட்கமுடியும்? உணர்ந்தாவதுபார்! அதுபோதும்.

நீ தினம் தினம் பிறக்கிறாய். பின் அழுகிறாய். அவனும் ஏழ்மைக் காட்டில் ஏக்கத்தை துணைகொண்டு ஏங்குகிறான். தினம் தினம் அவன் போல் உலகுக்கு இரத்தக்கறை தீட்டியவர்கள் ஏராளம்.

அதோ கேள்! உழவனின் உரிமைக் குரலை............ அதற்குள் சிதைந்துவிட்டதே உன் சிங்கார வாழ்வு. இனி எவர் கேட்பார், அவன் குமுறலை?

- கீழ் வானத்திலுதித்து மேல்வானுக்கு விரைந்தோடுவதாகத் தோற்றம் தரும் ஆதவனை நாம் வரவேற்றே தீர வேண்டும்.
- ஆதவனின் கதிர்களிலே நமது வாழ்வு இணைந்திருக்கிறது.
- ஆனால் பனித்துளி வரவேற்குமா பகலவனை......! அவன் கண் பார்வை பட்டாலே மறைந்து விடுமே பனித்துளி......
- ஞாயிற்றின் ஒளியால் ஏழை வியர்வைத் துளிகளைக் கொட்டுகிறான். ஆனால் பனித்துளிகளோ—மாய்ந்தொழிகிறது. இவ்விரு மாறுபட்ட நிலைமைகளின் படப்பிடிப்பே... ...

பொழுது புலர்ந்தது.

இளம் காலை! பனித்துளியே உன் பளபளக்கும் உச்சாடனம் புல் நுனியில். பசும் வயலின் குளு குளுப்பு கண்ணுக்கெட்டிய வரையில்...! பொன்னொளியை உலகமெலாம் தெளிக்க எழுந்தான் ஞாயிறு.

ஒரு விநாடி! இன்னும் உதிரும் அந்தப் பயங்கர நேரம் நெருங்கவில்லை. அழகு கெடவில்லை. ஆனந்தக் களிப்பின் எக்காளம். அவனைக் கண்டவுடனே ஏன் சூன்யமாகப் போகிறாய்?

ஆனால்.........!

பனித்துளியே! ஊசிமுனையில் நீ வாசம்......மின்னென மறையும் வண்ணக்கோலம். புல்நுனி புவனத்தைத் தாங்கி பூரிப்பு முரசு கொட்டும் வண்ணக்காட்சி! வானவில்லின் அழகை நீட்டும். அலையென மிதக்கும் முகில் கூட்டம் உன் விளிம்பிலே ஒட்டிச் சிரிக்கும் நிறச்சோலை!

இப்படிப் பலவிதங்களை தாங்கும் பனித்துளியே! ஞாயிறு வேண்டும் என்று ஞாலம் வேண்டுகிறது. உலகம் அவன் அழகைக்காண தாயிழந்த கன்றுபோல் துள்ளுகிறது. ஓடையிலே ஓடு நீர்... பொன் கிரணம் கண்டு துள்ளியாடும் சேல்... கன்னியர் விழியா-என் தெளிவுக்கு ஈடு என கடுகெனப் பாயும்! கொஞ்சு மொழிக்காரன் வருவான். உன் கோமள இதழும் விரியும்... அவன் பஞ்சுப்பாதம் பரிபவம் பேசும் என மெள்ளச் சிரிக்கும் தாமரையாள்... நீரில் வேதனைக் குமிழிட நிற்கும் வேதனை விருந்து. ஆனால் நீமட்டும் ஆதவனைக் கண்ட போதே.........—? ஏன்? பேசு. நீ பேசமாட்டாய்...!

நீதான் அப்படி... நாளெல்லாம் நரம்பு வலிகக, இரத்தம் சுண்ட, காதல் தடுமாற கண் குளமாக நிற்கிறுன் அவனேவிட நீ என்ன துன்பச்சுமையை அதிகம் தாங்கு கிருய்? குருதி கொட்டித் தன் வாழ்வுப் பாதையைச் செப்பனிடு கிருன். அங்கே எத்தனேபணக் கார அட்டைகள்! விட்டதில்லே........ விடுதலே தந்ததில்லே. உனது தோற்றமே அவன்தன் உடலில் வழியும் வேர்வை. அவன் வேதனே தான் எவ்வளவு. நீ ஒருதுளி. அது பலதுளி கொண்ட அருவி. அந்தத் துளிகளிலே நிரம்பியிருக்கும் உரிமைக்குரல் வெடித்தால்... பனித் துளியே நீ வெடிக்கிருய்... அதே போன்று அவனுள்ளமும் வெடிக்கிறது—... காண்பவர் யார்? உன்னேப் போன்றுதான் பாட்டாளியும்........

எழில் மாடம் கட்டுகிருன். கடல் முழுகி முத்தெடுக்கிருன். சாலேபோடுகிருன். சோலே வைக்கிருன்...—...மேழி பிடிக்கிருன். இந்த மேதினி காக்கிருன். இரும்புருக்க அனலிலே நிற்கிருன். பணி புரிகிருன்.

நீ அகிலம் காட்டுகிருய். அவன் அனேத்தையும் செய்கிருன். கரும்பு கொடுக்கிருன், அவனுக்கு ஒரு துரும்பும் கொடுப்பதில்லே நீதி பேசும் நானிலம்.

நிமிர்ந்த நோக்கு...... தெளிந்த காட்சி... இத்தனேயும் நீ பெறுகிருய்... அவன் பொறுமைப் பூச்சி. வறுமைச் சுமையைத் தோள் வளேயச் சுமக்கிருன். சிறு நேரமாகிலும் நினேக்கத்தான் நேரமுண்டா? குனிந்த நடை, குழிவிழுந்த கண், உழைத்து உரமேறிய கரங்கள்... ஊசலாடும் அவன் எலும்புக்கூடு

வாழ்க்கைக்கு வழிகாட்டி! இல்லறத்திற்குத் திறவுகோல்!
எஸ். எஸ். வாஸன் எழுதிய
தம்பதிகள்
சுகமாய் வாழ்வதெப்படி?
குடும்பத்தினர் யாவரும் படிக்கவேண்டிய புத்தகம்
பர்ச்சனிப்பதற்கேற்ற அழகிய மீசேஸ் பதிப்பு
விலை 3-12-0
ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தெரிந்திருக்கவேண்டிய பல அபூர்வ விஷயங்கள் அடங்கியது
ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை-1

இதனுல் ஏற்படும் எண்ணங்கள்... அழுகுரல்தான் எழுப்புகிருன்... அந்த உரிமைக் குரலும். ஆனுல் ஆனந்தக் குரலும் எழுப்ப நேரம் உண்டா?

புல்லிலே நிற்கிருய்! நீயும் வாயில்லாப் பூச்சி. அவனும் வாயில்லாப் பூச்சி. புவனம் தந்த வறுமை ஈட்டிகளின் நுனியிலே பணத்தின் அனலிலே...... சோக கீதம் தட்டுகிருன்... பாட்டாளி...!

பாட்டாளி... பயங்கர வாதியாம். எவர்செய்த சதி அவன் இங்கிலேக்கு வர? எழுப்பிடு இடிக்குரலே.

பளிங்குப் பதுமையே! நீ எப்படித் தட்டிக்கட்கமுடியும்? உணர்ந்தாவதுபார்! அதுபோதும்.

நீ தினம் தினம் பிறக்கிருய். பின் அழுகிருய். அவனும் ஏழ்மைக் காட்டில் ஏக்கத்தை துணேகொண்டு ஏங்குகிருன். தினம் தினம் அவன் போல் உலகுக்கு இரத்தக்கறை தீட்டியவர்கள் ஏராளம்.

அதோ கேள்! உழவனின் உரிமைக் குரலே............ அதற்குள் சிதைந்துவிட்டதே உன் சிங்கார வாழ்வு. இனி எவர் கேட்பர், அவன் குமுறலே?

நினைவூட்டுகிறோம்

கோயம்பூத்தூர் சுற்று வட்டாரத்திலுள்ள வாடிக்கைக் காரர்களின் வசதியை முன்னிட்டும்—பொதுமக்களின் சௌகரியத்தை உத்தேசித்தும் 55-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் எங்கள் ஸ்ரீமகள் கம்பெனியின் கிளை நிலையத்தை கோயம் முத்தூர் வெரைட்டிஹால் ரோடு, **15/402**-ம் நீர். (வெரைட்டி தியேட் டருக்கு எதிரே) கட்டிடத்தில் ஆரம்பித்து நடத்தி வருகின் ரோம்.

என்றும்நிலைத்துநிற்கும் வடுவூர் துரைசாமி அய்யங்காரின் சிறந்தநாவல்களும், கலைமன்ற வெளியீடுகளும், பகுத்தறிவு ஏடுகளும்,சினிமா வசன—பாட்டுப்புத்தகங்களும், கண் கவரும் மூவர்ணப் படங்களும், காலண்டர் படங்களும் சில்லறை யாகவோ—மொத்தமாகவோ தேவையான அளவு கிடைக்கும்.

சென்னைக் கம்பெனியின் விலைக்கே கொடுக்கப்படும்.

எங்கள் கிளை நிலையத்தின்மூலம் பெற்றுக்கொள்வோருக்கு.

செலவு குறைவு! சிரமம் குறைவு!! சீக்கிரம்கிடைக்கும்!!!

வியாபாரிகளும், பொதுமக்களும் எங்கள் கிளை நிலையத்திற்குவாருங்கள்

எங்கள் புத்தகக்காட்சியை வந்து பாருங்கள்

அன்புடன் வரவேற்கிறோம்! ஆதரவு வேண்டுகிறோம்!

அனைவரும் வருக!

ஸ்ரீமகள் கம்பெனி

15/402, வெரைட்டிஹால் ரோடு

கோயமுத்தூர்

தலைமை ஆபீஸ்:

ஸ்ரீமகள் கம்பெனி

122, வரதாமுத்தியப்பன் தெரு,

சென்னை-1

மதுரைக் கிளை:

ஸ்ரீமகள் கம்பெனி

150, நேத்தாஜி ரோடு,

மதுரை.

வரிசை எண்: 2

செவ்வாய்க்கிரகம் செல்லும் மார்க்கம், விஞ்ஞானத்துறையிலே மிக மிகப் பின் தங்கிய தமிழகத்து மக்களாலேயே கண்டுபிடிக்கப்பட்டதென்றும், முதன் முதலாக வான வெளியைத் தாண்டிச் செவ்வாய் உலகம் சென்றவர்கள் தமிழர்கள்தான் என்றும் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

தமிழ் மக்கள் தங்களின் பிரதிநிதிகளாக விஞ்ஞானி, சிற்பி, நடிகன், முற்போக்குஅரசியல்வாதி, எழுத்தாளன் ஆகிய ஐந்து அறிவுலக மேதைகளை அனுப்பி வைக்கிறார்கள், செவ்வாய்க் கிரகத்திற்கு.

அவர்களும் அங்கு போய்ச் சேருகிறார்கள். முதன் முதலில் அவர்கள் அங்கே கண்டது செவ்வாய் உலகத்தில் வாழும் பெண்ணொருத்தியை.

அவள் தமிழ்மொழியைக் கற்றுணர்ந்தவளாகயிருக்கிறாள். அவளிடம் நமது பிரதிநிதிகள் தங்கள் கருத்தை வெளியிடுகிறார்கள். முதன் முதலில் அவளிடம் என்னென்ன பேசவேண்டும், யார் யாரைப்பற்றி பேசவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? ஏன்? இதற்கு விடை எழுதி (புல்ஸ்கேப் அளவு தாளில் ஒரு பக்கத்திற்கு மேற்போகாமல்) அனுப்புங்கள்.

தகுதியான விடை அனுப்புவோருக்கு பரிசு ரூ 10

பரிசு பெறாத விடைகள் சிறப்பாக யிருப்பின் பிரசுரிக்கப்படும். முடிவு தேதி 25—6—55. விடைகளைப் பின் பக்கத்திலுள்ள நுழைவுச் சீட்டுடன் அனுப்புதல் வேண்டும். "ஏன்? பகுதி, கலைமன்றம், சென்னை-1." என்ற முகவரிக்கே விடைகளை அனுப்புங்கள்.

போட்டி எண் 2. **ஏன்?** முடிவு தேதி 25-6-55

(நுழைவுச் சீட்டு)

பெயர்..

வயது..

கல்விப் பயிற்சி..

முகவரி ....

....

நாள்.............1955 கையெழுத்து

அடுத்த இதழில்...

"ஏன் வரிசை எண்: 1"—ல்

பரிசு பெற்ற விடை பிரசுரிக்கப்படும்.

சிலந்திக் கூடு

ஏ. வி. பி. ஆசைத்தம்பியின்

அரிய கற்பனைக் களஞ்சியம்

சூழ்நிலையும் சந்தர்ப்பமும் மனித வாழ்வை ஓர் சிலந்திக் கூடாக மாறுவதைச் சித்தரிக்கும் சிறந்ததோர் கதை விருந்து! விறுவிறுப்பான தமிழ் நடை! படிக்கப் படிக்கப் பரவசமூட்டும் சொற் சித்திரம்.

விலை ரூ. 1—0—0

கலைமன்றம் — சென்னை-1.

எங்களுக்கும் மாஸ்கோவுக்கும் என்னதொடர்பு? நாங்கள் சொல்கிறபடியா ரஷ்ய சர்க்கார் நடக்கிறார்கள்?

—கம்யூனிஸ்டு, கே. டி. ராஜு

இல்லையே! நீங்கள் சொல்கிறபடி நடக்க ரஷ்ய சர்க்காருக்கு 'மூளை' பஞ்சமா என்ன? அவர்கள் சொல்கிற படியல்லவா நீங்கள் நடக்கிறீர்கள் என்று ஒரு மாஜி கம்யூனிஸ்டு மறுப்பு விடலாம்.

*

பதவிச்சண்டை காரணமாக மேஜை நாற்காலிகளைத் தூக்கி எறிந்து 'குஸ்தி' போட்டுக்கொண்டனர் மதுரை குட்டிக் காங்கிரஸ் காரர்கள்.

—செய்தி

வட்டியும் முதலுமாக ஜனநாயகம் வளருகிறது என்று காங்கிரஸ் மேலிடம் கருதுமா?

*

சித்தூர் எல்லைத் தகராறைத் தீர்க்கச் சென்னை—ஆந்திர மந்திரிகள் மாநாடு நடைபெறும்.

—செய்தி

இந்த மாநாட்டு மந்திரிகளுக்குள் வரும் தகராறைத்தீர்க்க ஒரு விசாரணைக் கமிஷனை இப்போதே நியமித்துவிடுவது உடனடியான அவசியமென்று ம. பொ. சி. யார் அறப்போர் ஆரம்பிக்கலாம்.

*

ஷேக்அப்துல்லாவின் குடும்பப் பராமரிப்புக்காக காஷ்மீர் சர்க்கார் ரூ. 1000 மாதந்தோறும் தருவதற்கு முன்வந்தது. பெற்றுக் கொள்ள மறுத்தார் பேகம் அப்துல்லா. இப்போது முன்பாக்கியோடு மாதப் படியும் வேண்டுமென்கிறார்.

—செய்தி

நிழலின் அருமை வெயிலுக்குப் போன பின்பு தெரிகிறதோ?

*

பிரிட்டிஷ் கயானாவில் இந்து முறைப்படி நடக்கும் திருமணங்களைச் சட்ட சம்மதமாக்குவதற்கான மசோதாவைக் கயானா சர்க்கார் இயற்றப்போகிறது.

—செய்தி

இது சென்னை சர்க்காரின் செவியில் ஏறுமா என்கிறார்கள் சு. ம. தம்பதிகளுக்குப் பிறந்த வாரிசுகள்.

*

கொத்தலாவலையிடம் ராஜாஜி மன்னிப்புக்கேட்டார்.

—செய்தி

அவரிடம் மன்னிப்புதான் மலிவான சரக்கு. இதே பிஸினஸில் நமக்கு வாடிக்கையான புள்ளி—நீண்டநாள் ஆசாமிக்காரர் என்று கூறலாம் ஒரு வியாபாரி.

*

குன்றக்குடி அடிகளார் கோயில் களில் கடவுளைத் தமிழிலேயே வழிபடவேண்டுமென்று ஆலோசனை கூறினரல்லவா? உடனே நமது அர்ச்சகர்களுக்கு ஆவேசம் வந்துவிட்டது.

—சங்கப்பலகை

ஆவேசம் என்றல் சாமிகள் மனிதர் களின்மேல் ஏறி ஆடுவது என்று ஒரு ஐதீகம் உண்டாதலால் அர்ச்சகர்கள் மேல் ஆண்டவன் ஏறி ஆடுகிருர். ஆகவே குன்றக்குடி அடிகளார் இனி மேல் டன்கர்க் (வாபஸ்) ஆகலாம்.

*

ஒன்றுக்கு மேற்பட்ட மனைவி களைக்கொண்ட பாகிஸ்தான் தலை வர்களுக்கு மலர்மாலை சூட்டுவதற்குப் பதிலாக, கல்லால் அடிப் போம் என்று பாகிஸ்தான் மாதர் கள் முடிவுசெய்திருக்கிருர்கள்.

—விடுதலை

இந்துஸ்தானிலுள்ள கலிகாலத் தசர தர்கள், தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முன்கூட்டியே உத்தரவாதம் கோருவது நல்லதென்கிருர் ஒரு லீகல் அட்வைசர்.

*

மனைவிமீது சந்தேகப்பட்ட கண வன் அவளுடைய இரண்டு கைகளை யும் கொதிக்கும் எண்ணெயில் விட்டுக் காட்டினல்தான் அவளை ஏற்றுக்கொள்ள முடியுமென்று கூறினராம்.

—செய்தி

அந்தோ! இன்னெரு இராமாயணம் இயற்றித்தரக் கவிச்சக்ரவர்த்தி கம்ப னில்லையே.

*

வாடகை வீட்டில் இருப்பதை விட ஜெயிலில் இருப்பதே மேல்.

:நீதிமன்றத்தில் வாத்தியார்

எல்லா வாத்தியார்களும் ஏகமாக அங்கே போய்விட்டால் பிள்ளைகளையும் அங்கேயே அனுப்பிவைக்கலாம்.

*

கணவர்கள், தங்களின் கால்களைக் கழுவி அந்த அசுத்த நீரையும் பருக வேண்டுமென எதிர்பார்க் கின்றனர்போலும்.

—லக்னே பள்ளி ஆசிரியை

அசுத்தமா? அபச்சாரம்! அபச்சாரம் அந்தக்கால்களைக் கழுவிய நீரிலே 'மைட்மின்' இருக்கிறதே என்று யாரோ வொரு அடிகளார் அறிக்கை வெளியிட் டால் ஆச்சரியப்படவேண்டாம்.

*

முக்கிய அறிவிப்பு

பத்திரிகை சம்பந்தமாகக் கடிதத் தொடர்பு கொளவோர்:

ஆசிரியர்

கலைமன்றம், சென்னை—1.

என்ற முகவரியிட்டே எழுதுதல் அவசியமாகும்.

சந்தா—ஏஜென்ஸி சம்பந்த மான கடிதங்கள், கணக்கு விபரங்கள் மணியார்டர்கள், முதலியவைகளையும் மற்ற, சர் குலேஷன் சார்புள்ள சகல தொடர்புகளையும்......

மானேஜர்

கலைமன்றம், சென்னை—1.

என்ற முகவரிக்கே எழுதுதல் வேண்டும்.

—உரிமையாளர்.

நிராதரவாக விடப்பட்ட ஒரு ஏழையின் இதயத்திலும் புரட்சிக்கனல்......

உச்சமடைந்த அவன் கொடிபிடிப்பதில்லை—கூட்டம் போடுவதில்லை.

அது அப்படிப்பட்ட புரட்சியல்லவே, பின்னர் என்ன? அது வயிற்றுப்புரட்சி

அதன் மறு பெயர்தான்......

இது ஒரு நோய். தீராத தெளியாத நோய். புளித்த ஏப்பம் இருக்கிறவரையில் — அஜீர்ணம் இருக்கிற வரையில் இருந்தே தீரும். இதனைச் சாகடிக்க யாராலும் முடியாது. எத்தனையோ புத்திசாலிகள் — அறிஞர்கள் — மகான்கள முயன்று முயன்று தோல்வியையே பரிசாகப் பெற்றனர். பெரிய அறிஞர் சிகாமணிகளால் .செய்ய முடியாத ஒரு காரியத்தை நான் செய்து விட முடியுமா? முடியும்—முடியாது ஒரு மனப் போராட்டம்.

"டாண்—டாண்" என்று மணி இரண்டு அடித்தது சென்ட்ரல் ஸ்டேஷன் கடிகாரம். காலையில் அந்த இட்லிகார கிழவி நேற்று போட்டு விற்காது தங்கிய கார உருண்டையில் நாலு கொடுத்தாள். அதுதான் இத்தனை நாழி வரை தாக்குப் பிடித்தது. இப்பொழுதே அந்தக் கோரப் பசி தன் வருகையைப் புன் முறுவலுடன் அறிவித்தது. வயிற்றைக் கிள்ளுகிறது. மழைக்குக்கூட நான் பள்ளிக்கூடத்தில் ஒண்டியது கிடையாது. இப்பொழுது எனக்குப் படிக்காமலே ஜீரண உறுப்புக்களைப் பற்றிய பாடம் அத்துபடியாகி விட்டது. கோலைக் கண்ட கருநாகம் போல என் சிறு குடல் கடல் அலையாக துடிக்கிறது. பெண் அலையை ஆண் அலை அபேஸ் செய்வது போலச் சிறு குடலைப் பெருங் குடல் வந்து கவ்வுகிறது.

வெய்யில் கடுமையான வெய்யில். அனல் காற்று வீசுகிறது. இந்தப் பாழும் பட்டணத்தில் வெய்யில் அடித்தாலும் தொல்லை, மழை பெய்தாலும் தொல்லை. வெய்யில் அடித்தால் வெளியே தலைகாட்ட முடியாது—மழை பெய்தால் தங்கவே இடம் கிடைக்காது. குட்டிப் பட்டி ஜமீன்தாரா என்ன? அடையாற்றில் அரண்மனை கட்டுவதற்கு அன்றாடம் கும்பியை நிரப்பவே தில்லை நாதர் ஆடிய ஆட்டத்திற்கு மேல் ஆட வேண்டியிருக்கிறது.

தங்க — ஓய்வெடுக்க எங்களுக்கு நேரம் ஏது? மூர்மார்க்கட் வந்து ரஸ்தாவை கிராஸ் செய்து சென்ட்ரல் பஸ் ஸ்டாப் வந்து சேர்ந்தேன். நடக்க முடியவில்லை. சுருண்டு விழுந்தேன். விழுந்த இடம் மணல் மேடா என்ன? அரைகுறையாக சிமிண்டு பூசிய சிமிண்ட் பிளாட்பாரம். உயிர் பிரிந்தவுடன் என் சவத்திற்குச் செய்யவேண்டிய சடங்குகளை நான் கண்ணால் காணமுடியாது என்ற காரணத்தால் நான் உயிரோடு இருக்கும் போதே என்னை நான்கு பேர் கைப்பாடையில் தூக்கி அருகில் இருந்த ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். பாடை ஆபரேஷன் தியேட்டர் சென்றது பிறகு என்ன நடந்தது என எனக்குத் தெரியாது.

என் மண்டையில் பலத்த கட்டு இருந்தது. நான் ஒரு படுக்கையில் படுத்திருந்த நினைவு வந்தது. விழித்தேன். பக்கத்தில் ஒரு நர்ஸ் அம்மா "உஸ் பேசக் கூடாது" வாய்க்கும் தையல் போட்டாள். மண்டை உடைந்தாலும் உடைந்தது. எனக்கு மணிக்கணக்குபடி பழரசம்—பால்—வெண்ணெய் — ரொட்டி எல்லாம் கிடைத்தது. என்ன இருந்தாலும் பிச்சைக்காரனுக்கு யோகம் வந்தால் சட்டியோடு சட்டி. கப்பல் காரனுக்கு யோகம் வந்தால் கப்பலோடு கப்பல். பதினைந்து நாளைக்கு புது மாப்பிள்ளையை முதல் தடவை அழைத்திருந்த மாமனர் மாதிரி கவனித்தார்கள்— பதினாருவது நாள் கட்டை அவிழ்த்து 'தம்பி— நீட்டு கம்பி' என்றார்கள்.

சென்ட்ரல் கடிகாரம் மணி 9 அடித்தது. முதல் நாள் நினைவு வந்துவிட்டது. மணி 9-க்கெல்லாம் பழரசம் வரும். இன்று நெற்றி வேர்வை வழிந்து வாய்க்கு வந்தது. அதையே பழரசமாக நினைத்து ருசித்தேன். உப்புக் கரித்தது. சேச்சே என்ன மடத்தனம்! "தூ" என்று துப்பினேன். நடந்தேன் — நடந்தேன். பூக்கடை — சைன பஜார்—ஹைகோர்ட் எல்லாம் கடந்துவிட்டேன் காலணாவுக்குக்கூட வழியில்லை. சரி இன்றைக்கு பசிக்கு சமாதி கட்டிவிட வேண்டும். ஆம் அதுதான் சரி என்றது என் மனமும். சரசர வென்று பாரிஸ் கார்னர் அருகில் இருந்த மின்சாரக் கம்பத்தில் ஏறிவிட்டேன். உயிரை மாய்த்துக்கொள்ள எண்ணும் வாலிபனுக்கு ஷண நேர அவகாசம் போதாதா? அதற்குள் "டேய் டேய் கீழே இறங்கு?" என்று அதட்டியபடியே ஓடி வந்தான் சிட்டி போலீஸ். ஆவது என்ன? தற்கொலை முயற்சிக்காக 3 மாத சிறைத் தண்டனை. தீர்ப்புக் கூறிய நீதிபதியை மனமார வாழ்த்தினேன் மூன்று மாதமாவது சற்று நிம்மதிஇருக்கும் அல்லவா? கல்லும் நெல்லும் கலந்த சோருக இருந்த போதிலும் வேளா வேளைக்குக் கிடைத்தது. மூன்று மாதங்களுக்கு பிறகு என் அறைக் கதவு வாய் திறந்து என்னை வெளியேற்றியது. மறுபடியும் வயிற்றுப் போராட்டம்.

ஊர் சுற்றினேன். பூக்கடை சமீபம் சேட் சுடச்சுட இனிப்பு பலகாரங்களை விற்றுக்கொண்டிருந்தான். மூன்று மாத காலமாக சோற்றைத் தவிர வேறு ஒன்றும் அறியாத என் நாக்கு அவைகளைக் கண்டவுடன் யானைப்பாகன்

உடைத்து வைத்திருக்கும்தேங் காய்க்கு துதிக்கையை நீட்டும் யானை ம்ாதிரி என் நாக்கு நீள ஆரம்பித்நது.இரண்டு சொட்டு நீரும் கீழே விழுந்தது. நான் இரண்டுபையுள்ள சில்க்ஜிப்பாக் காரனு?உடனேபர்ஸை எடுத்து 5ரூபாய்நோட்டைஎடுத்து நீட்டு



வதற்கு. அன்னக் காவடி—தககர குவளை—என்னிடம் செப்புச்சல்லி கூடகிடையாது. கண்களைக் கூர்மை யாக்கி சந்தர்ப்பத்தை எதிர்பார்த் துக் கொண் டிருந்தேன். சேட் உள்ளே நுழைந்த சமயம் ஒரு துண்டு மைசூர் பாக்கை எடுத் தேன்—" அரே.........." என்று தொண்டையை கிழித் தபடியே ஓடிவந்தான். இ ர ண் டு அறை மூன்று குத்து நான்கு உதை அதோடு மட்டுமா—பக்கத்து பூக் கடை போலீஸ் ஸ்டேஷன் மூலம் எனக்கு ஒரு வாரம் திருட்டுக் குற்றத்திற்கு சிறைவாசம். மறு படியும் விடுதலை.

இனி இந்த உலகத்தில் வாழ் வது கூடாது. கடலில் வீழ்ந்து உயிரை விட்டுவிடலாம் என்று கடற்கரையை நோக்கி நடந்தேன். பட்டினத்தார் பாஷையில் கூற வேண்டுமானுல் மாயை என்னை மறுபடியும் சூழ ஆரம்பித்தது. கடற்கரை மோகினிகள்—கனவான் கள் —வாலிபர்கள் — எழுத்தாளர் கள்—கலைஞர்கள்—இளைஞர்கள்— எண்ணற்ற புதுக்கார்கள்—நீச்சல் உடையில் மேலைய நாட்டு நங்கை கள்—கட்டாவ் வாயில் அணிந்து அயோத்தி காண்ட வர்ணனையை நினைப்பூட்டும் நமது நாட்டுத் தங்கைகள்—சுருங்கச் சொன்னுல் குட்டி உலகமே குடிபெயர்ந்தது கடற்கரையில். இவைகளைக் காணக் காண எனக்கு உயிர் வாழவேண்டும் என்று சபலம் தட்டியது. ஹைற கோர்ட் கடற்கரையில் இரந்தும் உயிர் வாழ எ ண் ணி இருகை

நமக்குமுன் உயர்ந்த தத்துவ ஞானிகளும், அரசியல் அறிஞர்களும் வாழ்ந்து போயிருக்கிறார்கள். அவர்கள் தனித் தனியாக எங்கெந்த நாடுகளிலோ பிறந்திருந்தாலும் அவர்கள் உலகப் பொதுச் சொத்து. அவர்கள் நமக்கு விட்டுச் சென்ற அரிய உரைகளைத் தமிழிலே தருகிறோம் தமிழ் மக்களின் பார்வைக்கு. கீழ்க் காணும் நாடுகளில் வாழ்ந்த அறிஞர்களின் பொன்மொழிகள் பல இதில் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. கைக்கு அடக்கமாகவும், கணிசமான விலையிலும் கிடைக்கும்.

அமெரிக்கநாட்டுப் பொன்மொழிகள்

தமிழ் நாட்டுப் பொன்மொழிகள்

ஆங்கில நாட்டுப் பொன்மொழிகள்

பிரஞ்சு நாட்டுப் பொன்மொழிகள்

டால்ஸ்டாய் பொன் மொழிகள்

கார்க்கியின் கருத்துரைகள்

ஒவ்வொன்றும் விலை 8 அணா

அழகிய மூவர்ண அட்டைப் பைண்ட்

ஸ்ரீமகள் கம்பெனி
த. பெ. எண். 275
சென்னை-1

நீட்டி இறைஞ்சினேன். செங் தோம் பழைய தேவாலயம் வரை வந்துவிட்டேன். செப்புச் சல்லி கூட எனக்கு ஈவாரில்லை. ஒண்ணே காலணா சிகரட்டை உறுஞ்சும் கல்லூரி மாணவன் முதல் ஒன்றரை ஆயிரத்திற்கு நெக்லஸ் அணிந்த சீமாட்டிவரை யாருமே என்னை சட்டை செய்யவில்லை. இரவும்—பகலும் சந்திக்கும் நேரம். 6½ மணி இருக்கும், இனி இந்தக் கடல்தான் நமக்கு புகலிடம் தரக்கூடிய இடம் என எண்ணி கடல் சமீபம் சென்றேன். கைதட்டி அழைப்பது போல் இருந்தது. திரும்பினேன். ஒரு கனவான் என்னை அழைத்தார். உயிர் வாழலாம் என்ற அற்ப ஆசையுடன் அவர் ஏதாவது தருவதற்குத்தான் நம்மை அழைக்கிறார் என்ற எண்ணத்துடன் அவர் பக்கம் விரைந்தேன். அந்த கனவானுக்கு அருகில் ஒரு பெண் படுத்திருந்தாள். நன்றாக திடகாத்திரத்துடன் கூடிய வாலிபர். அவர் சற்று கலவரம் அடைந்தவர் போல் காணப்பட்டார். என்னை நோக்கி "இவள் என் மனைவி. இவளுக்கு மயக்கம் வந்துவிட்டது. நான் போய் ஒரு வாடகைக் கார் அமர்த்திக் கொண்டு வருகிறேன். அதுவரை இங்கேயே இவளைப் பத்திரமாகப் பார்த்துக்கொள். இந்தா இதை வைத்துக்கொள்." என்று ஒரு ரூபாய் வெள்ளிப் பணத்தை வீசிவிட்டு என் பதிலுக்குக் கூட காத்திருக்கவில்லை பாரம் கழிந்தவர் போல் மாயமாய் மறைந்து விட்டார். வெள்ளிப் பணம். இதைக் கொண்டுபோய் அந்தப் பூக்கடை சேட்டுவிடம் கொடுத்து நிறைய பலகாரம் வாங்கவேண்டும்

அடிவாங்கிய அதே கையால் இந்த ரூபாயை அவன் முகத்தில் வீசவேண்டும். மீத பாக்கியை காலை நாஸ்தாவுக்கு வைத்துக் கொள்வோம் இப்படி சிந்தனை வளர்ந்து கொண்டே போனது. ஆறரை...ஏழரை...எட்டரையும் ஆகிவிட்டது. கனவான் வரவில்லை அந்தப் பெண் மரக்கட்டையைப் போல் அப்படியே போட்ட இடத்தில் கிடந்தாள். நன்றாக உற்று நோக்கினேன். முகத்தில் சிறு கீரல்கள் காணப்பட்டன, உடம்பைத் தொட்டேன், சில்லிட்டது. மூக்கில் விரல் வைத்தேன், மூச்சு இல்லை. "ஐய்யோ! ஐய்யோ!!" என்று நான் அலறியேவிட்டேன். ரோந்து வந்த போலீசார் வந்தனர். பிரேதம் பரிசோதனைக்குப் போனது. நான் வழக்கம்போல் சிறைக் கம்பிகளை எண்ணினேன். கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. ஆயுள் தண்டனை பரிசாகக் கிடைத்தது. இனி எனக்கு எந்த வேலையும் கிடையாது. யாரிடத்திலும் நான் கை நீட்ட வேண்டியதில்லை. பசி உள்ள உலகத்தில் நான் வாழ்க்கை நடத்த வேண்டியதில்லை. 9 × 12' உள்ள அறைதான். இருந்தாலும் எனக்கு அதுதான் சொர்க்கம்.

பொன்னான கருத்து

இதயம், உணர்வு, ஆசை, அபிலாஷை, இலட்சியம்—இவையெல்லாம் வேண்டுமானால் ஒவ்வொரு மனிதனுக்கும் வேறுபட்டனவாக இருக்கலாம்; ஆனால் இவையெல்லாம் எல்லா மனிதர்க்கும் உரியவை.

—இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

துப்பறியும் நிபுணர் தேவை

மேலே காணும் 'பசி' சிறுகதையை முடித்த கட்டத்திலேயே மற்றொரு கதையை உருவாக்க வேண்டும். அவ் எளியவனுக்கு ஒரு ரூபாய் வெள்ளிப் பணம் தந்து கீழே கிடக்கும் பெண்ணைப் பார்த்துக் கொள்ளுமாறு சொல்லி விட்டுப்போன கனவான்வரவேஇல்லை. கீழே கிடந்ததோ பிணம். அதனால் நிரபராதியான ஏழை சிறைக் கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கிறான், இப்போது. அக்கனவான் யார்? அப்பெண் எப்படிப் பிணமானாள்? தற்கொலையா? அன்றிக் கொலையா? என்ற மர்மங்களை அறிந்து நிரபராதியான அந்த எளியவனைச் சிறை மீட்க வேண்டும். அவனும் வெளியே வந்தவுடனே பணக்காரனாக ஆகிவிட வேண்டும். அப்படி அவன் ஆவதற்குத் துப்புத் துலங்க வேண்டும். எங்கே எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம். சிறந்த துப்பறியும் நிபுணருக்குப் பரிசு உண்டு-கதையும் கலைமன்றத்தில் பிரசுரமாகும்.

—ஆசிரியர்

அனுப்பும் முகவரி:

"துப்பறியும் நிபுணர்"

கலைமன்றம் சென்னை—1.

காமிரு வைத்திருப்போர் கவனிக்க

அழகான இயற்கைத் தோற்றங்களை — மனதை மகிழ்விக்கும் காட்சிகளை — நீங்கள் புகைப்படங்களாக எடுத்து வைத்திருப்பின் உடனே எங்கட்கு அனுப்புக.

ஒவ்வொரு படமும் 'புல் சைஸ்' அளவில் இருக்க வேண்டும்.

முதல் தரமான புகைப்படத்திற்குப் பரிசு	ரூ. 10—
இரண்டாம் பரிசு	ரூ. 5—

புகைப்படக் கலைப்பகுதி,

கலைமன்றம் — சென்னை-1

புகைப்படக் கலைப்பகுதி
நுழைவுச் சீட்டு

பெயர் ....

முகவரி: ....

....

காமிருவின் பெயர்: ....

இணைத்துள்ள படங்களின் எண்ணிக்கை } ....

....

நாள்: 1955

கையெழுத்து

வேண்டாம் அத்தான்

[பொள்ளாச்சி. மீறு]

அத்தான்! உங்களின் சிங்கார வாழ்வுக்கு—சொல்லைதரும் விஷப் பூச்சி நான் என்று கடிதத்தில் குறிப்பிட்டுள்ளீர். அத்தான்! பெண்ணினத்தை மண்ணிலே நெளியும் புழுவென எண்ணி-பேசா மடந்தையர்தானே, இப் பேதையர் கூட்டம் என்ற இறுமாப்பினால் தானே — என்னைப் போன்ற இளம் பெண்களை கல்யாணம் என்ற பெயரினால், கழுத்திலே மஞ்சள் கயிற்றை ஏற்றி விட்டு, பின் சொத்தைக் காரணங்கள் பல காட்டி, ஒதுக்கி வைத்து விடுகின்றனர் உம் போன்ற ஆண்கள் பலர். அத்தான்! பெண் உள்ளத்தை எவராலும் புரிந்து கொள்ள முடியாது என்பதைத் தாங்கள் உணர்ந்திருக்கமாட்டீர்!" நீராழங் கண்டாலும் காணலாம், ஆனால் நேரிழையாரின் நெஞ்சாழம் காணமுடியாது" என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர் என்றே நினைக்கிறேன். என்னைப் போன்ற இளம் பெண்கள் நடக்கும் போதும்—பேசும் போதும் —சிரிக்கும் போதும் ஒவ்வொரு அர்த்தம் இருக்கும் என்பதை இனியாவது தெரியாது இருந்தால் தெரிந்துகொள்ளுங்கள்! கணவன் செய்யும் தவறை — குற்றத்தைப் பொறுத்துக்கொள்வாள். ஏனெனில் கல்லானாலும் கணவன்— புல்லானாலும் புருஷன் என்ற கொள்கையைக் கடைபிடிக்கும் பெண் குலத்தில் பிறந்த காரணத்தினால். ஆனால் காலமறிந்து கணவனைத் திருத்துவாள் என்பது மட்டும் உண்மை! அது மட்டுமல்ல! குண்டலகேசி கதையைத் தாங்கள் படித்திருப்பதோடு, சினிமாவும் பார்த்திருப்பீர்கள்! கட்டிய மனைவியை அலட்சியம் செய்து— சிறப்புடன் தேடிவந்த செல்வ வாழ்வை—தன் சின்ன புத்தியால் கெடுத்துக்கொண்ட துரோகியை, தனது கணவனால் உலகத்தாருக்கு உபத்திரவம்தான் உண்டு என்ற உண்மையை அறிந்த பெண்மணி என்ன செய்தாள் என்பது தங்களுக்குத் தெரியும்.

மாலையிட்ட மணவாளனுடன் மகிழ்ச்சியாக வாழ்வோம் என்று இன்பக் கனவு கண்டவள்—மனித

சமூகத்தை நாசமாக்கும் ஒரு விஷ ஜந்துதான் தனது கணவன் என்று தெரிந்தும் ,தன் கணவனைத் தலை மேல் உட்கார வைத்துக்கொண்டு ஆடவில்லை அவள். பின் அவள் முடிவு? எவளது உள்ளத்தை உடைத்தானோ—எவளது மனதை புண்ணடையச் செய்தானோ—எவளை ஊரறிய—உலகறிய தன் மனைவி என்று ஏற்றுக்கொண்டானோ அந்த மனைவியாலே கொல்லப்பட்டான்! ஆம்! அழிக்கப்பட்டான்! பெண் ஆக்குவதற்கு மட்டுமல்ல—அழிப்பதற்கும் பின் வாங்கமாட்டார்கள்! எந்த ஆண் குலத்தைப் பெற்று—சீராட்டிப் பாராட்டி வளர்த்து — வாலிபத்திலே மகிழ்வூட்டுகிறாளோ- அந்தப் பெண் குலத்தை உதாசீனப் படுத்தினால்—அது எவ்வளவு தவறு என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்! அத்தான்! நான் ஒன்றும் பத்தாம் பசலிப் பெண்ணல்ல. பாரதியாரின் புதுமைப் பெண்! நிமிர்ந்த நன்னடையுடன், நேர் கொண்ட பார்வையுடன் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளுடன் வாழும் புதுமைப் பெண்ணுலகின் குரல் நான்! இன்னும் கூறுகிறேன்! வாழ்க்கைப் படகைச் செலுத்தும் உரிமை ஆண்களுக்குத் தான் என்ற காலம் மலையேறி விட்டது. ஆணுக்கு சரி நிகர் சமானமாக வாழுங்காலம்! ஆனால்.........கொண்ட கணவனை அலட்சியப் படுத்தமாட்டாள் புதுமைப் பெண்! மேனாட்டு நாகரீகமெனும் மாயவலையில் வீழ்ந்து தத்தாரிபோல் திரியும் பேயுமல்ல நான்! அத்தான்!......நீங்களிட்ட மாலையின் பெயரால் — மஞ்சளின் பெயரால் கேட்கிறேன்! மாலையிட்டீரே தவிர—என் மனதை நோக விட்டுச் சென்றுவிட்டீரே! நம் தாய் தந்தையர் செய்த தவறுக்காக என் வாழ்வை குலைக்க வேண்டுமா?

என்னையும் வேண்டாம் என்று துணிந்து சொல்லாது—ஊருக்குச் சென்ற பின் கடிதம் என்ற பெயரால் தாங்களனுப்பிய தூற்றல் கதம்பம் கிடைத்த பின்தான் இந்த நீண்ட கடிதத்தை எழுதலானேன். "பெண்கள்தான் உலகின் கண்கள்! எங்கு பெணகள் உயர்ந்த நிலையுடன் வாழ்கிறார்களோ—அங்குதான் உண்மையான நாகரீகம் வாழ்கிறது. மனைவி யென்ற பெயரால் பெண்களை அடிமையாக்கி — இன்பக் கருவிகளாக்கும் அறியாமை ஒழிய வேண்டும். உலகின் முன்னேற்றம் பெண்களிடம்தான் உள்ளது" என்று நாட்டின் பற்பல அறிஞர்கள் கூறிவரும் போது, தாங்கள் மட்டும், பத்தாம் பசலி எண்ணங்களுக்குத் தலை குனிந்து நிற்பதைக் கண்டு உண்மையாக வருந்துகிறேன்! கொண்ட கணவனைக் கொன்ற குண்டலகேசியின் பரம்பரையல்லவா நீயும் என்று கேலி மொழியும் பேசியுள்ளீர் கடிதம் வாயிலாக! சமுதாயத்தைக் கொடுமை செய்யும் தன் கணவனை, சீறிவரும் நாகத்தை — கழுத்தில் எடுத்துப் போட்டுக் கொள்வது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ அவ்வளவு மோசமானது —அவனைக் கொண்டாடுவது என்பது. வெறிபிடித்த மிருகமாம் தன் கணவனைக் கொன்றுவிட்டு— சீமான் மகனை மணந்து—சிங்காரமாக வாழவில்லை அவள்! சீற்ற நெறிகளை கைக்கொள்ளும் செங்

தமிழ் நாட்டாரிடையே—செம்மையான கருத்துக்களைப் பரப்பும் குண்டலகேசியாக மாறினன் என் பதைப் புரிந்து கொள்ளும். கன்னிப் பொன்னியாம் கவின்பெறு காவிரி நாட்டைச் சேர்ந்த கோவலனையும், கண்ணகியையும் தங்களது பார்வைக்கு எட்டியது அதிசயம் தான். குண்டலகேசியின் செயலை தூற்றியிருக்கிறீர். அதற்கு துணையாக கண்ணகியின் செயலைக் குறிப்பிட்டுள்ளீர். மாதவி! ஆம்! அந்த மஞ்சத்து பஞ்சவர்ணக் கிளியுடன் கொஞ்சும் மொழி பேசிக்கொண் டிருந்தான். ஆயின் ஆடலழகியாம்—ஆனந்தவல்லியாம் மாதவியுடன் நீண்ட நாள் வாழவில்லை. கணவன் பிரிந்தான் என்ற

கடுந் துயர் பொழுது — கண்ணகி கன்னி வாழ்க்கை வாழ்ந்தாள். அவள் காட்டிய பொறுமை—காதல்—அந்த மாசரும் பொன்னும் கண்ணகியிடமே வந்தடைந் தான் கோவன் இறுதியாக. ஆம்! சீரான வாழ்வு வாழ்ந்த பெருமகன் கோவலன் எங்கே? இரத்த வெறிகொண்டு நித்தம் — பித்தம் பிடித்தலைந்த குண்டலகேசியின் கணவன் எங்கே?

பெண்கள் நீதியுடன் வாழ்ந்தால் மட்டும் போதுமா? ஏன் ஆண்களும் அந்த நீதியைப் பின் பற்றக்கூடாதா? ஆண் — தான் நினைத்த பெண்களை மணக்கலாம். ஆனல் பெண் மட்டும்......? சிந்தித்துப் பாருங்கள்! பின் சிந்திக்க வாருங்கள். ஆளப்பிறந்தவன் ஆண்! ஆமைபோல் அடங்கி நடப்பது பெண்! பெண் மட்டும் கற்பரசியாக வாழவேண்டும். ஆண்களுக்கு கற்பு கிடையாது! நல்ல நீதி!

அத்தான்! தங்களது எண்ணங்கள் மிகவும் பிற்போக்கானவை! நீங்கள் அக்பர் காலத்தில் அவதரித்திருக்க வேண்டியவர். இந்த அணுயுகத்தில் தப்பித் தவறிப் பிறந்துவிட்டீர்! இரக்கமற்ற இதயம் கொண்ட சிலர் — பருவத்தின் எழில் கோட்டிலே நின்று தவழும் —புன்னகையாளை — அவளின் இளம் உள்ளத்திலே ஊறும் காதல் வெறியைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு, சுயநல சூது திட்டப்படி தன் இச்சை தீர்ந்தவுடன், கொச்சை மொழி பேசி—நடு வீதியிலே திண்டாடவிட்டு மறையும் போலிகளின் முகமூடியைக் கிழித்தெறியும் பெண் குரல் கிளம்பிவிட்டது அத்தான்! ஆயின் என் உரிமை வேட்கையை —என் இன்பக் கனவை, தாங்கள் தவருகப் புரிந்துகொண்டு கன்னியர் சமூகத்தின் மீது சொல் எனும் கல் கொண்டு வீசுகிறீர்!

பெண் குலத்தின் பேயாசை காரணமாகத்தான் ஆண்கள் ஆண்டியாக மாறிச் சேலை கட்டிய மாதரை நம்பினல் தெருவில் நிற்பரே என்ற பாடலைப் பாடியிருப்

பொள்ளாச்சி. மீனு எழுதியிருக்கும் 'வேண்டாம் அத்தான்' என்ற இக்கடிதமும்-எழுதியிருக்கும் முறையும், போக்கும், கருத்துக்களும்—புதியவையாக, பிடிக்காதவையாக யிருக்கலாம் பலருக்கு. இக்கடிதத்திற்கு மாறுபட்டோர்—குறிப்பாகப் பெண்கள் மறுப்பாகத் தங்கள் கருத்துக்களை உடனே எழுதி அனுப்பினல் விவாத மேடையிலே இடம் பெறும். இப்பகுதியில் அவரவர் கருத்துக்களை எழுதலாம். சிறந்த கடிதத்திற்கு பரிசு உண்டு.

பதைக் காட்டினீர். ஆனால் இன்றைய நிலையில் யார் நடுத்தெருவில் நின்று தவிப்பது—கிணற்றிலே — ஆற்றிலே — மரக்கிளைகளிலே பிணமாகத் தொங்குவது யார்? யார்? வாழவேண்டிய இளம் பெண்களன்றோ’ ஆண்களுக்கே உரித்தான அவசர புத்தி காரணமாக—அள்ளிக்கொட்டினீர் வார்த்தைகளை—சிந்திக்கும் திறமையற்றவர்கள் என்று! அதனால் பெண்களை நீதிபதி வேலைகளுக்கு அனுமதிப்பதில்லை என்றீர்! பெண்கள் சிந்திக்கும் திறமையற்றவர்கள் என்றால் மங்காப் புகழுடன்—மணி மகுடம் பூண்டு —பாண்டிய நாட்டைப் பரிபாலித்தாளே—வீராங்கனை மங்கம்மாளை நினைத்துப் பாருங்கள்! ஜான்சிராணியை எண்ணிப் பாருங்கள்! இன்னும் எத்தனையோ அறிவுச் செல்வங்களை அவனிக்குத் தந்து—சீருடன் வளர்த்து, பேருடன் உலவச் செய்யும் பெண் குலம்—பேய்க் குலமல்ல!

சிந்திக்கும் திறமையற்றவர் அரிவையர் கூட்டம் என்பது அறிவுடைமையாகாது! பெருமையும் தராது! மயிலின் ஆட்டத்தை ரசிக்கத் தெரியாத மந்திகளும் உண்டு, குயிலின் இனிமையை அனுபவிக்கத் தெரியாத கோட்டான்களும் உண்டு. வாழ்வின் சுவையறியாத வனிதாமணிகளும் உண்டு. அதற்காக மங்கையர் குலத்தையே தூற்றினீர்! இல்லை! சேற்றை வாரி யிறைத்தீர்! முதலில் பணம்தான் தேவை. பின் நான் வேண்டும். அப்படியெனில் என்னை ஏன் திருமணம் செய்து கொண்டீர்? தங்களின் கண்களை மூடியிருக்கும் பணத்தையே தங்களின் இருதயத்தை இரும்பாக்கிய பணத்தையே — பல பெண்களின் வாழ்க்கைக்குச் சமாதி கட்டிய பணத்தையே—ஆண்களின் இரட்சகன் என்று கூறும் பணத்தையே—மணம் என்ற பெயரினால் சொந்தமாக்கி யிருக்கலாமே!

தங்களின் உழைப்பிலே உருவாக வேண்டிய பணத்தை—ஒரு பெண்ணை மணம் செய்துதானா காணவேண்டும்! ஐயகோ! உழைப்பின் உயர்வு அறியாதவரா என்

வளர்ந்து வரும்

திராவிட இலக்கியத்தின்

விடிவெள்ளி நூல்கள்

		ரூ.	அ.
மகாகவி பாரதியார்	...	0	8
தீ பரவட்டும்	...	1	0
தேன் துளிகள்	...	1	0
புராண மதங்கள்	...	1	0
மறுமலர்ச்சி	...	1	0
இதன் விலை 3000	...	0	12
தேவலீலைகள்	...	0	8
நமது முழக்கம்	...	0	8
களஞ்சியம்	...	0	8
கொலைக்களம்	...	0	8
பெருமூச்சு	...	1	0
சிந்தனை ஆழி	...	1	0
களத்தில் கருணாநிதி	...	1	0
இரத்தச் சுவடு	...	1	0
புராண போதை	...	1	0
பலிபீடம் நோக்கி	...	1	0
இனமுழக்கம்	...	1	0
உணர்ச்சி மாலை	...	0	8
தனி அரசு ஏன்?	...	1	0
முல்லைக் காடு	...	0	12

ஸ்ரீமகள் கம்பெனி,

சென்னை-1.

கணவர்? வாழ்க்கையின் இன்பம் அறியாதவரா என் கணவர்? பெண் கொடுத்தால் மட்டும் போதாது! பொன்னும் கொடுக்க வேண்டுமாம்! அத்தான் நாங்கள் ஏழைகள்! எங்கே போவோம் நீங்கள் கேட்டபடி தங்கள் காலடியில் கொட்ட!

அத்தான்! படித்தால் மட்டும் போதாது! பட்டம் பெற்றால் மட்டும் போதாது! பண்புடன் வாழத் தெரியவேண்டும்! நாகரீகமாக வாழ்ந்தால் மட்டும் போதாது! நாணயமாக சமூகத்தில் நடக்கத் தெரியவேண்டும்! வேண்டாம் அத்தான்! என் வாழ்க்கையைப் பாழாக்க வேண்டாம்! என் மஞ்சளுக்கு மாசு தேட வேண்டாம்! நான் தேவையில்லை என்றால் சட்டப்படி நீதிமன்றத்தில் சந்திக்கத் தயாராகுங்கள்! ஆனால் என் போன்ற அபலைகளுக்கு வக்கீல்கள் கிடையாது. எனக்கு நானே வக்கீல்.

ஆண்களைப் போல் பெண்களும் நடக்கத் துணிந்தால் என்னவாகும் என்பதை சற்று சபலத்தை ஒதுக்கிவிட்டுச் சிந்தித்துப் பாருங்கள்! இறுதியாகக் கூறுகிறேன்! நான் எழுதிய விஷயங்களை நன்கு படியுங்கள்! எதைத் தாங்கள் நல்லது என்று கருதுகிறீர்களோ? அதைத் துணிந்து செயலில் காட்டுங்கள்! பெண் பேசாது இருந்தால் வம்பு இல்லை. தொல்லை ஆனால் பேச ஆரம்பித்தால் உலகப் பிரளயம் என்கிறார்களே, அது உண்மைதான்! வேண்டாம் அத்தான்! நம் வாழ்வை விபரீதமாக்கவேண்டாம்.

இங்ஙனம்
தங்களின் இன்முகம் மறவா
கற்பகம்

சிறப்பு மிக்க செயற்கை வைரங்கள்

இயற்கை அன்னை பல்லாண்டுகளாகத் தன் அகத்தில் வைத்து விளைவிக்கும் உண்மையான வைரத்தை விஞ்ஞானிகள் இப்பொழுது ஆராய்ச்சிக் கூடங்களில் சில நிமிஷங்களில் தயாரிக்கின்றனர். நியூயார்க்கிலுள்ள ஜெனரல் எலக்டிரிக் கம்பெனியின் விஞ்ஞானிகள் இத்துறையில் வெற்றியடைந்திருக்கின்றனர். உலக வரலாறு முதன் முதலாக இப்பொழுதுதான் செயற்கை வைரம் கண்டிருக்கிறது.

இச் செயற்கை வைரங்களுக்கும் இயற்கை வைரங்களுக்கும் வித்தியாசமே இல்லை என்பது ஆராய்ந்து கண்ட உண்மை. எக்ஸ்ரே பரிசோதனை, ரசாயன ஆராய்ச்சி, திண்மை ஆராய்ச்சி ஆகியவையால் இது உறுதி செய்யப் பட்டுள்ளது. இந்தச் செயற்கை வைரத்தால் மற்ற வைரங்களையும் அறுக்கலாம்; இவ்வாறு வைரங்களை அறுப்பதற்கு மனிதன் இதற்குமுன் வேறொரு பொருளும் கண்டு பிடித்ததில்லை.

ஆயினும் இன்று செய்திருக்கும் செயற்கை வைரங்கள் இயற்கை வைரக் கற்களைப் போல அழகு செய்யும் மணிகளாக விளங்கவில்லை. அவை சிறியவை; அறுப்பது, வர்ணம் தீட்டுவது முதலிய அவசியமான தொழில்களுக்கு வேண்டிய கருவிகள் தயாரிப்பதற்குப் பயன்படும் சாதாரண வைரங்களைப் போன்றவை.

* மனிதஇனம் உலகெங்கும்வியாபித்துக்கிடந்தாலும்-நெருங்கி வாழ்ந்தாலும்.
* அவ்வினத்தாரிலேயே பெரும்பாலார் அனாதைகள்......!
* அவர்கட்கு உற்றாரில்லை—உறவினரில்லை. அவ்வாறே இருப்பினும் அனாதைகள்தானே!
* அம் மானிடப் பிறவிகளின் பரிதாப நிலையைச் சுட்டிக் காட்டுகிறது.......

கடகடவென்று ஓடிவந்தது ஓர் வண்டி. கணநேரத்தில் காதவழியோடியது, அதற்குள் அதன் சக்கரங்களினடியில் சிக்கிச் சிதறுண்டு போன புழுப் பூச்சிகள் அநேகம். அவற்றைப்பற்றிக் கவலைகொள்வோர் யார்? அவற்றின் சாவைக் கண்டு கண்ணீர் விடுவோர் யார்?

கடகடவென்று ஓடிவருகிறது காலதேவனின் வண்டி. அதன் சக்கரங்களில் நசுங்கி நாசமாகும் மனிதப் பிறவிகள் அநேகம். அவற்றிலும் பூச்சிகளைப்போல் கவனிப்பாரற்று நசித்து மாளும் மக்கள் அநேகம். அவர்களின் கோர வாழ்விற்கு—பயங்கர முடிவிற்கு பச்சாதாபப்படுவோரே இல்லையா?

“துயருக்கோர் முடிவில்லை. துன்பத்திற்கோர் எல்லையில்லை.”

“விடிவு நாளென்றோ எங்கள் வாழ்நாளில்?”

“அழிந்துவரும் எங்கள் வாழ்வில் இன்பநாள் மலர்வதெப்போ?”

இவ்வாறு ஏங்கிக்கிடக்கும் மக்கள் எத்தனைபேர்? “ஆனந்த வாழ்க்கை வேண்டாம்; அரை வயிறு சோறு போதும்” என்று தவிக்கும் தரித்திரர் எத்தனைபேர்? “ஆதரவில்லை. அனாதைகள் நாங்கள். அரசாங்கமே எங்களை அரவணைக்கமாட்டாயா?” என்று தொண்டை கிழியக் கத்தி அலுப்புற்று அமைதியடைந்தோர் எத்தனைபேர்?

அனாதைகளென்றால்? யாருமற்றவர்கள். யார் அந்த அனாதைகள்? மனிதப் பிறவிகள். நம்மைப்போல் மனிதச் சதையுடன், பண்புடன் பிறந்தவர்கள். நம்மைப்போல் தந்தை தாயின் கூட்டுறவினால் பெற்றெடுக்கப்பட்ட மனிதமாணிக்கங்கள். பெற்றவர்கள் இருக்க

அவர்களை எவ்வாறு அனாதைகள் என்று சொல்ல இயலும்? பெற்றவர்களின் முன்னோர், அவர்களின் சுற்றத்தார், அவர்களின் முன்னோர், இவ்வாறே கணக்குபோட்டு பார்த்தோமானால் இதைப் படிக்கும் மனிதனே! நீயும் நானுமே உறவினர். யாருமற்றவர் என்று விலக்கப்படும் அவ்வனாதை மக்களும் நம் உறவினர். இவ்வாறு பின்னப்பட்டுள்ள சமுதாயத்தில் அனாதைகளென்றும், திக்கற்றவர்களென்றும் விலக்கப்படுவது ஏன்? அந்தஸ்து, மதிப்பு இவற்றினால் அம்மக்களை எடைபோடுகிறோம்; அவர்கள் குறையுடன் காணப்படுவதால் அனாதைகளென்று விலக்கி விடுகிறோம். சாதி, குலம் என்ற வண்ணக் கண்ணாடிகளின்மூலம் அவர்களைப் பார்க்கின்றோம். அவர்கள் நிறம் மாறித் தோன்றுவதால் அனாதைகளென்று தள்ளிவைக்கிறோம். விலக்கப்படும் அவ்வனாதைகளின் அவல வாழ்வை அறிந்தோர் யாருமே அழுது வருந்தாமலிருக்க மாட்டார்கள். வெட்ட வெளியில் நிற்கும் அப்பட்ட மரத்தைப் பாருங்கள். தன் தனிமையை நினைந்து நினைந்து அழுதுருகிப் பட்டுபோனதோ என்று பச்சாதாபப்படச்செய்யும் அம்மரத்தின் நிலை. அந்த பட்ட மரத்திலேயும் ஒரு குருவிக்கூடு. தாய்ப் பறவையுடன் நான்கு குஞ்சிப் பறவைகள் வாழ்ந்துவந்தன அச்சிறுகூட்டிலே

பட்ட மரத்தினடியிலே பஞ்சத்தினால் கெட்ட குடும்பம் ஒன்று கிடந்தது. தலைவனிழந்த குடும்பம் அது. தந்தை யிறந்தான்; பசியின் வேதனையால் தாய் வாழ்கிறாள் சேயின் பாசத்தால். ஆம், அம்மரத்தினடியிலே வீற்றிருக்கும் அம்மாதின் உயிரை உடலுடன் ஒட்டிவைக்கும் பிசினைப் போலிருந்தது அக் கைக்குழந்தை. குழந்தைப்பருவம்! குதூகலமான பருவம். ஏதுமறியாது ஏகாந்தமான வாழ்வை நடத்தும் பருவம். ஆனால் அக்குழந்தையோ பசியால் புழுப்போல் துடித்தது ஒரு சொட்டுப் பாலிற்காகப் பலசொட்டு கண்ணீரை வடித்தது. பால்மணம் மாறா பச்சைக் குழந்தையின் பரிதாப நிலை மட்டுமல்ல நம் மனதை உருக்குவது. அக்குழந்தைக்கு உடையாளின் உள்ள முருக்கும் நிலையும் தான். தீனியின்றேல் எச்சில்களைத் தின்றாவது தன் கன்றிற்குப் பால் சுரக்கச்செய்யும் தாய்ப்பசு. தீவனமற்றுப்போனால், காகிதத்தைத் தின்று குட்டியைப் பேணிவளர்க்கும் கழுதை. அவளோ அவற்றை விடத் தாழ்வுற்ற நிலையிலிருந்தாள். ஏதும் கிடைககாமல் பட்டினியினாலே பரிதவித்தாள். ஒட்டிய வயிறு! காய்ந்து சுருங்கிய மார்பு! இவற்றுடன் காட்சியளித்தாள்.

"பட்டுப்போன என் வாழ்விற்கு இப்பட்டமரமே போதும். பட்டினி கிடக்கும் எங்களுக்குஇத்த வெட்ட வெளியே போதும். ஊரினிடையே மனிதக்கழுகுகள், குள்ளநரிகள், ஓநாய்கள்; இவைகளின் நடுவே நாங்கள் மாமிசத் துண்டுகளாகக் கிடக்கவேண்டாம்." அப்பட்ட மரத்தடியிலே தங்கியிருப்பதற்கு அவள் சொல்லும் தகுதியான காரணமிது.

அப்பெண் குருவிக்கூட்டை நிமிர்ந்து நோக்கினாள். தாய்ப் பறவை பறந்து வந்தது. குஞ்சுகள் கும்மாளமிட்டன. தான் எடுத்துவந்த இரையை அவற்றின் வாயிலே திணித்தது தாய்ப்பறவை

அக்காட்சியைக் கண்டதும் பெருமூச்சுடன் தன் குழந்தையைத் திரும்பி பார்த்தாள் அவள். அது வீறிட்டழுதது. அழுதழுது வயிறு குழிவிழ அமைதியுற்றது. மறுபடியும் குருவிக்கூட்டை நிமிர்ந்து நோக்கினுள் அவள். தின்றுமிகுந்த இரை கூட்டினின்று கீழே சிந்தியது. அவள் கண்களிலிருந்து கண்ணீர் சிந்தியது. அவள் சமுதாயத்தைத் திட்டவில்லை. செவிட்டுச் சமுதாயத்தைத் திட்டித்தான் பயனென்ன? அவள் சமுதாயத்தைப் பார்த்துப் பல்லைக் கடிக்கவில்லை. குருட்டுச்சமுதாயத்தைப் பார்த்து பல்லைக்கடித்துத்தான்பயனென்ன?

அங்கிலையிலும் அவள் குழந்தை அவளுக்குப் பாரமாகத் தோன்றவில்லை. ஆனுல் குழந்தையின் அழுகுரல்மட்டும் அவள் மார்பைக் கிழித்து இரத்தம் வழியச் செய்வதைப்போன்ற வேதனையை அளித்தது.

"நாளைக்கென்று கவலைப்படாதிருங்கள். கடவுள் அதற்காகக் கவலைப் படுபவராயிருக்கிறுர்."

"எல்லா உயிர்களும் ஆண்டவனிற்குள் இங்குறகின்றன."

"ஆனுல்......! ஆனுல் ....!" அவளழுதாள்.

"என்னுயிரும் என்னருமைக் குழந்தையினுயிரும் அலைகழிக்கப் படுகின்றனவே. இதற்கென்ன பெயர்? ஆண்டவனின் அன்புச் சோதனையென்ருே? பன்றிக் குட்டிகளின் பரிதவிப்பைக்கண்ட முழுமுதற்கடவுள் பன்றியுருவெடுத்துப் பால்கொடுத்தாராம். மனிதப் பிறவிகள் நாங்கள், பட்டினியால் இங்கே சாகிறுேம்!"

அவள் மனதில் பழைய நினைவுகள் பொங்கிவழிந்தன.

"கோவிலிலே ஆண்டவனுக்குப் படைத்த அன்புக் காணிக்கை எத்தனை? ஏற்றிவைத்த திருவிளக்குகள் எத்தனை? 'காலமெல்லாம் இவ்வாறே கரைந்தோடிவிடும். செத்தபின் சுவர்க்கம் பெறலாம்' என்ற எண்ணத்திலே செய்தேன் அத்தனை படைப்புக்களையும்! ஆண்டவன் நம்மைப் படைத்தான் நாம் அவனுக்கு இனிய சுவைமிகுந்த தின்பண்டங்களைப் படைப்போம் என்று அளித்த தட்டுகள் எத்தனை? ஆனுல் கண்டதென்ன? இப்பொழுது நேர்ந்துள்ள கதியென்ன? செத்தபின் சுவர்க்கம் வேண்டிய நான் சாகுமுன்பே நரக வேதனையை யனுபவிக்கிறேனே! ஆண்டவன் பெயரினுல்செலவிட்ட பணமிருந்தால் இங்நேரம் ஆனந்த வாழ்வை நடத்தியிருப்பேனே என் கணவனுடன்! கணவன் இறங்

சிந்தனைக்கு

சட்டத்துக்குக் கண் இல்லை. நீதிக்கு கால் இல்லை. சமூகத்துக்கு காது இல்லை.

உலகம் கசப்பான உண்மையை விரும்புவதில்லை. இனிய கனவுகளே அதற்கு வேண்டும்.

உலகம் யாரைக் கெட்டிக்காரன் என்று சொல்லுகிறதோ அவர்கள் ஒன்று முட்டாளாக இருப்பார்கள், அல்லது பித்தலாட்டக் காரர்களாக இருப்பார்கள்.

அறியாமையும் வறுமையுமாகிய கத்தரிக் கோலுக்கு இடையில் நாம் கோடிக்கணக்கான நிரபராதிகளை நசுக்கிவெட்டுகிறேரும்.

—காண்டேகர்

தான். கைம்மை பூண்டேன். வறுமை வலியவந்து அணைத்துக் கொண்டது. எங்கள் குடும்பப் பெருமையெல்லாம் அகன்றோடி விட்டது. இப்பொழுது நாங்கள் அனாதைகள். அன்று எங்கள் பக்திச் சிரத்தையிலே பங்குகொண்ட பரம்பொருள்,வீடுபேறு அளிக்கும் ஆண்டவன், எங்கே இப்பொழுது? இறந்தபின் கிடைக்கும் சுவர்க்கம் வேண்டாம் எங்களுக்கு. உயிர்வாழ உணவளித்தால் போதும். செழித்திருந்தகாலத்திலே எங்களிடம் கொழுக்கத் தின்ற ஆண்டவனே! பசியால் வழியின்றி விழித்து நிற்கும் எங்களை அரவணைப்பதெப்போ? நீ வருவாய் உன் அருள் கிட்டும் என்று மதிகெட்டு மயங்கிப் பசியோடு பரிதவித்து மாண்டபின் நீ சொர்க்கத்தையளிப்பதாயினும் வேண்டாம் எங்களுக்கு! வேண்டவேவேண்டாம்!"

அவள் கன்னத்திலே கண்ணீர் காய்ந்துகிடந்தது. குழந்தையின் உதடுகள் காய்ந்து கருத்துக்கிடந்தன.

இரவு நெருங்கியது; குளிர்க்காற்று வீசத்தொடங்கியது. குஞ்சுகள் குளிரால் நடுங்கிக் கீச்சிட்டன. தாய்ப்பறவை தன் சிறகுகளினால் அரவணைத்துக்கொண்டது அவற்றை. குழந்தை அலறியது குளிர்தாங்காமல். அவள் அதையெடுத்து மார்புடன் அணைத்துக்கொண்டாள். குளிரின் வேகம் அதிகரித்தது. அவளும் நடுங்கினாள். பசிவேதனை ஒருபுறம். குளிரின் சோதனை மறுபுறம். குழந்தையின் பாசம் தன்னை யிழுக்க, தன்னைவிட்டுச்செல்லும் உயிரைப்பற்றி யிழுத்தபடி யிருந்தாள் அவள்.

எழுத்தாளர்களுக்கு

கதைகள், கவிதைகள், கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. 'புல்ஸ்கேப்' அளவுத்தாளில் ஓரேபக்கமாக எழுதி அனுப்புதல் வேண்டும். எழுத்துப் பிழைகளே இருத்தல் கூடாது. வெளியிடப்படாத கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பி அனுப்ப இயலாது. **கலைமன்றம் இதழில் பிரசுரமாகும் அனைத்தும் கலைமன்றத்தாருக்கே உரிமை பெற்றவை.** இவற்றை நினைவிற் கொண்டு எழுத்தோவியங்களை அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர்

கலைமன்றம்,

சென்னை—1

பொழுது புலர்ந்தது. ஒளி பரவி இருள் நீங்கியது. ஆனால் அவர்கள் வாழ்வில் ஒளியில்லை. இருள் சூழ்ந்து கிடந்தது. அவர்கள் வாழ்வு மலரவில்லை; மங்கிவந்தது. பசியொழியவில்லை; பெருகிவந்தது.

தாய்ப்பறவை இரைதேட பறந்து சென்றது. அவளோ நகர்ந்து செல்லவும் சக்தியற்றுக்கிடந்தாள். உடலிலே உள்ள இரத்தத்தைப் பிழிந்தெடுத்து சில சொட்டுப்பாலைக் கொடுத்தாள் குழந்தைக்கு.

பகல் கடந்துசென்றது. பறவை திரும்பவில்லை. பசி வேதனை பொங்கி வழிய துடித்துக் கொண்டிருந்தன குருவி குஞ்சுகள். பட்டினி பாடையிலே பவனி வந்தார்கள் அவளும் அவள் குழந்தையும். குருவிக்குஞ்சுகள் கீச்சிட்

டன தாயின் வரவை நோக்கி. அவளோ கண்ணீர் வடித்தாள் சாவின் வரவைநோக்கி.

மாலைநேரமும் மறைந்தது. தாய்ப்பறவை வரவில்லை. தாயில்லாமல் தவித்தன பறவைக் குஞ்சுகள்! தாயிருந்தும் தவித்தது மானிடக் குழந்தை!

காற்றுவீசத்தொடங்கியது. குஞ்சுகள் ஓலமிட்டன குறைதீர வழியின்றி. அவள் குழந்தையை மூட முயன்றாள் தன் குறையாடையைக்கொண்டு. பொத்தல் ஆடை போதிய கதகதப்பை எங்கேதரும்? குழந்தையின் உடல் நடுங்க அவள் இதயம் நடுங்கியது. குழந்தை தேம்பியழ, அவள் மனம் சூம்பிச் சுருங்கியது.

காற்றின் வேகம் அதிகரித்தது. பட்டமரம் தள்ளாடியது அது கைத்தடியுடன் தள்ளாடும் வயோதிகனின் நிலைபோன்றிருந்தது. மரத்தின் கூட்டிலே குஞ்சுகள் பரிதவித்தன, மரத்தினடியிலே இரு மனித சீவன்கள் பரிதவித்தன. புழுதியைக் கிளப்பியெழும் புயற் காற்றிலே பசுமைநிறம் மாறிய காய்ந்த இலைகள் பொல பொல

வென்று உதிர்ந்தன. அவைமேலே விழுந்து மூடியுங்கூட அவ்விருவரின் உடல்கள் நடுங்கின. காற்று ஓங்காரமிட்டது. மழைபொழிய ஆரம்பித்தது. குஞ்சுகள் கூக்கிரலிட்டன. அவ்விரு மனிதப் பிறவிகளோ மதிமயங்கிக்கிடந்தனர்.

எத்தனை நேரந்தான் அம்மரம் காற்றை எதிர்த்து நிற்கமுடியும்? ஆட்டங்கண்டு அம்மரம் திடீரென்று முறிந்துவிழுந்தது. தன்னிடம் அடைக்கலம் புகுந்திருந்த அத்தனை சீவன்களும் 'அய்யோ' என்றலற அம்மரம் விழுந்தது. குருவிக்கூடு சிதறியது. குஞ்சுகள் பதறிவிழுந்தன. குழந்தையைக் கையிலணைத்தபடி அக்குறையுற்றவள் நசுங்கிக்கிடந்தாள். அங்கே ஒரு உயிரும் துடிக்கவில்லை. பசி பசி என்று அலறவில்லை. ஒரு மூச்சும் வெளிப்படவில்லை. எல்லாம் அமைதியுற்றன.

கீச்! கீச்! கீச்!

தாய்ப்பறவை பறந்தோடிவந்தது. அதன் வயிறுகிழிந்து இரத்தம் சிந்தியபடியிருந்தது. வேடனின் அம்பிற்கு இலக்காகியுங்கூட தப்பித்து இரையுடன் பறந்து வந்துள்ளது அப்பாசம் நிறைந்த பறவை! என்னே அதன் அன்பு! தாயன்பே தனிப் பண்பு தானே! அவ்வன்புக்கு மூன்பு இணையேது!

அந்தோ பரிதாபம்! அப்பறவையினுயிர் மங்கி வந்தது. கண்கள் சோர, உணர்வு மங்க அப்பறவையும் தன் குஞ்சுகளிடையே விழுந்தது. இரு குடும்பங்களும் மரணத்தைத் தழுவியபடியே அங்கே இறந்துகிடந்தன. சிதைந்து கிடந்த குருவிக்கூடு அவர்கள் சிதைந்த வாழ்வைப் பறை சாற்றியபடியிருந்தது.

அமெரிக்காவில் சூரிய ஆராய்ச்சி

கேம்பிரிட்ஜ்: மஸ்ஸாச்சூஸெட்ஸ், சூரியனைப் பற்றியும் அதன் வெளிச்சத்தால் பூமிக்குக் கிடைக்கும் நன்மைகளைப் பற்றியும் ஆராய்ச்சி செய்வதற்கு ஹார்வார்டு பல்கலைக் கழகமும் ஸ்மித்சோனியன் பல்கலைக் கழகமும் ஒப்புக்கொண்டுள்ளன. ரேடியோ செய்தி அறிவித்த, வானிலை முன்னறிக்கை, விமான யாத்திரை ஆகிய துறைகளுக்கு இவ்வாராய்ச்சி பயன்படும் எனக் கூறப்படுகிறது.

காதல் உள்ளம்

மூலம்: விக்தர் யூகோ
தமிழ்: கவிஞர் வாணிதாசன்

காட்சி—14

தீஸ்ட்-ரொதோல்போ-கத்தேரின
கட்டிலிலேயே

தீஸ்: ஆ! நீயா! ரொதோல்போ! நான் உன்னிடம் சில பேசவேண்டும்—கேள்.

ரொ: நான்கூடத்தான் உன்னிடம் சில பேசவேண்டுமென்று வந்துள்ளேன்—முதலில் நான் சொல்வதைக்கேள்.

தீஸ்: ரொதோல்போ!......

ரொ: இங்கு வேறு யாருமில்லையே?

தீஸ்: இல்லை, நான் மட்டுமே இருக்கிறேன்.

ரொ: சரி, இங்கு யாரும் வர வேண்டாமென்று கட்டளையிடு.

தீஸ்: அது முன்னமே இடப்பட்டுள்ளது—இங்கு யாரும் வர மாட்டார்கள்.

ரொ: (அங்குள்ள கதவுகளையெல்லாம் மூடித் தாளிடுகிறான்.)

தீஸ்: ஏதோ சொல்லவேண்டுமென்றாயே சொல்லேன்.

ரொ: நீ எங்கிருந்து வந்தாய்? எதற்காக உன் முகம் வெளுத்திருக்கிறது? இன்றைக்கெல்லாம் நீ என்ன செய்தாய்? சொல்—இந்தக் கைகள் என்ன செய்தன? சொல்...சொல்—நீ சொல்லமாட்டாய் அல்லவா? நான் சொல்லுகிறேன். மறைக்காதே—சாக்குப் போக்குத் தேடாதே. எனக்கு எல்லாம் தெரியும்—இதோ இந்தக் கதவிற்கு மறுபுறம்தான் இருக்

தாள். அவள் இங்கு நடந்ததையெல்லாம் பார்த்துக்கொண்டு தான் இருந்தாள்—ஒரு வார்த்தைகூட விடாமல் கேட்டுக்கொண்டிருந்தாள். நீ சொன்னதை அப்படியே சொல்கிறேன் கேள்—சர்வாதிகாரி என்னிடம் நஞ்சில்லை யென்றார்—நீ சொன்னாய் என்னிடம இருக்கிறது என்று—பொய் சொல்லாதே! உன்னிடம் நஞ்சு இருந்தவல்லவா? இதோ என்னிடம் குத்து வாள்.

(மார்பில் மறைத்து வைத்திருந்த குத்துவாளை எடுக்கிறான்).

தீஸ்: நீ என்னைக் கொல்லப் போகின்றாய்—அதுதானே! இந்த எண்ணம் தான் உனக்கு வந்ததோ—நல்லது

அப்படியே செய்—என்னது நடந்தது—எது உண்மை—எது பொய் என்பதெல்லாம் தெரிந்து கொள்ளாமல் என்னைக் கொலை செய்ய நினைக்கிறாய்—அவ்வளவு

மாணவர்களுக்கான நூல்கள்	
ஸ்ரீமகள் இங்கிலீஷ்-தமிழ் கையகராதி	2 8 0
ஸ்ரீமகள் தமிழ்க் கையகராதி	1 8 0
நீதிநூல் தொகை I	1 8 0
,, ,, II	3 8 0
திருக்குறள் சிறப்புரை	1 4 0
திருக்குறள் (தீப்பெட்டி அளவு)	0 8 0
ராமுனு ஆங்கில ஆசான்	1 8 0
நேரு இந்தி ஆசான்	1 8 0
வீர பாண்டியன் கட்ட பொம்மன்	1 0 0
ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-1	

இழிந்தவளாகக் கருதப்பட்டேன் நான். மற்றொருத்தியின் காதலுக்காக என்னைக் கொல்லப்போகிறாய் அல்லவா? ரொடோல்ப்ோ—உன் வாயாலேயே சொல் அதுதானே—நீ என்னைக் காதலுக்கவில்லை. மற்றொருத்தியின் காதலுக்காக நீ என்னைக் கொல்லப்போகிறாய். கொல்லேன்—நீ என்னைக் காதலிக்கவில்லை......அல்லவா?

ரொ: இல்லை—ஒருபோதும் நான் உன்னைக் காதலிக்கவில்லை.

தீஸ்: பாவி! இந்தச்சொற்கள் தான் என்னைக் கொல்கின்றன—இந்தக் குத்துவாளல்ல!

ரொ: உன்மேல் காதலா? எனக்கா? இல்லை—இருந்தது கிடையாது. வேண்டுமானால் பொய் சொல்லலாம்.

தீஸ்: நன்றிகெட்டவனே! நீ அவளைத்தான் காதலிக்கிறாயா? சொல்—அதையும் சொல்லிவிடு.

ரொ: ஆம். அவளைத்தான் காதலிக்கிறேன்—சாகப்போகின்ற நீ கேட்பதால் சற்று விளக்கமாகவே சொல்கிறேன் கேள்: இந்த உலகத்திலுள்ள பொருள்களில் உயர்ந்த பொருளாக—கடவுள் தன்மை பொருந்திய பொருளாக—என் உயிராக—உடலாக—கண்ணின் ஒளியாக—எண்ணமாக—என் இதயமாக—எழுச்சியாக—செல்வமாக—ஆறுதலாக—நான் அவளைக் காதலிக்கிறேன். புரிகிறதா? இப்பொழுது உனக்கு. அவளே எனக்கு யாவும்.

தீஸ்: அப்படியானால் நான் செய்தது நல்லதுதான்.

ரொ: என்ன! நீ செய்தது நல்லதுதான்.

தீஸ்: ஆம், நான் செய்தது நல்லதுதான். இப்போதாவது நம்புகிறாயா?

ரொ: நம்பிக்கையா? எனக்கா? மறுமுறையும் கூறுகிறேன். தப்ன் சொன்ன சொற்கள் இன்னும் என் செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. "அவர்கள் ராணி, அந்த அம்மாள், அந்தக் கொடியவள்—அந்த அம்மாளைத்தான் சர்வாதிகாரி தீஸ்ப்! தீஸ்ப்! என்று அழைக்கிறார், அவர்கள மூவரே இரண்டு மணி நேரம் வரையில் அந்த அறையில் இருந்தனர். பாவம் ராணி அழுதார்கள், புலம்பினார்கள். மண்டியிட்டுக்கூடக் கெஞ்சினார்கள். ராணியின் வேண்டுகோள் மறுக்கப்பட்டது. தீஸ்ப்பே நஞ்சை எடுத்து வரச்சென்றவர்கள். எடுத்துவந்தார்கள். கொடுத்தார்கள். 'குடிக்கும்படி கட்டாயப்படுத்தினார்கள். அந்தக்கொடிய அம்மாளே, ராணியின் இறந்த உடலை எடுத்துப்போனார்கள்" போதுமா--இன்னும் விளக்கம் வேண்டுமா? (கைக்குட்டையை எடுத்துக்காட்டி) இந்தக் கைக்குட்டை கத்தேரினா அறையில் கிடந்தது. இது யாருடையது? உன்னுடையது. (சிலுவையைக் காட்டி) இதோ நீ வைத்திருக்கிறாயே இந்தச் சிலுவை—இது யாருடையது? அவளுடையது. இன்னும் வேறென்ன விளக்கம் வேண்டும். அழு, கெஞ்சு, கூத்தாடு, மன்னிப்புக்கேள்—சற்று முன்பு உன்முன் அவள் என்னென்ன செய்தாளோ—அவையெல்லாம் நீ செய்தாலுங்கூட உன் உயிர் தப்பாது. பழிக்குப்பழிதான்.

ரொ: ரொதோல்போ!.........

ரொ: நீ குற்றவாளியல்ல என்பதை இனி மறுக்க முடியுமா? தைரியம் உண்டா உனக்கு? சொல் பார்ப்போம்.

தீஸ்: இல்லை ரொதோல்போ! உன்னிடம் தப்ன் சொன்னதெல்லாம் உண்மைதான். அந்த முடிவுக்குத்தான் நீயும் வந்துவிட்டாய்-நான் சாகிறேன். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. உன் அருகில்—உன் காலடியிலேயே இறக்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். அதற்காக என்னசெய்வதென்றுகூட வழிதேடினேன்—உன் கையால் இறப்பது, நான் நினைத்ததைவிட எத்தனையோ பங்கு மேலானது—இன்பமானது. நீ விரும்பிக் கேட்காவிட்டாலுங்கூட என் கடைசி மூச்சு—பேச்சுக்களையாவது உன் செவிகள் கேட்கட்டும். அதுவே போதுமானது. நான் வாழவேண்டுமென்ற ஆசை எனக்கில்லை—நீ என்னைக் காதலிக்கவில்லை. எனக்கேன் இந்த வாழ்வு! கொன்றுவிடு.

ஒரே ஒரு முத்து ரூ 350

தூத்துக்குடியிலே மீண்டும் முத்துக் குளிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். தற்போது உயர்தரமான முத்துக்கள் கிடைக்கவில்லையாம். முத்துக்குளித்து ஏறத்தாழ 24 ஆண்டுகள் ஆகிவிட்டமையால் விலையுயர்ந்த முத்துக்களின் விளைச்சல் நாளா வட்டத்தில் குறைந்து விட்டதாகக் கருதுகிறார்கள். ஒரு வாரமாக சேகரித்த முத்துக்களில் உயர்ந்த வகையாகப் பொறுக்கி எடுத்த முத்துக்கள் இரண்டு தானாம். ஒன்றின் விலை ரூ 125, மற்றொன்றின் விலை ரூ 100. இந்தவொரு மாதகாலமாக எடுத்த முத்துக்களில் ஒரே ஒரு முத்தின் விலை மட்டும் ரூ 350 தான்.

—பி. சுப்பராயலு

என் அன்பே ரொதோல்போ! இப்பொழுது நீ எனக்காகச் செய்யப்போவது—செய்யக் கூடியது அது ஒன்றே தான்—அல்லவா? ஆம், நடக்கட்டும்—கொன்றுவிடு.

ரொ: தீஸ்ப... செய்த தவறை நீயே ஒத்துக்கொள்......

தீஸ்: நான் சொல்கிறேன் கேள். இன்றும் ஒரே ஒரு விநாடி கேள். என்னுடைய வாழ்வே அப்படித்தான். இது வெறும் வார்த்தை அலங்காரமல்ல—உடைந்த இதயத்தின் குமுறல்—எங்களைப்பற்றியெல்லாம் மற்றவர்களுக்கு இறக்கம் இருக்காது. எங்களிடத்திலே கடமையும், தைரியமும், அன்பும் இருக்குமென்பதை நம்பமாட்டார்கள். நான இன்னும் வாழத்தான் விரும்புவதாக நினைக்கிறாயா? நினைத்துப்பார். நான் சிறுமியாக இருக்கும்போது பிச்சை எடுத்து வயிறு வளர்த்தேன். பதினாறு வயது வரையில் எனக்கு உணவு உண்டா? உடை உண்டா? கண்ட கண்ட செல்வர்களுக்கு விளையாட்டுப் பொருளாக இருந்து—இவனிடத்தில் சிலநாள்-அவனிடத்தில் சிலநாள் இது தானே என் வாழ்க்கை. ஆனால் இன்றோ கலாராணி, கண்கவரும் ஓவியம்—குயில்—மயில் இன்னும் என்னென்னவோ சொல்கின்றனர். செல்வமும், அழகும் இருப்பதால் எத்தனை கோமான்கள் என்னைக் குளிர் பூஞ்சோலையென நினைக்கிறார்கள். அங்கு ஏன் போகிறாய்—இந்தச்சர்வாதிகாரி—பட்டினி கிடந்து கிடந்து செத்த எனக்குத் தானா சாகப் பயம்—இல்லை. ரொதோல்போ இல்லை. நான் என் வாழ்விலே இன்பம் கண்டதே கிடையாது, சிறு வயதிலிருந்து இன்றுள்ள செல்வப் பெருக்கில் கூட எனக்குத் துளிக்கூட மகிழ்ச்சியில்லை. என்ன செய்வது? என் வாழ்க்கை—நான் கொடுத்துவைத்தது அவ்வளவுதான். பெரிய இடத்துப் பெண்களாக இருந்தால், அவர்களுக்கு இரக்கம் காட்டுவார்கள். அவர்கள் அழுதால் ஆறுதல் கூறுவார்கள். கெடுதல் செய்தால் மன்னிப்பார்கள். எங்களுக்கு யாவும் நல்லதுதான். துன்பம தருவார்கள். இன்பமாகப்பேசி ஏய்ப்பார்கள். நாங்கள் யாரிடத்திலே போய் முறையிடுவது. முறையிட்டால் கேட்பவருண்டா? துன்பப்படப் பிறந்துவிட்டபோது துன்பப்பட்டுத்தானே ஆகவேண்டும். மற்றவர்கள் உண்டால் பசி நீங்குமா? மற்றவர்கள் இன்பமடைய ஆடுகிறோம், பாடுகிறோம். ஆனால் நாங்கள் இன்பமடைய முடியுமா? ரொதோல்போ! நீயே சிந்தித்துப் பார்—என் நிலைமைக்கு, என்னைக் காதலிக்கிற ஒரு இதயம் தேவையல்லவா? காதல் இல்லையென்றால் என் வாழ்வு எப்படியாவது? உன் உள்ளத்தைக் கவரவேண்டும் என்பதற்காக நான் இப்படிக் கூறு

இலக்கிய நூல்கள்

	ரூ.	அ
திருக்குறள் பரிமேலழகர் உரை	5	0
திருக்குறள் விளக்கவுரை ...	3	8
திருக்குறள் சிறப்புரை ...	1	4
திருக்குறள் மூலம் ...	0	8
விவேக சிந்தாமணி மூலமும் உரையும் ...	0	8

ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை—1

வதாக நினைக்காதே—இனி அதனால் என்ன பயன்? இனி ஒன்றும் நடக்கப்போவதில்லை. என் சாவுக்குப் பிறகு எந்த அளவு தீஸ்ப் நம்மைக் காதலித்தாள் என்பதை நீ உணர்வாய். இந்த ஆறு மாதங்களாய்; உன் பார்வையே எனக்கு உணவு, உன் முறுவலே என் இன்பம், உன் மூச்சே என் உயிர். அப்படித்தான் அவைகள் இருந்தன இந்த ஆறுமாதங்களாய். என்னைப்பற்றி நீ ஒரு விநாடிகூட நினைத்ததில்லை. என் உயிராகிய நீ எப்பொழுது என்னை இறுக அணைத்து—தீஸ்ப் நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று சொல்லுவாயோ என்றுதான் ஏங்கிக்கிடந்தேன். ஏதேதோ நினைத்துச் சங்கடப்பட்டேன். எப்படி உன் மனதை மாற்றுவதென்று எண்ணாதனவெல்லாம் எண்ணினேன். அது உன்மேல் தவறில்லை. நீ என்ன செய்வாய்—உன் எண்ணம் ஏழாண்டுகளுக்கு முன்பே கத்தேரினாவினால் சிறை செய்யப்பட்டதென்பதை இப்பொழுதுதான் நான் உணர்ந்தேன். அதற்காக உன்னை நான் வெறுக்கவில்லை. துன்பம் நிறைந்த உன் வாழ்விற்கு ஏதோ விளையாட்டாகக் காலபோக்காக நான் இருந்தேன். என்பதை இப்பொழுதுதான் உணந்தேன்—அதற்காகக் கவலைப்படவில்லை. உன்னை நிந்திக்கவும் இல்லை. நான் என்னசெய்வது. நீ இன்றேல் இனி என்னால் வாழமுடியாது. உன்னால்தான் நான் உயிர்க்கிறேன் நடமாடுகிறேன—பேசுகிறேன்—பாடுகிறேன்—ஆடுகிறேன் இதோ பார்த்தாயா? நான் சொல்வதைக் கூடக் கேட்கமாட்டேன் என்கிறாயே—என் பேச்சு அவ்வளவு

இளம் பிள்ளை வாத மருந்து ஆராய்ச்சிக்குப் புதிதாக 800 குரங்குகள்

நியூயார்க்: புதுடில்லியிலிருந்து விமானமூலம் 800 குரங்குகள் டாக்டர் ஸால்க் கண்டுபிடித்துள்ள இளம்பிள்ளை வாத மருந்தைப் பரிசோதிப்பதற்காக தேசிய ஸ்தாபனத்தின் சார்பில் இவை வந்திருக்கின்றன. தெற்குக் கரோலினாவிலுள்ள ஒரு ஆராய்ச்சி நிலையத்துக்கு இவை கொண்டு செல்லப்படும்.

வெறுப்பாகவா இருக்கிறது. இந்நிலையில் வேறுஒரு மரமூஞ்சியைப் பார்த்தாலுங்கூட மனமிரங்குமே! அவ்வளவு பாவியா—நான்?

ரொ: நான் நிச்சயமாகச் சொல்கிறேன்—அதில் எனக்குச் சிறிதுகூட ஐயமில்லை—வாளெடுத்துவர சர்வாதிகாரி ஓடினபோது—நீ என் கண்ணை—என் காதலியை நஞ்சருந்தச் சொல்லிக் கட்டாயப்படுத்தவில்லையா? நான் இனி எதையும் கேட்கமுடியாது. கத்தேரினா எங்கே? கொன்றுவிட்டீர்களா—அல்லது விஷம் கொடுத்தீர்களா? எங்கே அவள்—அவளேதான். வேறு இந்த உலகத்தில் எவரும் இல்லை.

தீஸ்: அவள்! அவள்தானே! வேறுயாருமில்லையா? ஐயோ! என்னால் இந்தச் சொற்களைக் கேட்கமுடியவில்லை. இந்தக் குத்துவாளால் என்னைக் கொன்றுவிடேன்; ஏன் இப்படியெல்லாம் சொல்லிச் சொல்லிக் கொல்கிறாய். (அவன் வைத்திருக்கிற குத்துவாளைக் காட்டி) இதால் தீர்த்துவிடேன்.

திராவிடஇயக்கச் செம்மல்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள்

அறிஞர் அண்ணுதுரை	...	0 8
தலைவர் பெரியார்	...	0 8
புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்	...	0 8
கடமைவீரர் கருணாநிதி	...	0 8
அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி	...	0 8
பன்னீர் செல்வம், பாண்டியனார்	...	0 8
நெடுஞ்செழியன், நடராசன், மதியழகன்	...	0 8
சம்பத், நீலமேகம்	...	0 8
ஆசைத்தம்பி, சிற்றரசு	...	0 8
பூங்கோதை, அருண்மொழி, ராமாமிர்தம்	...	0 8

ஸ்ரீமகள் கம்பெனி,
சென்னை-1

ரோ. எங்கே அவள். என் உயிர்—என் உடல்—என் காதல் எங்கே அவள்.

தீஸ்: உனக்குச் சிறிதுகூட மனம் இரங்கவில்லை. ஈவு இரக்க மற்றவன் நீ! என் இதயத்தைப் பிளக்கிறாய்! சரி—நான் சொல்வதைக்கேள். உனக்குத் தப்பன் சொன்னதெல்லாம் உண்மைதான். ஆம், நான் அவளுக்கு நஞ்சு கொடுத்துத்தான் கொன்றேன். என் காதலுக்கு, என் வாழ்வுக்குத் தடைக்கல்லலாக இருந்த அவளைக் கொன்றுவிட்டேன்.

ரோ: நீயா இப்படிச் சொல்லுகிறாய்—கடவுளே! கொன்றதுமல்லாமல், அதைப் பெருமையாகக் கூடச் சொல்லுகிறாயா?

தீஸ்: ஆம், நான்தான் செய்தேன். என் காதல் வழிக்குக் குறுக்கே நின்ற கற்சுவரை இடித்துத் தூளாக்கினேன். நீ கொல்! ஊம்! கொல்!

ரோ: அடிப்பாவி.

தீஸ்: பாவியென்ன? நான்தான் அவளைக் கொன்றேன். நானே சொல்லுகிறேனே இன்னும் என்ன உனக்குத் தயக்கம்.

ரோ: வஞ்சகி—(குத்துவாளால் குத்துகிறான்)

தீஸ்: (கீழே விழுகிறாள்) ஆ... இதயத்தில்.................. இதயத்தில் குத்தினாய். மகிழ்ச்சி—நல்ல வேலை செய்தாய்—அன்பே ரோ தோல்போ—உன் கைகள்—உன் கை—(அந்தக் கையைப்பிடித்து முத்தமிட்டு—நன்றி—என்னை இப்பொழுதுதான் காப்பாற்றினாய்—விடு—உன் கையை என்னிடம்விடு. நான் உனக்கு ஒரு கெடுதலும் செய்யவே மாட்டேன். என் அன்பு ஆசை, உயிர், உடல் மூச்சுயாவும் நீயல்லவா—என் வாழ்நாளில் இன்றுதான் நான் இன்பம் காண்கின்றேன்—போகட்டும்—நான் இனிப் பிழைக்கமாட்டேன். நான் காதலிக்கிறேன் என்று இப்பொழுதாவது ஒருவார்த்தைசொல்...

ரோ: தீஸ்ப்........

தீஸ்: ஒரே ஒரு வார்த்தை சொல்...... சொல்லமாட்டாயா?

(திரைக்குப்பின் கட்டிலில் ஒரு குரல் கேட்கிறது.)

கத்: நான் எங்கே இருக்கிறேன் ரொதோல்போ!

ரொ: என்ன? அது......யார் குரல்?

கத்: ரொதோல்போ!.........

ரொ: (அவள் அருகில் ஓடுகிறான்—அவளைத்தன் இரு கைகளாலும் வாரித் தூக்குகிறான்) கத்தேரினா! கடவுளே! நீயா—உயிரோடா? இது எப்படி? என்ன? (தீஸ்ப பக்கம் திரும்பி) ஆ! என்ன செய்துவிட்டேன் தெரியுமா?

தீஸ்: (முதுகால் நகர்ந்துகொண்டே புன்முறுவல் பூத்து அவன் அருகில் வருகினறாள்) ஒன்றுமில்லை—நீ ஒன்றும் செய்யவில்லை. நான்தான் யாவும் செய்தேன். நான் இறந்துவிடவேண்டுமென்று நினைத்தேன். உன்னை அந்த அளவுக்குத் தூண்டினேன்.

ரொ: கத்தேரினா! நீ பிழைத்துககொண்டாய்! கடவுளே! நீ யாரால் காப்பாற்றப்பட்டாய்?

தீஸ்: என்னால்! உனக்காக!

ரொ: தீஸ்ப்! ஓடிவாருங்கள்—ஓடிவாருங்கள். மடையன் நான்.

தீஸ்: வேண்டாம்—எந்த உதவியும் பயனற்றது. நீ மகிழ்ச்சியாய் இருந்தால்போதும்—உன் இன்பத்திற்காகத்தானே இப்படிச் செய்தேன்—சர்வாதிகாரியை ஏமாற்றி நஞ்சுக்குப்பதில் மயக்க மருந்தைக் கொடுத்தேன்—அவள் இறந்துவிட்டதாக யாவரும் நம்பினார்கள். அவள் இறக்கவில்லை. தூங்கிக்கொண்டிருந்தாள். அதோ குதிரைகள் தயாராக இருக்கின்றன. இதோ ஆண் உடை அவளுக்காக. புறப்படுங்கள். மூன்றுமணி நேரத்திற்குள் எல்லையைத் தாண்டிவிடலாம். வேனிஸ் எல்லையைக் கடந்துவிடலாம். அங்கே இவர்கள் ஒன்றும் செய்யமுடியாது. சர்வாதிகாரிக்கு இவள் செத்துவிட்டாள்—உனக்கு உயிரோடிருக்கிறாள்—எப்படி என் திட்டம்—சிறந்ததுதானே!

ரொ: கத்தேரினா!...தீஸ்ப்!...

(மேல்மூச்சு இழுத்துக்கொண்டிருக்கிற தீஸ்பின் அருகில் மண்டியிடுகிறான்)

தீஸ்: (மங்கிய குரலில்) நான் சாகப்போகிறேன்—எப்பொழுதாவது என்னைப்பற்றி நினைப்பாய்—பாவம், தீஸ்ப் எவ்வளவு நல்லவள் தெரியுமா? எனக்காக எப்பேர்ப்பட்ட செயல் செய்தாள் தெரியுமா என்பாய்—ஆம், அதுபோதும் எனக்கு. அந்தச் சொற்கள் என் கல்லறையில் என்னை மகிழ்விக்கும்—நான் பிரிகிறேன்—என் ரொதோல்போ! கத்தேரினா! என் ரொதோல்போ! என்பதற்காக மன்னியுங்கள்—என் ரொதோல்போவைவிட்டுப் பிரிகிறேன். ரொதோல்போ! ரொதோல்போ! உடனே புறப்படுங்கள்—கிளம்புங்கள்—நிற்கக்கூடாது. சிறிது நேரம் கூட இனி இங்கே இருக்கக்கூடாது. நான் சாகிறேன்—நீங்கள் வாழுங்கள்—ஆம் நீங்கள் வாழ்வதில்தான் எனக்கு இன்பம்—நான் உங்களை வாழ்த்துகிறேன். (சாகிறாள்)

(முற்றும்)

பொறுத்தருள்க

'அழகு எரிந்தது' என்னும் தொடர் கதை இவ்வார இதழில் இடமின்மையால் பிரசுரிக்க இயலவில்லை.

—ஆசிரியர்.

எவரெவரிடமிருந்து என்னென்ன கருத்துக்கள் வரமுடியு மென்பது நேயர் கட்கு நன்கு தெரியும். ஆனாலும் சில சமயங்களில் கருத்துக்கள் இடம் தவறிப் பிறந்துவிடுவது முண்டு. அப்படிச் சிதறிய பொறிகளைத் தொகுத்துத் தருவது தான் இந்தப் பகுதி.

சிதறிய பொறிகள்:

'இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களில் ஒரு சிலர் ஆத்திரப்படுகிறார்களே என்பதற்காக, இரண்டுங் கெட்ட நிலையில் உள்ள ஒரு மொழியைப் பெரும்பாலோரான பிற மக்கள்மீது அவசரப் பட்டுத் திணிக்கலாகாது. இந்தியிலேயே எத்தனையோ வகை இப் பொழுது பழக்கத்திலிருக்கிறது. ஒரு பொது இந்தியே தயாராக வேண்டியிருக்கிறது. அது ஒருபுரமிருக்க, பிற மொழியினர் சுலபமாகக் கையாளக் கூடிய நிலையிலதான் இந்தி பயனுள்ள வகையில் ராஜாங்க மொழியாக முடியும் என்பதை மறக்கலாகாது. எனவே இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் விவேகமும் பொறுமையும் காட்ட வேண்டும். 15 வருடங்களில்) இந்தி ராஜாங்க மொழியாக வந்துதாளுக வேண்டும் என்பதில்லை. வளமை பெற்று, பிறராலும் கையாளப்படக் கூடிய அளவுக்குத்தான் இந்தியை ராஜாங்க மொழியாக்குவது என்ற பிரத்தியட்ச நிலைக்கு அவர்கள் ஒத்துவர வேண்டும். இல்லாவிடில் இந்திக்குச் சாதகமான சூழ்நிலை கெட்டுப் போகும்.

ஒரு மொழியினர் கட்டுப்பாடாக ஆட்சேபித்து எதிர்த்தாலும், நடைமுறையில் இந்தி ராஜாங்க மொழியாக முடியாது என்பதை மறந்து விடலாகாது. திரு. டாண்டன், திரு. கோவிந்ததாஸ் போன்றோரின் வரட்டுப் பிடிவாதம் இந்தி எதிர்ப்பாளருக்குத்தான் உதவும்படியாக இருக்கும். சற்று தாமதித்தேனும், கூடியவரை எல்லோரின் சம்மதத்து டன், இந்தியை வளப்படுத்தி, ராஜாங்க மொழியாக்குவதுதான் விரும்

பத்தக்கது. அரசியல் சட்ட ஷரத்தைச் சுட்டிக் காட்டி, கெடுபிடி செய்வது நேரெதிரான பலனையே விளைவிக்கும்.

—தினமணி.

* * *

'இந்தியா போன்ற நாட்டுக்கு ஒரு பொதுமொழியை வைத்துக்கொள்வது என்பது இயலாததாகும். சென்ற மூன்று ஆண்டுகளிலே ஒரு உண்மைப் புலப்பட்டிருக்கிறது; 'இந்தியாவின் ஒரு தேசிய மொழி' என்று நாம் பேசக்கூடாது; 'இந்தியாவின் தேசிய மொழிகள்' என்றுதான் நாம் பேச வேண்டுமென்பதே அந்த உண்மை.'

—திரு. கிருஷ்ண மேனன்.

* * *

தென்னாட்டு மக்கள் இந்தியைப் படிக்கத் தொடங்கி விட்டால், சர்க்கார் உத்தியோகங்களுக்கு வட நாட்டுக்காரர்களாகிய எங்களுக்கு இடமே இல்லாமற் போய்விடும். ஆகவே நீங்கள் இந்தியைக் கற்றுக் கொள்ளாதீர்கள்.

—கவர்னர் ஸ்ரீ பிரகாசா.

* * *

மக்கள் எதிர்த்துக் கலவரம் செய்யாமலிருக்க வேண்டுமானால் அவர்கள் பேசும் மொழிகளில்தான் அரசாங்க நிர்வாகம் நடைபெற வேண்டும். முதலில் ராஜீய மொழிகள் தமக்குரிய நியாயமான ஸ்தானத்தைப் பெற்றால்தான் நாட்டின் பொது மொழியாக இந்தி வரமுடியும்.

—காகா கலேல்கார்

* * *

இந்தியை வலுக்கட்டாயமாகத் திணித்து மக்களிடம் வெறுப்பை உண்டாக்காமல், மாறாக அன்பை வளர்க்க வேண்டும்.

—செய்தியிலாகா அமைச்சர் பி. வி. கேஸ்கர்.

* * *

சிறு கதைப் போட்டி

மே தினச் சிறு கதைப் போட்டி முடிவு அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

—ஆசிரியர்

மலர்க்காடு

இலங்கை செந்தமிழ்ச் சோலையாக மாறுகிறது. கடல் கடந்து வாழும் அத்தமிழர்கள் தங்கள் கொள்கையை-கோரிக்கையைவெளியிடப் புதுப் புதுப் பத்திரிகைகள் பல தோற்றுவிக்கிறார்கள். அவையத்தனையுமே ஆர்வமும், உணர்ச்சியும் மிக்கவையாகவே இருக்கின்றன. இந்த ஆர்வம், உணர்ச்சி நீடித்து நிற்க வேண்டும்.

நல்ல பல கருத்துக்களை அள்ளித் தெளித்துப் பததிரிகைகளை நடுநிலைமையில் நின்று நீதிகாணும் நீதிபதிகளாக்கி,அறிவைப்பரப்பும்அறிவுத் தூதர்களாக்கி, நாட்டுக்கும் மொழிக்கும் பயன் விளைவிக்கச் செய்ய வேண்டும்.

"நாம்" என்னும் பெயரில் திரு. மு. .வே. பெ. சாமி அவர்களை ஆசிரியராகக் கொண்ட மாதமிரு முறை இதழ்கள் கிடைக்கப் பெற்றோம்.

புரட்சிகரமான கருத்துக்கள் பல அதிலே மிளிரக்கண்டு மகிழ்ந்தோம்.

"நாம்"
பதுளை, (இலங்கை)
விலை 15 சதம்

*

புரட்சி

"சித்தன்"

பசிதனிலே புகைந்திட்ட
பெருநெருப்பே புரட்சி!
வசித்திடவே வழியில்லார்
விழிக்கனலே புரட்சி!
நசிந்திடுவார் தம்நெஞ்சம்
நிமிர்வதுவே புரட்சி!
விசித்தழும் எளியவரின்
உணர்ச்சியதே புரட்சி!

A copy of Italian Trade News from The Commercial Counsellor, Italian Embassy, 155, Golf Links Area, New Delhi-3-received.

It gives some information about Italy's scientific, industrial, economical and cultural developments.

*

"பச்சைக் குழந்தை" என்பார்கள் தமிழில்—மாசு மறுவற்ற—தூய—களங்கமற்ற சிறுவர்களை, குழந்தைப் பருவத்தை—அப்பழுக்கற்ற பருவம்—எந்த ஒன்றும் ஒட்டிக்கொள்ளும் பருவம்—பிஞ்சுப் பருவம்—என்று சொல்வார்கள். சிறுவர் இதயத்தை உழுத நிலத்திற்குத்தான் ஒப்பிடவேண்டும். அதில் தூவிய விதை எதுவானாலும் முளைத்துவிடும்.

வயதான பெரிய அறிஞர்கள் பல்லோர் குழந்தைகளாக விழைந்திருக்கிறார்கள். அவ்வளவு உயர்வுக் குரிய பருவம் அது.

சிறுவர் இலக்கியம்என்றபெயரில் தமிழகத்தில் சிலர், சிறுவரிடையே அறிவை வளர்ப்பதாகச் சொல்லிக் கிளம்பியிருக்கின்றனர். இதன் விளைவு யாதாக இருக்குமோ நாமறியோம்.

நம் தமிழகத்தில் எந்த முறையில் சிறுவர் இலக்கியம் வளர்கிறதோ அதே முறையில்தான், அமெரிக்காவிலும் வளர்ந்தது. ஆனால், 'வளர்ந்து விட்ட அந்த இலக்கியம்'அங்கே அரசினருக்கும், அறிஞர்களுக்கும் ஒரு பெரிய

பிரச்சினையைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

அந்த நிலைக்கு நம் சிறுவர்களையும், நாம் கொண்டுவந்து விடக்கூடாது. பகுத்தறிவுக்குப் புறம்பான எதுவுமே "எதிர்கால அறிஞர்"களுக்குப் போதிக்கப்படக் கூடாது.

சிறுர்கள், பண்பும், அன்பும் மிக்கவராக வளர்வதற்கு வழிவகுத்துக் கொடுப்பதற்குச் சிறுவர் இலக்கியம், துணையாக நின்று துணைபுரிதல் வேண்டும்.

வெறியோ, கெட்ட எண்ணமோ முறைகெட்ட பண்போ துளிகூட அந்த "இலக்கியங்களில்" இருக்கக் கூடாது. இந்த நல்ல எண்ணத்தை அடிப்படையாக வைத்துப் புனையப்படும் "இலக்கியம்", எழுதியவருக்கும், படிப்பவருக்கும் நீண்ட நாள் பயனைத் தரமுடியும்.

நல்ல "சிருஷ்டி" என்று சொல்லமுடியாவிட்டாலும், சிறுவரின் உள்ளத்திலே கறை ஏற்படுத்தாத "நல்லகதைகள்" என்று "அன்று இரு பிணங்கள்" (0-1-0) "இருளில் ஒளி" (0-2-0) இந்த இரண்டையுங் குறிப்பிடலாம்.

கதை எழுதுவோர் தலைப்பைத் தேர்வு செய்கையில், வஞ்சனை, சூதற்ற பால்வழியும் முகத்தோடு நாலைக் கையிலேந்தி நிற்கும் பாலகரை நினைவில் வைத்துக் கொண்டு தேர்வு செய்யவேண்டும்.

சில தலைப்புகள் பயங்கரமாக இருந்தால் சிறுர் மனதைக் கவரும் என்ற தவருன எண்ணத்தில் தலைப்புகளைத் தந்துவிடக் கூடாது.

அன்று இரு பிணங்கள்
இருளில் ஒளி.

எழுதியவர்—மு. சண்முகம்,
கிடைக்குமிடம்-'தம்பி' அலுவலகம்
24, இரட்டைக்குழிச் சந்து,
தொண்டையார்பேட்டை,
சென்னை—21

—:கலப்பை.

கசந்த கரும்பு

திரைப்பட மூலம் பார்த்து மகிழ்ந்த "பராசக்தி" கதையின் பிற்பகுதி. பலரின் பாராட்டுதலைப் பெற்ற கதை. 'பராசக்தி' கல்யாணியின் வாழ்வின் பிற்பகுதி எவ்விதம் கசந்த கரும்பாகிய தென்பதை ஆசிரியர் தம் அழகு தமிழில் தருகிருர் அற்புதமான கருத் தோவியம்.

விலை ரூ. 1—8—0

ஸ்ரீமகள் கம்பெனி சென்னை—1.

திரை உலகம்

கேவா கலரில் அலிபாபா

மாடர்ன் தியேட்டர்ஸார், அலிபாபாவும், நாற்பது திருடர்களும் என்ற பழைய கதையைப் புதிய மெருகில் தயாரித்து வருகின்றனர். இப் படம் முழுவதுமே கேவா கலரில் தயாரிக்கப்படுகிறது. படத்தில், எம். ஜி. ராமச்சந்திரனும், பானுமதியும் பிரதான பாகத்தில் தோன்றுகிறார்கள். படத்தை டைரக்ட் செய்பவர் டி. ஆர். சுந்தரம். தட்சிணமூர்த்தி சங்கீதம் அமைக்கிறார்.

கோடீஸ்வரன்

கணேஷ் மூவிடோன் தயாரித்து வரும் கோடீஸ்வரன் பாதிக்கு மேல் முடிவடைந்து விட்டது. இப்படத்தில் பத்மினி, ராகினி, சிவாஜி கணேசன், தங்கவேலு, ஸ்ரீராம் சாமா முதலியோர் நடிக்கின்றனர். நடிகர்களையும், கதையின் தலைப்பையும் பார்க்கும் போது, படம் நன்றாகத்தான் இருக்கும் என்று நம்பவேண்டியிருக்கிறது. படத்தைச் சுந்தராவ் நட்கார்னி டைரக்ட் செய்து கொண்டு வருகிறார்.

ராஜ சுலோசனாதான்

மாமன் மகள்

ஆர். எஸ. மணி அவர்கள், நெப்டியூன் ஸ்டுடியோவில் தயாரித்து வரும் படமே 'மாமன் மகள்.' சாவித்திரி கதாநாயகியாக நடிக்கும் இப் படத்தை ஆர். எஸ். மணி டைரக்ட் செய்கிறார்.

லண்டனில் இந்தியா பிலிம் விழா! சென்னைப் படம் இடம் பெறுகிறது

ஜூன் 21, 26 தேதிகளில் லண்டன் ஸகாலா தியேட்டரில் நடைபெறும் இந்தியத் திரைப் பட விழாவில், ஓர் எகிப்தியப் படமும், ஏ. வி. எம். ஸ்டூடியோவின் "பஹாரும்" ஒரு சில டாக்குமெண்டரிப் படங்களும் காட்டப்படும். இந்த விழா ஆசியா பிலிம்

சொஸைடியின் ஆதரவில் நடைபெறுகிறது.

இந்தியா, பிரான்ஸ் கூட்டாகப் படத் தயாரிப்பு

வரும் வருடத்தில் இந்தியாவும் பிரான்ஸும் கூட்டாகப் படம் தயாரிக்குமெனப் பிரபல பிரஞ்சுப் படத் தயாரிப்பாளர், கோல்ட் ஸ்மித் கூறியிருக்கிறார். இந்தியா, பிரஞ்சுப் பட முதலாளிகள் கூட்டாகப் படமெடுப்பது இதுவே முதல் தடவையாகும். பாரீஸில் காதல் ஆரம்பித்து, இந்தியாவில் பூர்த்தியடையும் கதையைச் சித்தரிப்பதாக விருக்குமாம் அந்தப் படம்.

சிந்தாமணி

இந்தப் பெயரைக் கேட்டதும் தமிழ் நாட்டின் தலைசிறந்த பாடகர் நினைவிற்கு வருகிறார். இல்லையா? சில ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் சினிமா உலகில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய படங்களில் சிந்தாமணியும் ஒன்று.

அதை மீண்டும் திரைக்குக் கொண்டுவர பரணி ஸ்டுடியோ முயலுவதாகத் தெரிகிறது. இதில் சிவாஜி கணேசன் நடிப்பாராம். ஓடுமா ஓடாதா என்ற சந்தேகத்தில் வேறு இருப்பதாகக் கூறிக் கொள்ளப்படுகிறது. இதே சிந்தாமணி சுரையாவால் தயாரிக்கப்பட்டு அண்மையில் வடக்கே படுதோல்வி கண்டது.

விப்ர நாராயணா

'நாத்திகர்களும், நாச காலர்களும்' உலவிய திரையில் (விப்ர) நாராயணா "தோன்றத்" துவங்கி விட்டார்கள். இது மறுமலர்ச்சியா? இல்லை கலையுலகம் பின்னோக்கிப் போகிறதா? என்று தெரியவில்லை.



மாடர்ன் தியேட்டர்ஸாரின் "மஹேஸ்வரி"யில் ஏ.கருணாநிதியும் டணர் தங்கவேலுவும்.

எம். ஜி. ராமச்சந்திரனும், சக்ரபாணியும் மாடர்ன் தியேட்டர்ஸார் தயாரிக்கும் 'அலிபாபா'வில்தான்!

பரணியின் இப்படம் விரைவில் வரப்போகிறது.

கல்யாணம் செய்துக்கோ!

'ஐயோ தமிழே! ஐயய்யோ தமிழ்ப் படமே! உனக்குப் பெயருக்கும் பஞ்சமா? கதைக்குத்தான் பஞ்சம். அதற்காகப் பினனேக்கி ஓடுகிருய்! பெயரில்கூட உனக்குப் புதுமையானது கிடைக்கவில்லையா'—இப்படிப் புலம்ப வேண்டாம்.

இந்தப் பெயரில் ஒரு படம் கோவை சென்ட்ரலில் தயாராகிறது. யூனிடி பிக்சர்ஸார் தயாரிக்கின்றனர். புளியமாநகர் புலிக்குட்டி பி. எஸ். கோவிந்தன், கிரிஜா ஆகியோர் நடிக்கின்றனர்.

லட்சாதிபதி

"பரிவர்த்தனு," லட்சாதிபதியாகி வரப்போகிறது. என். டி. ராமாராவ், நாகேஸ்வரராவ், சாவித்திரி ஆகியோர் நடித்த தெலுங்கு "பரிவர்த்தனு" தான் இது.

மலை ராணி

இந்தக் காட்டு ராணியை, எம். ஜி. ஆர்., "சொர்ணம்" சரோஜா, கலைவாணர்கள், வீரப்பா ஆகியோரை வைத்து, கணேஷ் பிக்சர்சும், எம். டி. வி. பிக்சர்சும் தயாரிக்கப் போவதாகத் தெரிகிறது.

நமது செய்திகள்

பிறையாறு, 15-4-55. நாடார் உயர்நிலைப் பள்ளியில் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித்தமிழாசிரியர் வேங்கடேசர் **M.A. B.O.L.** அவர்கள் தலைமையில் விழா ஆரம்பமாயிற்று. பள்ளிப் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்கட்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து "நல்லதீர்ப்பு" என்ற ஆங்கில நாடகம் மாணவர்களால் நடிக்கப்பெற்றது. அடுத்தபடி "எதிர்பாராதது" என்ற தமிழ் நாடகம் மாணவர்களால் நடிக்கப்பெற்றது. தலைமை ஆசிரியர் நன்றி நவில விழா இரவு 12 மணிக்குக் கலைந்தது.

பிறையாறில் பெற்ருேர் தின விழா 5-5-55 மாலை 6 மணிக்கு **T. K. N.** ஆரம்பப் பள்ளியில் பிறையாறு நாடார் உயர்நிலைப் பள்ளித் தலைமை உதவி ஆசிரியர் **T.** கோவிந்தராசு **B. A. B. T.** தலைமையில் நடைபெற்றது. போட்டிகளில் கலந்து வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவ மாணவிகள் விளையாட்டுகள், உடற்பயிற்சிகள், கோலாட்டம், பாட்டுகள், "பொய்மையின் தோல்வி" என்ற நாடகமும் நடித்துக் காட்டினர். பள்ளித் தலைமை ஆசிரியர் நன்றிகூற விழா முடிந்தது.

வேலூர் திருக்குறள் வளர்ச்சிக் கழகத்தின் செயற்குழு 15-5-55 அன்று தோழர் இரா. நக்கீரன் அவர்கள் தலைமையில் கூடியது. அக் கூட்டத்தில் 'திருக்குறள் சிறப்பு' என்னும் பொருள்பற்றிப் பேசப்பட்டது. பின்னர் செயலாளர் நன்றி நவிலக் கூட்டம் இனிது கலைந்தது.

14-5-55 அன்று இரவு 7-30 மணிக்கு சென்னை ராயபுரம் கல் மண்டபம் ரோட் 7/c எண்ணுள்ள இல்லத்தில் அறிவு வளர்ச்சி நாடக மன்றமும், **R. P. M.** நாடகக் குழுவும் இணைந்து அறிவு வளர்ச்சி நாடக மன்றம் என்ற பெயரிலேயே இயங்க வேண்டும் என்று பொதுக் குழு கூடி முடிவு செய்தது. பின்னர், பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதுபோது, தோழர் **A. K.** சாமி அவர்கள் தலைவராகவும், தோழர் **V. M. S.** மணி துணைத் தலைவராகவும், தோழர். பால்வண்ணன் பொதுச் செயலாளராகவும், தோழர். முத்துகிருஷ்ணன் துணைச் செயலாளராகவும். தோழர் **M. K.** சாமி பொருளாளராகவும், தோழர்கள், சிவலிங்கம், குமார், ஜெயராமன், வாசுதேவன், மோகன், நந்தகோபால் முதலியவர்கள் நிர்வாகக் கமிட்டி உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பித்தம் ஏனோ?

ராஜாக்கள், ஜமீன்தார்கள், மிட்டா மிராசுதார்கள், பிரபுக்கள் இனி நமது சமூகத்திலே இருக்க இடம் காணோமே—என்னமோ சமதர்மம் என்கிறார்களே, ஏன் இப்படி ஒரு பித்தம் பிறந்ததோ தெரியவில்லை. என்று புலம்புகிறார் சங்கராச்சாரியார்.

—அறிஞர் அண்ணா

8-5-55-ம் தேதியன்று திருவானைக்காவல் திருவள்ளுவர் கழகத்தின், செயற்குழு தோழர் இராதா கிருட்டணன் அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது புது ஆண்டுக்கு இரா. கிருட்டணமூர்த்தி தலைவராகவும், ந. அரங்கராசன் செயலாளராகவும், ரெ. சீனுவாசன் பொருளாளராகவும், தோழர்கள் க. பெரியசாமி, மு. கண்ணன், இராசா. சிவம், தமிழ்மாறன், முதலியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டபின் ந. அரங்கராசன் நன்றிகூறக் கூட்டம் முடிவுபெற்றது.

கவியரசர் பாரதிதாசனின் 65-வதுபிறந்தநாள் கடந்த 29-4-55-ம் நாள் வெள்ளியன்று மாலை 5 மணிக்கு தமிழறிஞர் திரு பழ. சண்முகம் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. பாரதிதாசன் படம் ரங்கூனிலுள்ள பிரபல தமிழ்த் தினசரி "ரஸிகரஞ்சனி" உதவி ஆசிரியர் திரு. என். எம். நாகரத்தினம் அவர்களால் திறந்துவைக்கப் பெற்றது. திருவாளர்கள், ஏ. வீரபத்திரன், ப. ரா. வேலன், எஸ். அழகன், சகாநாதன் ஆகியோர் கவிஞரின் வாழ்க்கை வரலாறு, மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப் பற்று ஆகியவைகளைப்பற்றி அழகாகப் பேசினார்கள். விழாச் செயலாளர் கே. சௌந்தராசன் அவர்களால் நன்றி நவிலக் கூட்டம் இரவு 8 மணிக்கு நிறைவெய்தியது.

என்றுமே மறக்கமுடியாத இணையற்ற நாவல்கள் வடுவூரார் வழங்கியவை

		ரூ.	அ.
கலியாணசுந்தரம்	...	2	0
சோமசுந்தரம்	...	2	0
தங்கம்மாள்	...	2	0
பச்சைக்காளி	...	2	0
மருங்காபுரி மாயக் கொலை	...	2	0
வஸந்தகோகிலம்	...	2	0
நீலலோசனி	...	2	0
நங்கை மடவன்னம்	...	2	0
சிங்கார சூர்யோதயம்	...	2	0
சொக்கன் செட்டி	...	2	0
சிவராமகிருஷ்ணன்	...	2	0
பிச்சுமுத்துக் கோனான்	...	2	0
நவநீதம்	...	2	0
துரை ராஜா	...	2	0
இராசேந்திர மோகனா	...	2	0
சமய சஞ்சீவி	...	2	0
பாவாடைச் சாமியார்	...	2	0
மிஸ்டர் பூச்சாண்டி எம்மே	...	2	0
முத்துலட்சுமி	...	2	0
டாக்டர் சோணாசலம்	...	2	0
பூஞ்சோலையம்மாள்	...	2	0

ஸ்ரீமகள் கம்பெனி,
சென்னை-1.

கேளுங்கள் கொடுக்கப்படும்

கே: வன மகோத்சவத்தின் போது நடப்பெற்ற செடிகளில் இப்போது எத்தனை மரங்களாகி இருக்கின்றன?

ப: மொரார்ஜீ மட்டுமே வளர்ந்து படர்ந் திருக்கிறார். பஹதூர் இல்லை. ரபி இறந்து போனார். ராஜாஜி வாடிப் போனார்.

*

கே: நாய்கள் கொட்டகைகளுக்குள் அனுமதிக்கப்படுவதில்லையே?

ப: அது சரியான முன்னேற்பாடு. நாய்கள் மனிதர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் காணுமானால், மனித ஜீவன்கள் மீதுள்ள மதிப்பையெல்லாம் இழந்துவிடும்.

*

கே: பிறப்பு எப்போது 'முறைகேடானது' என்று கூறப்படுகிறது?

ப: துரதிருஷ்டம் பிடித்த அந்தத் தாய் ஏழையாயிருக்கும் போது. பணக்கார விபச்சாரிகள் அடிக்கடி லேவாதேவிக்காரர்கள்தான் அந்த விபத்துக்குக் காரணமான குற்றவாளிகள் என்று காட்டுகின்றனர்.

*

கே: காலைமுதல் மாலைவரை; வேர்வை, வேலை. இது எத்தனை காலத்திற்கு, ஐயா?

ப: ஒருநாள் நான் சூரியனுடன் ஓடி, வைகறையை எனக்கு எடுத்துக் கொள்வேன். பொறுத்திருங்கள்; என்னை நெருக்காதீர்கள்.

*

கே: ஒவ்வொரு இரவும் என் கனவில் மொரார்ஜீயைக் கையில் மதுவுள்ள கிண்ணத்தோடு காண்கிறேன்?

ப: அந்தக் கிண்ணம் சாக்ரட்டீஸ் அருந்திய ஹெம்லாக் (நஞ்சு) கிண்ணம். மொரார்ஜீ அதை நெடுங்காலமாக ஏந்தி வருகிறார்.

*

கே: சோஷலிசத்தின்மேல் ஏனிந்தத் திடீர் மோகம்?

ப: நோயாளி செத்துப் போகாத ரண சிகிச்சை எங்களால் செய்ய முடியும் என்று ரஷ்யாவிற்கும், சைனாவிற்கும் நாம் காட்ட வேண்டும்.

*

கே: மனித உறுப்புக்களில் சில ஏன் மறைவாக அழைக்கப்படுகின்றன?

ப: அவைகள் துணியால் மூடப்பட்டும், சுவற்றிற்கப்பால் வேலையும் செய்கின்றன—துணியும், சுவரும் நாகரிகத்தின் கோட்டைகளாக இருப்பதால்.

*

கே: பத்திரிகைக்காரர்கள் நாட்டை ஆள்கிறார்களா?

ப: அடுத்தவர் துப்பும் வார்த்தையைப் பொறுக்குபவன் எப்போதாவது கோழிக் கூட்டை ஆள முடியுமா?

கே: தூரக்கிழக்கு நாடுகளில் போர் தொடர்ந்து நிகழ ஏன் ஷியாங்கேய்-ஷேக் எண்ணுகிருர்?
ப: போக்கிரிகள் எல்லாம் கலகத்தை விரும்புபவர்கள்.

கே: அடுத்த பிறப்பில் தாங்கள் ஜவஹர்லாலின் மருமகனுக இருக்க விரும்புவீர்களா?
ப: இல்லை! என் மாமனுர் எவ்வளவு புகழ் பெற்றவராக இருந்தாலும் என் மனைவி என்னைக் கவனிப்பதையே நான் எதிர்பார்க்கிறேன்.

*

கே: தாங்கள் எந்த வகையான சாது?
ப: பெண் பக்தைகளுக்காகக் காத்திருக்கும், அதே பழைய வகைதான்.

*

கே: தாங்கள் காந்திஜீயின் படத்திற்கு ஒன்ருே இரண்டு மலர்களைத் தினமும் வைப்பதாகக் கேள்விப்பட்டேன்.
ப: தொங்கும் படங்களில் மலர்களைப் பாழாக்க மாட்டேன் நான். நடமாடும் படங்களுக்கு அம்மலர்களை நான் பயன்படுத்துகிறேன்.

*

கே: யாரும் என்னை நேசிப்பதில்லை?
ப: ஒரு கண்ணுடியை வாங்கிப் பாருங்கள். இன்னெருவர் உங்களை நேசிப்பதைக் காண்பீர்கள்.

*

கே: உலகின் பெரிய மணி எது?
ப: உம்முள்ளே அடிக்கிறதே அது. மக்கள் அதை மனுே சாட்சி என்றழைக்கிருர்கள்.

*

கே: செய்தித்தாள்கள் இப்போது எரிச்சலளிக்கின்றனவே?
ப: அவைகள் பூரி, பக்கோடாத் தாங்கவே உற்பத்தியாக்கப்படுகின்றன.

கே: ஜேபடித் திருடர்கள் லைசன்ஸ் பெற்ருல்?
ப: வக்கீல்களும், டாக்டர்களும் லைசன்ஸ் பெறவில்லை?

*

கே: மனைவியை விட ரேடியோவே தேவலை என்கிருர்களே. தங்கள் அபிப்பிராயம்?
ப: என்னைப் பொறுத்தவரையில் மனைவிதான் வேண்டும். சிறு பொத்தானுகிய பார்வையின் மூலம் அ. இ. ரேடியோ பாடகர்கள் அனைவரையும் விட அருமையாகக் கீதமிசைப்பாளே அவள்.

*

கே: இந்தியாவின் பிரசித்தி பெற்ற மனிதனுக நான் விரும்புகிறேன்.
ப: காங்கிரசில் சேர்ந்து பலமாகவும் அதிக நேரமும் கை தட்டும். அவர்கள் பார்த்து விட்ட உடனேயே நீர் கண்டு பிடிக்கப்பட்டு விடுவீர்.

*

கே: நேருவைப்போல ஆஜாத் ஏன் ஓய்வு பெறுவதைப் பற்றிப் பேசுவதில்லை?
ப: வேலை செய்பவன் மட்டுமே ஓய்வைப் பற்றிப் பேச முடியும். ஆஜாத் காட்சிப் பொருளாகவே பலகாலம் இருந்தவர்.

*

கே: தங்கள் மரணத்தின் பின் பம்பாய் அரசாங்கத்திற்கு எவ்வளவு மரண வரி கிடைக்கும்?
ப: ஒன்றுமேயில்லை. நான் ஒரு பேனுவைத் தவிர வேறென்று மற்றவனென்ருல் நீர் நம்ப மாட்டீர்.

*

கே: தங்கள் வீட்டில் ராட்டினத்தைக் காண முடியுமா?
ப: பழம் பொருள்களின் மியூசியமல்ல என் வீடு.

"பிலிம் இந்தியா"

Edited, Printed and Published by S. Francis at his Srimagal Press, 122, Varadamuthia ppan St., Madras-1. Phone No. 55338.



ஆடு மேய்ப்பார்-நாடு காப்பார்

பிரசுரம்

ஆர். எஸ். சுப்பையா

உயர்ந்த பதிப்பு ! அழகிய முகப்பு !!

விற்பனையாகிறது !

பாரதியார் கவிதைகள்

மகாகவி சுப்பிரமணிய பாரதியின்

தேசீய கீதங்கள், தெய்வப் பாடல்கள், பல்வகைப் பாடல்கள், முப்பெரும் பாடல்கள் ஆகிய நான்கு பாகங்களும் அடங்கியது.

648 பக்கங்கள். கலிகோ பைண்ட்

ஸ்ரீமகளின் சிறந்த பதிப்பு!

விலை ரூபாய் ஆறு

தபாற் செலவு தனி

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு.

விபரங்களுக்கு :

ஸ்ரீமகள் கம்பெனி

சென்னை-1.